மனித இனத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பது மொழியாகும். எண்ணங்களின் வெளிப்பாடு மொழியாக உருவெடுக்கிறது. எண்ணங்கள் உயரும்பொழுது பண்பாடு வளருகிறது. பண்பாடு உயரும்பொழுது மொழியும் பல வழிகளில் வளர்ச்சியை அடைகிறது. அதில் கலைநயம் கூடுகிறது. ஒருபொருளை வெளிப்படையாகத் தெரிவிக்கும்பொழுது அதில் கலைநயம் எதுவும் இருப்பதில்லை. அதையே மறைமுகமாகத் தெரிவிக்கும்பொழுது அங்கு இலக்கியம் தலைகாட்டுகிறது. இலக்கியம் நயம் மட்டுமல்ல, ஒருபொருளை மறைமுகமாகத் தெரிவிக்கும்பொழுது அதில் பல நன்மைகள் தோன்றுகின்றன. ஒருவனது குற்றத்தை வெளிப்படையாகச் சொல்லிக் காட்டினால் அவனுக்கு வெறுப்புணர்ச்சிதான் தோன்றுகிறது. அதையே மறைமுகமாகத் தெரிவிக்கும் பொழுது கேட்டவர் மனம் புண்படாமல் காக்கப்படுகிறது. மேலும் பலபேர் இருக்கும் இடத்தில் மறைமுகப்பொருள் குறிப்பிட்ட ஒருவரிடம் மட்டுமே போய்ச்சேர வாய்ப்பு இருக்கிறது. வகுப்புக்குத் தாமதமாக வரும் ஒரு மாணவனை ஆசிரியர் கோபித்துக்கொண்டால் அவனிடம் குரோத உணர்வுதான் வளரும். அதனைத் தவிர்த்து, அவர்அடுத்த வகுப்புக்கு இன்னும் அரைமணி இருக்கிறது. அதற்கு இவ்வளவு சீக்கிரம் வந்துவிட்டாயே. நூலகத்துக்குச் சென்று சற்றுப் பொழுதைக் கழித்துவிட்டு அடுத்த வகுப்புக்கு சரியான நேரத்தில் வந்துவிடு என்று கூறினால் அந்த மாணவன் தன் தவறை உணர்ந்து அடுத்தநாள் முதல் வகுப்புக்குச் சரியான நேரத்தில் வருவான். சம்ஸ்க்ருத இலக்கியத்திலிருந்து ஒரு உதாரணம் கொடுக்கலாம்.

एवं वादिनि देवर्षौ पार्श्वे पितुरधोमुखी ।
लीलाकमलपत्राणि गणयामास पार्वती ॥

(குமாரசம்பவம் - 6. 84)

பார்வதியின் தந்தை அங்கிரஸ் முனிவரிடம் தன் மகளின் திருமணத்தைப்பற்றி விவாதிக்கும் வேளையில் அதனைக் கேட்டுக்கொண்டிருந்த பார்வதி தன்கையில் இருந்த தாமரையின் இதழ்களை எண்ணத்தொடங்கினாள் என்கிறார் கவி. ஏன் அவ்வாறு எண்ணினாள் என்று நாம் எண்ணிப்பார்த்தால் அதற்குக் காரணம் அவளது

நாணமே என்பது புரியும். பார்வதி நாணம் கொண்டாள் என்ற கருத்தை வெளிப்படையாகத் தெரிவிக்காமல் நாணம்கொண்ட பெண்கள் என்ன செய்வார்களோ அதைக்கூறி சொல்லாமல் சொல்லி புரியவைக்கிறார் கவி. இதுதான் இலக்கிய நயம்.

இன்னோர் உதாரணம் கொடுப்போம். நெடுஞ்சாலையில் ஒரு விடுதி. அங்கு வந்து தங்குகிறான் ஒரு கட்டிளங்காளை. அந்த விடுதிகாப்பாளரின் மகளும் இளைஞனும் விழிகளால் இணைகிறார்கள். ஆனால் தங்கள் கருத்துக்களைப் பரிமாரிக்கொள்ளத் தயங்குகிறார்கள். இரண்டுநாட்கள் கழித்து இளைஞன் தன் பயணத்தைத் தொடரத் தயாராகிறான். அப்போது அந்தப்பெண் கூறுகிறாள் "நீ தாராளமாகச் செல்லலாம் . காட்டுவழியாகத்தான் செல்லவேண்டும். அங்கு திரிந்துகொண்டிருந்த ஒரு வெறிநாயை சமீபத்தில்தான் அங்கு வசிக்கும் சிங்கம் அடித்துக்கொன்றது. நாயைப்பற்றிய பயம் இன்றி நீ தாராளமாகச் செல்லலாம்" நாயைப்பற்றிய பயம் ஒழிந்தது என்பது உண்மை ஆனாலும் அதைக்கொன்ற சிங்கம் அங்குதான் திரிந்துகொண்டிருக்கிறது என்று தெரிந்தும் எவனாவது அந்த வழியே செல்வானா? தன் மனம்போல் தன் மனதைக் கவர்ந்தவன் அங்கிருந்து புறப்படாமல் தடுக்கிறாள் தலைவி. மறைமுகப் பொருள் அவளுக்குக் கை கொடுக்கிறது. பெற்றோரும் மற்றோரும் அவள்மேல் சந்தேகம் கொள்ளாமல் சாமர்த்தியமாகச் செயல்படுகிறாள். 'செல்' என்கிறது வெளிப்படைப்பொருள் 'செல்லாதே ' என்கிறது மறைமுகப்பொருளுக்கே மதிப்புக்கொடுத்து தன் பயணத்தை ஒத்திவைக்கிறான். சில இடங்களில் மறைமுகப்பொருள் வெளிப்படைப் பொருளை முழுமையாக விலக்கும்படி அமையும். உதாரணமாக

सुवर्णपुष्पां पृथिवीं छिन्वन्ति पुरुषास्त्रयः ।
शूरश्च कृतिविद्याश्च यश्च जानाति सेवितुम् ॥

ஒருசெயல்வீரனும், அறிஞனும், தகுந்தவர்களை அண்டிப்பிழைப்பவனும் தங்க மலர்களை அறுவடை செய்கிறார்கள் என்றால் "தங்கமலர்களை அறுவடை செய்தல்" என்ற பொருளை அடியோடு ஒதுக்கிவிட்டு "செழிப்புடன் வாழ்தல் " என்ற கருத்தினை எடுத்துக்கொள்கிறோம். இங்கு மறைமுகப்பொருள் அதிக மதிப்பெண் பெறுகிறது. மறைமுகப் பொருள் வலிமை பெற்று தன்னிகரற்று கோலோச்சும் இலக்கியப் பகுதியை த்வனி காவியம் என்கிறோம்.

இலக்கியத்திற்கு அழகூட்டும் மற்றோர் உத்தி அணிகளாகும். அந்தப் பெண்ணின் முகம் அழகாக இருக்கிறது என்றால் அது சாதாரணப் பேச்சு. அவள் முகம் நிலவு போல் விளங்குகிறது என்றால் அது உவமையுடன் சேர்ந்த இலக்கியம் 'அது நிலவுதான் ' என்றால் அங்கு உருவகம். 'அந்த நிலவு இந்த முகம்போல் இருக்கிறது ' என்றால் அது ப்ரதீபம் நிலவைப் பார்த்து முகத்தை

நினைவுகொண்டேன் என்றால் அது ஸ்மரணம். 'இது முகமா அல்லது நிலவா? ' என்றால் அது சந்தேகம். 'நிலவென்று நினைத்து சகோதர பக்ஷிகள் உன் முகத்தை நோக்கி வருகின்றன ' என்றால் அங்கு ப்ராந்திமதி அலங்காரம் இது நிலவுதான், முகமே அல்ல என்றால் அது அபஹ்னுதி வானத்தில் நிலவு, பூமியில் உன்முகம், என்றால் அங்கு திருஷ்டாந்தம், நிலவில் களங்கம் உள்ளது. களங்கமற்ற உன்முகம் நிலவினும் சிறந்தது என்றால் அது வ்யதிரேகம்.

அணிகள் கவிதைக்கு அழகு சேர்ப்பவைதான் ஆனாலும் அணிகளும் வெளிப்படைப் பொருளை அடிப்படையாகக் கொண்டவையே. ஒருசில அணிகளில் மறைமுகப் பொருளும் தோன்றலும். அப்படிப்பட்ட அணிகள் சிலவற்றை இங்கு பார்ப்போம்.

ஸமாஸோக்தி என்ற அலங்காரத்தை எடுத்துக்கொள்வோம். அதற்கான உதாரணம்

अयमैन्दीमुखं पश्य रक्तश्चुम्बति चन्द्रमाः ॥

அதோபார். ராகம் (ராகம்=சிவப்பு, ஆசை) கொண்ட சந்திரன் கிழக்கு முகத்தை முத்தமிடுகிறான்.

வெளிப்படையாகப் பார்த்தால் இது ஒரு இயற்கை வர்ணனை. நிலவு மலை உச்சியில் உதயமாகும் காட்சி. ஆனால் சந்திரன் என்ற ஆண்பால் பதம் "ஐந்த்ரீ " (கிழக்கு) என்ற பெண்பால் பதம், முகம் என்ற பதம் தொடுகிறான் என்பதற்குப் பதில் முத்தமிடுகிறான் என்று கூறியிருப்பது - இவை எல்லாம் ஒரு தலைவன் - தலைவியின் காதல் காட்சியை நம் கண் முன்னால் கொண்டுவந்து நிறுத்துகிறது. இந்த மறைமுகப் பொருள் சந்திரோதய வர்ணனைக்கு எந்தவிதத்திலும் உதவுவதாக இல்லை. எனினும் கவியின் கற்பனை வளம் சிறப்பாக அமைந்திருக்கிறது. இன்னோர் உதாரணம் பார்ப்போம்.

लब्ध्वा तव बाहुस्पर्शं यस्याः स कोऽप्युल्लासः ।
जयलक्ष्मीस्तव विरहेण भवतु मा दुर्बला ननु सा ॥

உன்னுடைய அரவணைப்பால் பரவசம் அடைந்த வெற்றித்திருமகள் உன் பிரிவால் வாடும் நிலையை என்றென்றும் அடையாமல் இருக்கட்டும் என்று ஒரு கவி தன் அரசனைப் புகழ்கிறான். அரசன் எப்பொழுதும் வெற்றிவீரனாகத் திகழவேண்டும். தோல்வியைச் சந்திக்கக்கூடாது என்பது கருத்து. ஆனால் ஒரு தலைவன்-தலைவியின் காதலும் ஊடலும் மறைமுகப் பொருளாக அங்கே சற்றே தலைகாட்டுகிறது. ஆக்ஷேபம் என்று ஒரு அணி. இங்கு ஒரு குறிப்பிட்ட ஆணை இடப்பட்டு பிறகு அது திரும்பப்பெறப்படுகிறது. ஏனெனில் அந்த ஆணையால் ஏற்படும் விளைவைக் காட்டிலும் ஒரு சிறந்த நிகழ்வு ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

இதற்கான உதாரணத்தைப் பார்ப்போம். चन्द्र सन्दर्शयात्मानमथवास्ति प्रियामुखम् ।

நிலவே, என்முன் தோன்று. பரவாயில்லை விடு. எனக்கு என் காதலியின் முகம் இருக்கிறது. இங்கு சந்திரனைக் காட்டிலும் காதலியின் முகம் அழகானது என்ற கருத்து மறைமுகப் பொருளாகத் தோன்றுகிறது.

விசேஷோக்தி என்ற அலங்காரத்தைப் பார்ப்போம். சாதாரணமாக ஒரு காரணம் இருந்தால் கூடவே காரியமும் தோன்றும். உதாரணமாக புகையிருந்தால் அங்கு நெருப்பிருக்கும். ஆனால் விசேஷோக்தியில் காரணம் மட்டுமே இருக்கும். காரியம் இருக்காது. உதாரணமாக

नमन्तमपि धीमन्तं न लङ्घयति कश्चन ।

“எவ்வளவுதான் குனிந்தபடி சென்றாலும் ஒரு சான்றோனை யாரும் தாண்டமாட்டார்கள்” இங்கு சான்றோர்களின் பணிவும் அதனால் இவர்கள் அடையும் உயர்வும் குறிப்பாக உணர்த்தப்படுகிறது.

பர்யாயோக்தி என்றோர் அலங்காரம். இதில் காரியம் குறிப்பிடப்பட்டிருக்கும். காரணம் மறைமுகப் பொருளாகத் தோன்றும். உதாரணமாக

तृणान्यङ्कुरयामास विपक्षनृपसद्मसु ।

அந்த அரசன் எதிரிகளின் அரண்மனைகளில் புல்பூண்டுகள் முளைக்கும்படி செய்தான். இதன் காரணம் என்னவென்றால் இந்த அரசன் எதிரிகளின் மாளிகைகளை இடித்து தகர்த்தான். எதிரிகள் அழிந்துவிட்டனர், அல்லது ஓடிவிட்டான். எனவே இடிபாடுகளில் புல் பூண்டுகள் முளைத்துவிட்டன.இது மறைமுகமாகத் தெரிவிக்கப்படுகிறது.

கண்ணுக்கு நேரே தெரியும் ஒன்றை மறைத்து அதனை வேறு ஒன்றாகத் தோற்றுவிப்பது அபஹ்னுதி அலங்காரம் எனப்படும். உதாரணமாக

नायं सुधांशुः किं तर्हि व्योमगङ्गासरोरुहम् ।

அது சந்திரனா? அல்ல அல்ல. அது ஆகாய கங்கையில் பூத்திருக்கும் தாமரை அல்லவா? வெளிப்படையாகச் சொல்லியிருப்பது அது நிலவல்ல என்பது. ஆனால் உட்கருத்து அதுநிலவுதான் நிலவை நிலவல்ல என்று கூறி அதற்கு ஒரு காரணமும் கற்பிக்கிறான் கவிஞன். அதில்தான் இருக்கிறது கவிதை நயம்.

மற்றோர் அலங்காரத்தை எடுத்துக்கொள்வோம். அதன் பெயர் தீபகம். இங்கு சந்தர்ப்பத்துக்கு ஒத்த ஒரு விஷயமும் சம்பந்தப்படாத ஒரு விஷயமும் சம நிலையில் வைத்து நோக்கப்படும். உதாரணமாக मेधां बुधः सुधामिन्दुः बिभर्ति वसुधां भवान् ।

சான்றோர்கள் அறிவைத் தாங்கி நிற்கின்றனர். நிலவு அமுதத்தைத் தாங்கியிருக்கிறது. அரசே நீ இந்த உலகைத் தாங்கி நிற்கிறாய்.

இங்கு அரசன் சான்றோர்கள் மற்றும் நிலவை ஒத்தவன் என்பதும். அவன் தாங்கி நிற்கும் பூமி, அறிவு மற்றும் அமுதை ஒத்தது என்பதும் மறைமுகமாகத் தெரிவிக்கப்படுகிறது. இதற்கு இன்னுமோர் உதாரணம் பார்ப்போம்.

कृपणानां धनं नागानां फणमणिः केसराणि सिंहानाम् ।
कुलपलिकानां च स्तनौ कुतः स्पृश्यन्तेऽमृतानाम् ॥

கஞ்சமகாப்பிரபுக்களின் செல்வம், பாம்புகள் தலையில் தாங்கி நிற்கும் மணிகள், சிங்கத்தின் பிடரி, இவற்றின் சொந்தக்காரர்கள் உயிரோடு இருக்கும்பொழுது அவற்றை யாரால் தொடமுடியும்? இங்கு கஞ்சர்கள் பாம்பை ஒத்தவர்கள் போன்ற கருத்துக்கள் மறைமுகமாகத் தெரிவிக்கப்படுகின்றன.

எதையுமே மறைமுகமாகச் சொன்னால் அதில் ஒரு அழகு இருக்கிறது என்று பார்த்தோம். ஏற்கனவே அழகாகச் சொல்லப்படும் ஒரு அலங்காரத்தை மறைமுகமாகத் தெரிவித்தால் அழகுக்கு அழகு சேர்கிறது. சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தது போல், வ்யதிரேகம் என்று ஒரு அலங்காரம். அதன் விசேஷம் என்னவென்று பார்ப்போம். சாதாரணமாக உபமேயத்தைவிட உபமானம் சிறந்ததாக இருக்கும். உதாரணமாக ஒரு பெரிய ஏரியைப் பார்த்து இது கடல்போல் இருக்கிறது என்கிறோம். உபமேயமான ஏரியைக் காட்டிலும் உபமானமான கடல் பல்லாயிரக்கணக்கான மடங்கு பெரிது. ஆனால் வ்யதிரேகத்தில் உபமானத்தைக் காட்டிலும் உபமேயத்ததைச் சிறந்ததாகக் காட்டுவான் கவி. உதாரணமாக

शैला इव उन्नताः सन्तः किन्तु प्रकृतिकोमलाः ।

மலையைப்போல் உயர்ந்தவர்கள் சான்றோர். ஆனால் அவர்கள் மனமோ மிகமிக மென்மையானது என்னும்போது அங்கு உபமேயத்தில் ஒரு விசேஷம் தெரிகிறது. உபமேயமான சான்றோரும் உபமானமான மலையும் "உயர்வு" என்ற அளவில் சமம்தான். ஆனால் கடினமான பாறைகளைக் கொண்ட ஜடவஸ்துவான மலையைக் காட்டிலும் மென்மையான உணர்வுகொண்ட சான்றோர் சிறந்தவர்கள் என்று இங்கு காட்டப்படுகிறது. இது வ்யதிரேகம். இதே அலங்காரம் மறைமுகமாகத் தெரிவிக்கப்படும் ஓர் இடத்தைப் பார்ப்போம்.

दिशि मन्दायते तेजः दक्षिणस्यां रवेरपि ।
तस्यामेव रघोः पाण्ड्याः प्रतापं न विषेहिरे ॥

தென்திசையில் பாண்டிய அரசன்முன் (பயந்து) ஆதவன் கூட மந்தமாகப் பிரதாபத்தை தாங்கமுடியாமல் போயினர்.

பாண்டியனைக் கண்டு சூரியனே பயந்தான் என்று சொல்லாமல் சொன்ன கவி, அதே பாண்டியன் ரகுவின் வீரத்தைத் தாங்க முடியவில்லை என்று கூறி சூரியனைக் காட்டிலும் ரகுவின் பிரதாபம் உயர்ந்தது என்பதை மறைமுகமாகத் தெரிவிக்கிறார். சூரியன் உபமானப் பொருள். அதைக் காட்டிலும் உபமேயமான ரகு உயர்ந்தவன் என்ற கருத்தினால் வெளிப்படும் வ்யதிரேக அலங்காரமே இங்கு மறைபொருளாக விளங்குகிறது. இதனை வ்யதிரேக த்வனி என்று கூறலாம். மற்றோர் செய்யுளைப் பார்ப்போம்.

लावण्यकान्तिपरिपूरितदिङ्मुखेऽस्मिन् ।
स्मरेऽधुना तव मुखे तरलायताक्षि ।
क्षोभं यदेति न मनागपि तेन मन्ये
सुव्यक्तमेव जलराशिरयं पयोधिः ॥

நீ சிரிக்கும்பொழுது எல்லா திசைகளிலும் உன் அழகின் ஒளி பரவும்பொழுது இந்த கடல் பொங்காமல் இருப்பதேன்? அது வெறும் நீர்ப்பரப்பு தானே.

நிலவைக் கண்டால் கடல் பொங்கும். இங்கு தலைவியின் முகம் நிலவுதான் என்று சொல்லாமல் சொல்லுவதால் உருவக அணி மறை பொருளாகத் தோன்றுகிறது.

வேறு ஒரு அலங்காரத்வனியைக் காண்போம்.

स वक्तुमखिलान् शक्तो हयग्रीवाद्रितान् गुणान् ।
योऽम्बकुम्भः परिच्छेदं ज्ञातुं शक्तो महोदधेः ॥

ஹயக்ரீவரின் குணநலன்களை ஒரே ஒருவர்தான் எடுத்துச் சொல்லமுடியம். யாரென்றால் எவர் பானையால் மொண்டு கடலை அளந்தாரோ அவர்தான் (அகத்தியர்)

ஆசேஷேப அலங்காரத்தை ஏற்கனவே பார்த்திருக்கிறோம். அது இங்கு மறைபொருளாகத் தோன்றுகிறது. வெளிப்படையாகத் தெரிவது ஆதிசயோக்தி அலங்காரம், மற்றோர் அலங்காரத்வனியைக் காண்போம்.

दैवायत्ते तु फले किं क्रियतां एतवत् पुनरभणामः ।
रक्ताशोकपल्लवाः पल्लवानामन्येषां न सदृशाः ॥

பழுப்பது என்பது இயற்கையின் செயல். அதற்கு நாம் என்ன செய்யலாம்? அசோகமரத்தின் கொழுந்துகள் மற்ற கொழுந்துகளைப்போல் அல்ல (குறிப்பு. அசோகமரத்தில் பழங்கள் தோன்றுவதில்லை)

இதனால் நமக்கு மறைமுகமாகத் தெரிவிப்பது "ஒரு காரியத்தின் பலன்கள் கைகூடுவது என்பது தெய்வத்தின் செயல்" என்ற பொழுது வாக்கியம். எனவே நமக்கு இங்கு அர்த்தாந்தரநியாஸம் என்ற அலங்காரம் மறைபொருளாகத் தோன்றுகிறது. (அர்த்தாந்திர நியாஸம்: உதாரணம்.

हनुमानब्धिमतरत् । दुष्करं किं महात्मनाम् ।

அனுமான் கடலைத் தாண்டினார். மஹான்களுக்கு எதுதான் சாத்தியமில்லை?)

உத்ப்ரேக்ஷை என்ற அலங்காரம் எப்படி அலங்கார த்வனியாகத் தோன்றலாம் என்பதற்கு ஓர் உதாரணம் பாப்போம்.

चन्दनासक्तभुजग निःश्वासानिलमूर्च्छितः ।
मूर्च्छयत्येष पथिकान्मधौ मलयमारुतः ॥

சந்தனமரத்தை சுற்றியிருக்கும் பாம்புகளின் மூச்சுக்காற்றைத் தாங்கிவிடுவதால் தென்றல் காற்று வழிப்போக்கர்களுக்கு மூர்ச்சையை ஏற்படுத்துகிறது என்பது வெளிப்படைப் பொருள்.

மனைவியின் பிரிவால் வாடும் வழிப்போக்கர்களுக்கு தென்றல் காற்று துன்பத்தை அதிகப்படுத்துவதால் அவர்கள் மூர்ச்சித்து விழுகிறார்கள் என்பது மறைமுகப் பொருள். இந்த மறைமுகப் பொருள் உத்ப்ரேக்ஷை என்ற அலங்காரம். எனவே இது உத்ப்ரேக்ஷையில் ஒரு நடக்கமுடியாத விஷயம் நடந்தது போல கற்பனையாகக் காட்டப்படும். காதலன் தன் காதலியிடம் "உன் முக அழகைப் பெற சந்திரனும் தாமரையும் போட்டியிடுகின்றனர்" என்றால் அது உத்ப்ரேக்ஷை.

இவ்வாறு ரசிகத்தன்மை கொண்ட இலக்கிய ஆர்வலர்களுக்கு ரசிப்பதற்கு கவிதையில் ஏராளமான விஷயங்கள் உண்டு. அப்படிப்பட்ட நுணுக்கமான விஷயங்களை அறிந்து அனுபவித்தால் காவியச்சுவை மனிதனை தனிப்பட்டதோர் உலகத்திற்கு அழைத்துச்சென்று ஆனந்தக்கடலில் ஆழ்த்தும். அப்படிப்பட்ட காவியச்சுவை பிரம்மானந்தத்திற்கு ஒப்பானது என்று சான்றோர் கூறுவர்.

Georgedevacaritam G. V. Padmanabha Sastri - A Study

Dr.V.M.Ananthanarayanan,
Reader in Sanskrit,
National College, Trichirapalli-1.

The authors on the History of Sanskrit Literature have noticed works of historical importance and have classified them under the Historical Mahakavyas and Prose Literature. No specific mention is made about the historical works that lay beyond the native rulers. But there arose some original contributions to the literature, even during the reign of the Mughals and the British.

To mention a few, P. C. Ramarya, narrates the life of Ghazni Mohammedcarita (Sahardaya, Sanskrit Journal, Madras, Vol. XVIII). Birudavali is an alliterative poem in praise of Emperor Jehangir {Calcutta Sanskrit College collections (1903), 95}. Akbarnamah is a Sanskrit Translation of the Persian work, of the same name, relating to the history of Emperor Akbar {CSC (1904), No.5} Lakshmi pati, son of Visvarupa and grandson of Jayadeva Worte Avadullahcarita on the life of king-maker Abdullah, who lived in the 18th Century {CSC, 1904), No. 6}. Rudra of the 16th Century composed Jehangirshahcarita, of which only fragments have been discoverd in Nasik.

Itihasatamomani, gives an account of the conquest of India by the English and was composed in 1813 AD. CSC, IV, 183. Angrejacandrika by Vinayabhatta composed in 1801, deals with the British dominion in India {Oxf. 134}. Rajangalamahodyana of Ramasvami Raja, Anglasamrajya of Rajarajavarma and Angladirajyasvagata of Paravastu Rangacarya desdribe the history of English Rule in India. The Vijayinikavya of Vidyalankarabhattacarya, describes the reign of Queen Victoria. Delhimahotsavakavya of Srinivasavidyalankara, describes the Delhi Durbar. Jarjdevacarita, otherwise known as Rajabhaktipradipa of G. V. Padmanabhasastri describes the rule of Queen Victoria and subsequently specialises on the life and coronation of King George V. The present paper aims at analysing the sailent features of this work, Jarjdevacarita.

The work has been published at Sri Vanivilas Press, Srirangam in the year 1913. It has 15 cantos, consisting of about 1200 verses in different metres. The work is dedicated to the memory of Her Highness the Maharani Appalakondayamba, Maharaja Kumarika Saheba of Vizianagaram and Maharani Madhoghodh of Rewa. In the Preface of the book G. V. Apparow of Vizianagaram Fort, states that the attended

a breakfast part at Ootacamund in the summer of 1912 and the chief attraction there was the recital of this poem by the talented author. He was struck with the merits of the poem and brought it to the notice of Her Highness the late Maharani Maharaja-Kumarikasaheba of Vijayanagaram. He read out some cantos of the poem to her, snd she was so pleased with it that she undertook to print it. It was her intention to present a copy of this poem to His Excellency Lord Pentland when he visited Vijayanagaram to open the water works, which owe their existence to her princely munificence. But she was not spared to fulfil her intention.

After her death, Maharani Lalitha Kumari Devi felt it a duty to the memory of the late Maharaja to carry out her intentions with regard to this poem and arranged for printing it. The author claims in his introduction that he attempted this Mahakavya with the intention of recording a real incident derived from the then ruler King George V, with easy metrical passaes for the understanding of the beginners. He admits that he has added some descriptions suited to the occasion for designating this as a Mahakavya.

We find the details about the author, G.V.Padmanabha Sastri, at the end of the work. In 6 verses he states that he composed his work in the year of Paritapi, Magha month, 14th day of the lunar cycle after 5014 years of the Kaliyuga have elapsed. It was Sivaratri, Thursday when the star is Magha. The author identifies him as born from Kalpathi, Palghat. His parents are Vaidyanatha and Syama. The purpose of composing this work is to teach Sanskrit to the people of Kerala. He states that he is the headmaster of St. Joseph's High School, Tiruchirapalli. He affirms that he is the author of Bhrungaduta also.

Summary:

In the **first canto**, the poet salutes Lord Vignesvara, Paramesvara and Goddess Sarasvati. He prays for the prosperity of the Emperor. He indicates the name of the person, by whom he was initiated to write this work. Then he describes the beauty and qualities of Queen Victoria. Then he proceeds to describe her accession to the throne of England. Then he switches to the Indian scenario. He describes the Sepoy Mutiny (the author does not refer to it as the first war of independance, as is popularly known, since he is a loyalist to the British regime). The Queen assumes direct soverignity of India and the royal proclamation is made. The first canto contains 57 verses and is named "Victoriaprabhavavarnanam".

Canto II describes the state of the Kingdom during her 60 years of regime. She deputes excellent statesmen to administer India. Kali envies the prosperity of the Queen's regime and instigates Boer War, famine, plague, etc. by which she looses her heart and ascends to Indraloka. This contains 89 verses.

The **Third Canto** begins with the lamentation of Edward VII, at the demise of beloved mother. Then at the advice of the Royal advisors, he is coronated. He appoints Lord Curzon as Viceroy of India. Lord Curzon brings about stubborn reforms. The partition of Bengal and the subsequent dissatisfaction of the subjects results in the public unrest. The Indian news papers convey their opinion on the handling of the situation by the Viceroy. The Throne intervenes and Lord Curzon departs and Lord Minto comes in his place. The Indian councils are reformed and repressive measures are taken to handle the situation. This entitled Pitrrajyabharanakrama and contains 71 verses.

The **fourth canto** is set totally in Britain. The author indulges in using his descriptive powers. Queen Alexandra's beauty and pregnancy are described. Prince George is born. There is a description of his boyhood and his apprenticeship in the Admiralty. The Prince meets Mary. The poet finds abundant opportunity to describe her beauty and their wedding. This canto is entitled *"Jarjdevaprabhava-vivahanuvarnanam,* having 90 verses.

Prince George and his spouse visit India. The post describes the Indian forests as seen by the Prince. The Prince accepts the hospitality rendered by the native states. He returns to England and communicates his impression of Indian states and the social unrest to his father Edward the VII. These find a place in the **Canto V**. This is entitled *"Jarjdevabharatavanvilasanuvarnanam"* containing 68 verses.

Canto VI is devoted to the activities of Prince George. He helps his father in his administration. As a Royal representative he visits Spain to attend the marriage of the Spanish King. He also visits Norway for the coronation of the King of Norway. He also makes other colonial tours. The poet continues to describe his daily routine and his special attachment to the suffering and diseased. Then the death of Edward VII brings down a great grief. The poet describes the Royal Funeral. This chapter is given the title *" Jarjdevasya rajyapraptih"* in 60 verses.

Canto VII describes the grief of Prince George. He communicates the same to the Lord Mayor. The country for the coronation of George. It is celebrated with pomp and glory at the Westminister Abbey in the presence of the Royal representatives and select subjects drawn from various parts of the world and the British colonies. Prince George becomes the Emperor George V. Jarjdevasya Angladesa pattabhisekah is the title given to this canto. It contains 75 verses.

Lord Hardinge is deputed at the Viceroy for India to prepare for the King's coronation in India. He writes a letter to Lord Crewe. Then there is a description of a

short history of Delhi and its rulers starting from Pandava-s to Bahadur shah Zafar, the last King of the Moghul Dynasty. The subjects request the Emperor to crowm him at Delhi and to revoke the partition and to establish a new provice at Behar. Delhi gets prepared for the coronation under the stewardship of Sir J.Hewett. There is also a description of the adornments at Delhi. This forms the subject matter of **Canto VIII**. *Dillyalankaranaprakara* is the title for this canto which contains 123 verses.

The Emperor George V and Queen Mary arrive with their retinue. A big reception is accorded to the Royal couple at Gibralter, Port Said and Aden. Emperor George describes the beauty of Bombay to his Queen before reaching Bombay harbour On their arrival, Lord Hardinge receives them. The Royal party alights at the Apollo bunder. Sir P.M.Mehta presents the welcome address. As a mark of honour, pearls are showered on the Royal Couple. The poet finds ample scope to describe the event and his talent of descriptive power is exposed in this **Canto IX.** In 81 verses, this canto is named as *Mumbaprasthanavarnanam.*

The episode of **Canto X** is centered on Delhi. Lord Hardinge departs to Delhi. He assembles all the chiefs, Raja-s and nobles at Delhi. Sir J.Howett represents about preparations for the Coronation. A rehearsal of the Coronation is conducted at the Coronation Durbar. The Royal Couple enter the city of Delhi. The Emperor addresses his subjects, which is otherwise known as the Delhi Municipal Address. The various Maharaja-s of India and the dignitaries are introduced to the Royal pair. This canto contains 62 verses and is named *Jarjdevasya dillipravesah.*

Canto XI is the continuation of the previous one, wherein there is a detailed description of the Kings and their provinces, introduced to the Emperor. Distinguished among them are the Nizam of Hyderabad, Ithe Gaekwar of Baroda, the Maharaja of Mysore, Travancore, Nepal, Kashmir. Jeypore, Cochin and Benaras. This chapter in 111 verses is aptly named as *Hardinjkrta bharata mandalesvara varnanam.*

A state procession is arranged for the Emperor and his consort. He is presented the svagatapatrika. The Emperor spends the night there. Court Bards, wake the Emperor in the traditional manner. We find the description of early morning also. Thus the **Canto XII** in 78 verses, entitled *Pattabhiseka-yatra-samagri-nirupanam,* is concluded.

Canto XIII describes the actual Durbar and the Coronation. The Hindu mode of coronation is performed. His Majesty addresses the gathering where in several favours are announced. Then the poet praises the Emperor by five verses, set in a different metre. This chapter is entitled *Jarjdevasya dillisamrajya pattabhiseka kramanuvarnanam,* in 124 verses.

Canto XIV opens with a description of the Royal Dinner party. The illuminations and fireworks are then described. His Majesty departs to Nepal and Her Highness to Agra. The Emperor engages himself in hunting. The Majesties meet at Calcutta. A Warm welcome is accorded to the *Jarjdevasya mrgayadyanuvarrnanam* is the title of this canto, in 61 verses.

The Majesties leave for thier motherland. We find a desciption of London herein. Lord Hardinge is honoured for his valuable services. The voyage of SS Madina, carrying the royal couple is narrated. The night at Gibralter finds a description. We also find a description of moonrise. The ship arrives ar Portsmouth. Queen Alexandra welcomes her son and daughter-in-law. The Royal Retinue depart to London wherein they participate in a procession. Lord Mayor addresses at the Town Hall on the Digvijaya of the Emperor. The Royal Couple happily retire to their palace. This forms the subject matter of **Canto XV.** *Jarjdevasya svadesayatranuvarnanam* is the title of this canto which has 66 verses.

Conclusion:

The book, though a small in size, is not slender by its subject. It gives a true account of the events, from the point of view of a loyal subject. The author has utilised every opportunity to describe the events to suit the requirements of a Mahakavya. He rarely draws on his imagination for facts but follows history with a fidelity unknown to the poets of the old school. Though the poet is not an English scholar, he is imbued with western ideas. And no wonder, when he is an intimate friend of Rao Bahadur CV Muniswamy Aiyar, to whose appreciative encouragement, one owes the composition of this poem.

****

Origin and Development of Samskrita Sahitya

Dr. C. S. Radhakrishnan,

Reader in Sanskrit,
R. K. M. Vivekananda College.
Chennai-4

The field of rhotorics generally called as Alankarasastra, can be traced to the vedas themselves. Though the term 'Sahitya' came to be used much later, by Bhamaha, who defined kavya as a togetherness of 'Sabda and Artha (शब्दार्थयोः सहितयोः भावः साहित्यं) all the elements which are integral part of poetry are very much present in the Vedic Literature. Though Alankara Sastra as a separate branch did not take shape during that period, many later figures of speech are present in the Vedic lore. None can deny the presence of the four constituents of Upama or Simile, such as the Upameya, Upamana and Sadharana dharma and the Upamavacaka Sabda in the following stanza of the Narayana Sukta.

तस्य मध्ये वह्निशिखा अणीयोर्ध्वा व्यवस्थितः ।
नीलतोयदमध्यस्थाद्विद्युल्लेखेव भास्वरा ।
नीवारशूकवत् तन्वी पीता भास्वत्यणूपमा ।

It is not वह्निः that in compared to विद्युल्लेखा but the वह्निशिखा। One can clearly diseem have that even the gender factor in comparison has been taken care of. Many hymns will fit into the definition of Simile if only one were to apply them on the Vedic expressions.

Rupaka or Metaphor is also present in abundance. Even a later sub-division called the परम्परितरूपकं can be clearly seen in the follwing verses of the Kathopanishad:

आत्मानं रथिनं विद्धि शरीरं रथमेव तु ।
बुद्धिं तु सारथिं विद्धि मनः प्रग्रहमेव च ॥
इन्द्रियाणि हयानाहुः विषयान् तेपु गोचरान् ।
आत्मेन्द्रियमनोयुक्तं भोक्तेत्याहुर्मनीषिणः ॥

Even a figure of speech such as परिकरः which joined the growing list of Alankaras, much later, can be traced to yet another verse of Kathopanishad:

पीतोदकाः जग्धतृणा दुग्धदोहा निरिन्द्रियाः ।
अनन्दा नाम ते लोकाः तान् स गच्छति ता ददत् ॥

Instances are, indeed many and manifold to show that the Vedas are the fertile ground for the origin and development of Sahitya. But, for all practical purposes, we consider the Ramayana as the Adikavya and Sage Valmiki as the Adikavi. A question will naturally arise in our mind whether the epic is called the first poetry because it is composed by the Adikavi or the poet is called so because he wrote the Adikavya. Such a standpoint will suffer from the fallacy of 'mutual dependency' (अन्योन्याश्रय) It is just like 'the tree from the seed' or vice-verse. But if we probe into it, we will find that it was poetry first and then the poet. For, after pronouncing the curse on the hunter who felled down the male of the duo of Kravunca birds, the sage delibrates on that incidence and subsequently realises that the suge of pathos in his mind, found expression in poetic metre.

क्रौश्चद्वन्द्ववियोगोत्थः शोकः श्लोकत्वमागतः

All the aspects which account for a fullfledged Sahitya, are present in his uttrance, wonders Valmiki:

पादबद्धः अक्षरसमः तन्त्रीलयसमन्वितः ।
शोकार्तस्य प्रवृत्तो मे श्लोको भवतु नान्यथा ॥ (Balakanda-II.18)

A kavya, in general has as its body, the Sabda and Artha, with Rasa being the most important aspect, subsequently enhanced by the factors such as Guna, Riti, Alankara and Vrttis:

रसप्रधानाः शब्दार्थाः गुणालङ्कारवृत्तयः ।
रीतयश्च इयती शास्त्रप्रमेयं काव्यपद्धतिः ॥

Each and every factor mentioned in this Sloka, is said tobe present in Valmiki's composition. For instance may be noted, the following verses from the epic:

a) चकार चरितं कृत्स्नं **विचित्रपदं** आप्तवान् । (Balakanda, 4-1)

b) **काव्यं** रामायणं कृत्स्नं सीतायाश्चरितं महत् ।
पौलस्त्यवधमित्येव चकार चरितव्रतः ॥ (Balakanda, 4-7)

c) अहो गीतस्य माधुर्यं **श्लोकानां** च विशेषतः ।
चिरनिर्वृत्तमप्येतत् प्रत्यक्षमिव दर्शितम् ॥ (Balakanda, 4-17)

d) आश्चर्यमिदमाख्यानं मुनिना सम्प्रकीर्तितं ।
परं कवीनामाधारं समाप्तं च यथाक्रमम् ॥ (Balakanda, 4-26)

Rasa undoubtedly is the most predominent factor in Sahitya. It is regarded as the very life of poetry. A kavya can accomodate many or even all the Rasas, Whatever

be their number, eight or nine. But only one Rasa is to the "Angi" rasa or the main Sentiment, says the renowned critic Anandavardhana. According to him, it is the Karunna Rasa which is the main Sentiment in the first epic. The Soka gave birth the poetry and it runs as the undercurrent and finally culminates in the tragic events of the Uttarakanda Valmiki himself mentions many Rasas by name:

हास्यशृङ्गारकरुणवीररौद्रभयानकैः ।
बीभत्सादिरसैर्युक्तं काव्यमेतदगायताम् ॥ (Balakanda -IV - 9)

It is said that Sangita and Sahitya are the two breasts of Saraswati, the Goddess of Speech:

सङ्गीतमथ साहित्यं सरस्वत्याः स्तनद्वयम् ।

What is implies is that these two branches of knowledge are very dear and close to her heart. While we have clearly seen how Sahitya took definite shape in the epic, its suitability for musical renduring is asserted by Valmiki himself. In fact, Kusa and Lava, to whom Valmiki taught the Ramayana, gave a musical renduring of the vast epic. Valmiki himself says that his poem is endowed with the best features for a sweet musical narration, consistency of the three patterns of rhythym, the slow, medium and fast, whose the seven notes, the saptasvara have been made use of and well suited for the accompaniment of stringed musical insturments like the flute.

पाठ्ये गेये च मधुरं प्रमाणैस्त्रिभिरन्वितम् ।
जातिभिस्सप्तभिर्बद्धं तन्त्रीलयसमन्वितम् ॥ (Balakanda, 4-8)

The prophecy of Lord Brahma that the Ramayana will be very popular in the world, ever and now, is proceeded by his own observatioon that it is not only the content of the story but also the expression conched in the most charming verses:

न ते वागनृता काव्ये काचिदत्र भविष्यति ।
कुरु रामकथां पुण्यां श्लोकबद्धाः मनोरमाः ॥ (Balakanda, 2-36)

The Ramayana, thus marks the line of demarkation for not only the consolidation of Sahitya but also the fertile ground which enabled the harvesting of many a theme for the later works comprising the Mahakavyas, Minor lyrics, dramas, Campus, Gadyas and every conceivable genure which the vast Sanskrit literature is enriched with. The epic has played a very significant role in the development of Samskrita Sahitya.

ஸம்ஸ்க்ருத நாடகங்களின் சிறப்பு

டாக்டர் சங்கேந்தி **ஸ்ரீ. முத்து,**
விரிவுரையாளர்,
ஸம்ஸ்க்ருத பிரிவு,
விவேகானந்த கல்லூரி, சென்னை

முன்னுரை

ஸம்ஸ்க்ருத இலக்கியத்தில் வேதங்களைப் பற்றியும் அதன் உட்பிரிவுகளான பிராம்மணங்களையும், உபநிஷத்துக்களையும், வேதாங்கங்களான சிக்ஷை, சந்தஸ், நிருத்தம், ஜ்யோதிஷம், கல்பம், வ்யாகரணம் (பாணினி), பூர்வமீமாம்ஸை, உத்தரமீமாம்ஸை, வேதாந்தங்கள், புராணங்கள் ஆகிய அனைத்தையும் பேசிய பிறகே இதிஹாஸங்கள் என்று வழங்கப்படும் ஸம்ஸ்க்ருத காவியங்களைப் பற்றி விரிவாக எடுத்துரைக்கிறார்கள். பாரததேசத்திலேயே முதல் காவியம் (ஆதி காவியம்) வால்மீகியால் இயற்றப்பட்ட இராமாயணம் என்பது அனைவருக்கும் தெரிந்தது. இதனை தொடர்ந்தது வியாசரால் இயற்றப்பட்ட மஹாபாரதம். இந்த இரு காவியங்களை முக்கியமாகக்கொண்டு இதில் வரும் கதைகளை சுருக்கமாகவும் , சாரமாகவும், சிறப்பாகவும் எடுத்துக்கொண்டு ஸம்ஸ்க்ருத கவிகள் தங்களுடைய திறமையை தனது காவியத்தில் முத்திரை பதித்தனர் என்று கூறலாம். ஏனெனில் கவிகளைப் பற்றி விவரிக்கையில் உவமைக்குப் பெயர் பெற்றவர் காளிதாசர் என்றும், அர்த்தத்தை செம்மையாக்கியவர் பாரவி என்றும், பதங்களை லலிதமாக உபயோகிப்பதில் தண்டி சிறந்தவர் என்றும் கூறியுள்ளனர்.

उपमा कालिदासस्य भारवेरर्थगौरवम् । दण्डिनः पदलालित्यं माघे सन्ति त्रयो गुणाः ॥

காவியத்தின் பொதுத்தன்மை

காவியங்களைப் படிக்கும்போதும், அதை நடிக்கும்போதும் பார்ப்பவர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துவதே காவியம் என்பதாகும். இம்மகிழ்ச்சி காவியத்தின் சிறு பகுதியை மட்டும் படிப்பதாலும், பார்ப்பதாலும் ஏற்படாது. இங்கு மகிழ்ச்சி உண்டாகுவதற்கு காரணம் அந்நூலில் வர்ணிக்கப்படும் கதாநாயகன், கதாநாயகியினுடன் இரண்டறக்கலப்பதே ஆகும். இதையே ஸம்ஸ்க்ருதத்தில் தன்மயத்வம் அடைதல் என்பர். ஸம்ஸ்க்ருத காவியங்கள் (நூல்கள்) மக்களின் வாழ்க்கை நெறியை பின்பற்றியும், கூறுவோன், கூறப்படுவோன், கூறப்படும் பொருள் ஆகியவற்றை பின்பற்றி கவிகளால் இயற்றப்படுவதால் அனைவராலும் வரவேற்கப்பட்டன. இதற்கு முக்கிய காரணங்களும் சொல்லப்படுகின்றன. கி.பி. 850-900 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கவி ஆனந்தவர்த்தனர் காவியங்கள் வ்யங்கியப் பொருட்களில் சிறந்து விளங்க

வேண்டும் என்று தனது கூற்றை வெளியிட்டு த்வன்யாலோகம் (தொனிவிளக்கு) என்ற நூலையும் இயற்றினார். இந்நூலில் தொனி என்பது வஸ்துதொனி அணித்தொனி, ரஸத்தொனி சிறிதும் பாதிக்காமல் இருத்தல் வேண்டும் என்று கூறினார். இங்கு நாம் தெரிந்துகொள்ள வேண்டியது காவியத்தை இயற்றும்போது ரஸத்தைக் கெடுக்கும் சரித்திரப்பகுதியை நீக்கியவும், ரஸத்தை மெருகூட்டும் பகுதியை வளர்த்தும் , அதாவது அங்கரஸத்தை வளத்தும், அங்கரஸத்தை குறுக்கியம் சொல்லவேண்டும். இவ்வாறு காவியத்தை இயற்றுங்கால் அக்காவியம் சிறந்து விளங்கும்.

காவியத்தின் வகைகள்

காவியம் என்ற சொல் ஸம்ஸ்க்ருதத்தில் சிரவ்ய காவியத்தையே (பாட்டு வடிவில் இயற்றப்பட்டதையே) குறிக்கும். இங்கு சில காவியங்கள் முழுவதும் பத்யமாகவும் (பாட்டு வடிவிலும்) , சில காவியங்கள் கத்யமாகவும் (உரைநடை வடிவில்), சில காவியங்கள் கத்யம், பத்யம் இரண்டும் கலந்தனவாக சம்பூ காவ்யம் என்ற பெயரிலும் (Mixed - Poetry & Prose) காணப்படுகின்றன. பொதுவாக ஸம்ஸ்க்ருதத்தில் ச்ரவ்ய காவ்யம் (Poetry), த்ருச்ய காவ்யம் (Drama) என இரண்டு பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம். பழங்காலத்தில் ச்ரவ்யம், த்ருச்யம் என்ற இருவகை மட்டுமே காணப்பட்டன. அதனை தொடர்ந்து கவிகளின் படைப்புகள் புதியமுறையில் (பாட்டையும், உரைநடையையும் சேர்ந்து) இயற்றப்பட்டதால் அதற்கு சம்பூ எனவும் பெயரிட்டனர். இவ்வகையில் த்ருச்யகாவ்யம் (நாடகம்) என்பதை இந்த ஆய்வேட்டில் காண்போம்.

நாடகத்தின் உற்பத்தி

இப்பகுதியை ஸம்ஸ்க்ருத வல்லுநர்கள் த்ருச்யகாவ்யம், ரூபகம் என்றும் வழங்குவார்கள். இந்த நாடகத்தின் உற்பத்தியையும், சிறப்பையும் பற்றி கூறும் பழமையான நூல் பரதநாட்டிய சாஸ்த்திரம். மேல்நாட்டு அறிஞர் A. B. Keith அவர்களின் கொள்கைப்படி கி. பி. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்னர் இந்நூல் இயற்றப்பட்டிருக்கும் என்பதாகும். ஆனால் கி. மு. இரண்டாம் நூற்றாண்டிற்கு முன் தமிழ் தொல்காப்பியத்திலுள்ள மெய்ப்பாட்டியற் சூத்திரங்களில் பல நாட்டிய சாஸ்திரத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டனவாகத் தோன்றுகிறது என்று தொல்காப்பியத்தின் சொல்லதிகாரத்தை மொழிபெயர்த்துள்ள நம் நாட்டு அறிஞர் பி. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி அவர்கள் கூறியுள்ளார். முடிவாக நாட்டிய சாஸ்த்திரம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்னரே இருந்திருக்கவேண்டும் என்பது விமர்சகர்களின் கருத்தாகும். இந்த நாட்டியசாஸ்திரம் வேதத்திலுள்ளச் செய்திகளை கண்ணிற்கும், காதிற்கும் மற்றும் அனைவருக்கும் ஆனந்தத்தைத் தருவதாக இயற்றவேண்டும் என்பதாக கருதி பிரம்மாவை வேண்டினர்.

महेन्द्रप्रमुखैर्देवैरुक्तः किल पितामहः । क्रीडनीयमिच्छामो दृश्यं श्रव्यं च यद्भवेत् ॥
न वेदव्यवहारोऽयं संश्राव्यः शूद्रजातिषु । तस्मात् सृजापरं वेदं पञ्चमं सार्ववर्णिकम् ॥

(नाट्यशास्त्रम् १,११-१२)

பிரம்மாவும் ருக்வேதத்திலிருந்து பொருட்களையும், ஸாம வேதத்திலிருந்து கானங்களையும், யஜுர்வேதத்திலிருந்து அபிநயங்களையும், அதர்வண வேதத்திலிருந்து ரஸங்களையும் எடுத்து அதற்கு நாட்யவேதம் என்று பெயரிட்டு தேவர்களை நடிக்கும்படி கூறினார். தேவர்களால் முடியாமல் போனதால் பரத முனிவரை அவரது நூறு புதல்வர்களைக்கொண்டு நடிக்கும்படி பிரம்மன் கட்டளையிட்டார். முதன்முதலில் பரதரால் பிரம்மாவின் எதிரில் அம்ருதபந்தனம் நடித்துக் காண்பிக்கப்பட்டது.

ततोऽस्म्युक्तो भगवता योजयामृतबन्धनम् । (नाट्यशास्त्रम् ४, २)

இரண்டாவதாக த்ரிபுரதாகம் சிவபிரானின் முன்னர் நடித்துக் காண்பிக்கப்பட்டது.

तथा त्रिपुरदाहस्य डिमसंज्ञः प्रयोजितः । (नाट्यशास्त्रम् ४, १०)
महादेवश्च सुप्रीतः पितामहमथाब्रवीत् ॥(नाट्यशास्त्रम् ४,११)

நாட்டியசாஸ்த்ரத்தின்படி அபிநயங்கள்,ஆங்கிகம், வாசிகம், ஆஹார்யம், ஸாத்விகம் என்பதாக நான்கு வகைப்படும். தர்மீ-நாட்டியதர்மீ, லோகதர்மீ எனவும், வ்ருத்தி-கைஸிகீ, ஆரபடீ, ஸாத்வதீ, பாரதீ எனவும், ரஸத்தின் ஸ்வரூபங்கள் விரிவாகவும், உபமை,ரூபகம், தீபகம், யமகம் ஆகிய அலங்காரங்களும், ரஸங்களும், காவியதோஷங்கள் பத்தும், காவியகுணங்கள் பத்தும், நாடகத்தின் ஸந்திகள் ஐந்தும், என்று பத்துவகை நாடகங்களையும் நாயிகைகள் எட்டுவகையும் குறிப்பிடப்பட்டுள்ளன.

श्रृङ्गारहास्यकरुणरौद्रवीरभयानकः ।
भीभत्साद्भुतशान्ताश्च रसाः पूर्वैरुदाहतः ॥

என்ற ரஸத்தில் அதாவது சுவைகளில் ச்ருங்காரம், ஹாஸ்யத்தில் கைசிகீ வ்ருத்தியையும், வீரம், ரௌத்ரம், அத்புதம் ஆகிய சுவைகளில் ஸாத்வதீ வ்ருத்தியையும், பயானகம், பீபத்ஸம் ஆகிய சுவைகளில் ஆரபடீ வ்ருத்தியையும் முதன்மையாகக் கொண்டு இருக்கவேண்டும் என்று கூறியுள்ளார். உலகம், வேதம் இவற்றுள் பிரஸித்தமாயும், வ்யங்கியப் பொருளையும் கொண்டதாயும் அனைத்து ஜனங்களாலும் அறியக்கூடியதாயும் உள்ள சொற்களை நாடகங்களில் வழங்கவேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளார்.

तस्माद्गम्भीरार्थाः शब्दा ये लोकवेदसंसिद्धाः ।
सर्वजनेन ग्राह्या संयोज्या नाटके विधिवत् ॥ (नाट्यशास्त्रम् २७,४६)

ஸம்ஸ்க்ருத மொழியில் நாட்டியத்தில் இருந்து நாடகம் வந்ததாக சிலர் அபிப்ராயம். சிலர் பொம்மலாட்டத்தில் இருந்து நாடகம் வந்தது என்பர். சிலர் நிழலாட்டத்திலிருந்து நாடகங்கள் இயற்றப்பட்டன என்பர். ஆனால் இந் கொள்கைகளுக்கு தக்க சான்றுகள் கிடையாது.

யவனிகா என்கிற சொல் ஸம்ஸ்க்ருத நாடகங்களில் குறிப்பிடப் பட்டுள்ளதாலும், கிரேக்க நாடகங்களைப் போன்று அங்கங்களாக நாடகங்களின்

பிரிவு பிரிக்கப்பட்டிருப்பதாலும், ஸம்ஸ்க்ருத நாடிகையைப் போல் கிரேக்க மொழியில் இருப்பதாலும், ஸூத்ரதாரனைப் போல் கிரேக்க நாடகங்களில் ஒருவன் இருப்பதாலும் ஸம்ஸ்க்ருத நாடகங்களுக்கு உற்பத்தி ஸ்தானம் கிரேக்க நாடகம் என்பர் திரு விண்டிஷ். இவருடைய கூற்றை ஏ. பி. கீத் முற்றிலும் மறுத்துள்ளார்.

பொதுவாக தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்று சொல்லப்படும் நான்குவித புருஷார்த்தங்களை பொதுமக்கள் எளிதில் உணர்த்துவதற்கு இராமாயணம், மஹாபாரதம் இவற்றிலுள்ள பகுதிகள் நடிக்கப்படலாம் என்ற உயர்ந்த எண்ணமே ஸம்ஸ்க்ருத நாடகங்களின் உற்பத்திக்குக் காரணம் எனலாம்.

பத்துவகை ரூபகங்கள்

1. நாடகம்: இந்தப் பிரிவில் ஐந்து முதல் பத்து அங்கங்கள் கொண்டனவாயும், ஸந்நிகள் ஐந்தும், ச்ருங்கார ரஸமோ, வீர ரஸமோ அங்கியாயும் மற்றவைகள் அங்கமாயும், வஸ்து தேவதைகள், ரிஷிகள், உதாத்த நாயகனுடைய வர்ணனையும் அமைந்திருப்பது முதல்வகையாகும்.

2. ப்ரகரணம்: இந்தப்பிரிவிலும் ஐந்து முதல் பத்து அம்சங்கள் கொண்டனவாயும், ஸந்நிகள் ஐந்தும், வஸ்து உத்பாத்யமாகவும், விப்ரன், வ்யாபாரி, ஸசிவன் ஆகியோருடைய சரித்ரத்தைப் பற்றியும் அங்கிச்சுவை ச்ருங்காரமாகவும் இருக்கவும்.

3. பாண: இது ஒரு அங்கம் கொண்டது. இங்கு ஒரே தூர்த்தனான விடன் பிறர் வார்த்தைகளைத் தானே ஆகாசபாஷிதமாகக் கூறி விடை கூறுவான். பாரதி வ்ருத்தியுடன் முகம் நிர்வஹணம் ஸந்திகள் கூறப்பட்டுள்ளன.

4. ப்ரஹஸனம்: இதில் முகம் நிர்வஹண ஸந்நிகளும் அங்கிச் சுவை ஹாஸ்யமாயும் அதிலும் (ஹாஸ்யத்திலும்) சுத்தம் ஸங்கீர்ணம் என்பதையு முடைய தாக இருக்கும்.

5. டிம: இதில் அங்கங்கள் நான்கு, கருணம், ரௌத்ரம், வீரம், பயானகம், பீபத்ஸம், அத்புதம் ஆகிய ஆறு ரஸங்களும், அங்கிச்சுவை ரௌத்ரமாயும், தேவர், அஸுரர், ராக்ஷஸர், யக்ஷர், நாகர் போன்றவர்களை பாத்திரமாகவும் கொண்டதாகும். அவமர்ச ஸந்தியை தவிற மற்ற நான்கு ஸந்திகளைக்கொண்டதாகும்.

6. வ்யாயாமம்: இது ஒரு அங்கத்தையுடையது. மூன்று ஸந்திகளையும் கைசிகீ வ்ருத்தியை சிறிது கொண்டும் உதாத்த புருஷ நாயகனும் அங்கிச்சுவை ஹாஸ்யமாயும், கருணம், ரௌத்ரம், வீரம், பயானகம், பீபத்ஸம், அத்புதம் ஆகிய ஆறு ரஸங்களும் கொண்டவையாகும்.

7. ஸமவகார: இதில் மூன்று அங்கங்கள், அவமர்சம் நீங்கலாக நான்கு ஸந்திகளும், தேவ அசுரர்களைச் சேர்ந்த நாயகர்களும், மூவகை ச்ருங்காரத்தையும் கொண்டவையாகும்.

8. வீதீ: இது ஒரே அங்கம் கொண்டது. ஒன்றிரண்டு பாத்ரங்களை மட்டும் கொண்டது. அனைத்து ரஸங்களின் லக்ஷணங்களைக் கொண்டது. முகம், நிர்வஹணம், என்ற இரண்டு ஸந்திகளைக் கொண்டதாகும்.

9. அங்கம்: இதுவும் ஒரே அங்கம் உடையது. அங்கிச்சுவை கருணைரசம், பெண்டிரின் அழுகை நிரம்பி இருக்கும். நன்கு அறியுப்பட்ட வஸ்துவைக் கொண்டதாயும், இரண்டு ஸந்திகளையும் பாரதி வ்ருத்தியுடையதாயும் இருக்கும்.

10. ஈஹாமருக: இவ்வகை தேவஸ்த்ரீ-காரணமாகத் தேவர்களுக்குள் வரும் க்ஷோபத்தை வர்ணிக்கும் காவ்யமாகும்.

மூன்று ஸந்திகளை மட்டும் கொண்டவையாகும்.

उद्धतपुरुषप्रायः स्त्रीरोषग्रथितकाव्यबन्धश्च (नाटचशास्त्रम् २०, ८२-३)

இதனைத் தொடர்ந்து நாடிகை, த்ரோடகம் போன்ற பதினெட்டு உபரூபகங்களும் கூறப்பட்டுள்ளன. அதில் சிலவற்றை இங்கு குறிப்பிடப் படுகிறது.

நாடிகை: நான்கு அங்கங்கள் கொண்டது. அங்கிச்சுவை ஸம்போகச்ருங்காரம் நாயகனுக்கும் நாயகிக்கும் இடையூறாகப் பட்டமஹிஷி முன்பு இருந்து பின்னர் அவளே இருவரும் மகிழுமாறு செய்வாள்.

स्त्रीप्राया चतुरङ्का ललिताभिनयात्मिका विहितार्था ।
प्रनृत्तगीतपाठ्या रतिसम्भोगात्मिका चैव ॥

த்ரோடகம்: இது ஐந்து, ஏழு, எட்டு அல்லது ஒன்பது அங்கங்கள் கொண்டது. அங்கிச்சுவை ச்ருங்காரம் ஒவ்வொரு அங்கத்திலும் விதூஷகன் வருவான்.

இங்கு கூறப்பட்டுள்ளபடி லக்ஷணங்களுடன் ஸம்ஸ்க்ருத நாடகங்களை இயற்றவேண்டும். இதில் சிறந்தவராக திகழ்ந்தவர் காளிதாசர் என்று கூறலாம். ஏனெனில் காளிதாசன் இயற்கையில் உள்ள பொருட்களின் அழகைத் தானும் அனுபவித்து மற்றவர்களும் அனுபவிக்குமாறு வர்ணிக்கும் திறமை படைத்தவர். அந்தந்த காலகட்டத்திற்கேற்ப மக்களின் மனோநிலையை நன்கு அறிந்து அதற்கேற்றாற்போல் தனது படைப்பை இயற்றுபவர். வ்யங்கியப் பொருட்களில் சிறந்து விளங்குமாறு காவிய நாடகங்களை படைத்து, முதிர்ந்த நிலையில் மக்கள் தருமத்தில் ஈடுபடவேண்டும் என்றும், உவமை வ்யங்கியமாய் தோன்றுமாறு வர்ணித்தலும், உலகம் துன்பமின்றி வாழ்வதற்குச் சிறந்த காரணம் கணவனும் மனைவியும் மனமொத்து இருத்தல் வேண்டும் என்பதை தனது படைப்புகளில் தோற்றுவித்தலும், சங்கீதம், சித்திரமெழுதுதல், நாடகம் ஆகிய கலைகளில் ஈடுபடுமாறு வர்ணித்தலும் இவருடைய சிறப்பம்சமாகும். இவரால் இயற்றப்பட்ட ரூபகங்கள் மாளவிகாக்னிமித்ரம், விக்ரமோர்வசீயம், அபிஞானசாகுந்தலம் ஆகும். மாளவிகாக்னிமித்ரத்தில் ஸம்போக ச்ருங்காரம் அங்கியாயும், விக்ரமோர்வசீயத்தில் விப்ரலம்ப ச்ருங்காரம் அங்கியாயும்,

சாகுந்தலத்தில் சாந்தரஸமும் சிறப்பாக உணர்த்தப்பட்டு இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

மாளவிகாக்னிமித்ரத்தை காளிதாஸன் எழுதியபோது அவனுக்கு முன்னர் ப்ரஸித்த கவிகளாகிய பாஸன், ஸௌமில்லன் முதலிய மஹாகவிகள் இருந்தனர். தன்னுடைய நூலாகிய மாளவிகாக்னிமித்ரம் மிகுதியாய் போற்றப்படவில்லை என்பதையும் 'புராணமித்யேவ ந ஸாது ஸர்வம்' என்கிற சுலோகத்தின் வாயிலாகக் கூறுகிறார் என்பதை விமர்சகர்கள் கூறுவர். இந்நாடகத்தை உற்று நோக்கும்போது காளிதாசனுக்கு நாட்யத்தில் இருக்கும் பேரறிவு நன்கு உணரப்படுகிறது.

விக்ரமோர்வசீயத்தை வடநாட்டில் த்ரோடகம் என்பர். இதில் மூன்று அங்கங்களில் உணர்த்தப்பட்ட ஸம்போக ச்ருங்காரம் நான்காவது அங்கத்தில் உணர்த்தப்பட்ட விப்ரலம்ப ச்ருங்காரத்திற்கு அங்கம் என்று கூறலாம். ஐந்தாவது அங்கத்தில் கடைசியில் 'இருவரும் பிரிவுற்று இருங்கள்' நாரதவசனம், புரூரவஸ் காட்டிற்குப் போவதைத் தடுத்தேயன்றி ஸம்போக ச்ருங்காரத்தை தொடரவில்லை. இருப்பினும் ஆனந்தவர்த்தனர் த்வன்யாலோகத்தில் நான்காவது பகுதியில் இங்குள்ள நான்கு ஸ்லோகங்களை உதாகரணம் காட்டுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

காளிதாஸனால் இயற்றப்பட்ட ரூபகங்களில் சாகுந்தலம் மிகவும் சிறந்தது என்று அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதிலும் நான்காவது அத்தியாயம் மிக மிக நன்றாகவுள்ளது என்றும் அந்த நான்காவது அத்தியாயத்திலும் நான்கு சுலோகங்கள் அர்த்தபுஷ்டியுடன் மிக மிக சிறப்பாக உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

काव्येषु नाटकं रम्यं तत्र रम्या शकुन्तला ।
तत्रापि च चतुर्थोङ्कस्तत्र श्लोकचतुष्टयम् ॥

மஹாபாரதத்தில் இந்த கதை இருப்பினும் அவற்றில் சில மாறுதல்களைச் செய்து சுவை சொரியுமளவிற்கு இயற்றியுள்ளார். நான்காவது அங்கத்தில் நான்கு ஸ்லோகங்கள் சிறந்தன என்பதை சிந்தனை செய்யும்போது.

१. यास्यत्यद्य शाकुन्तलेति हृदयं संस्पृष्टमुत्कण्ठया कण्ठः स्तम्भितबाष्पवृत्तिकलुषश्चिन्ताजडं दर्शनम् ।
वैक्लव्यं मम तावदीदृशमिदं स्नेहादरण्यौकसः पीड्यन्ते गृहिणः कथं तु तनयाविश्लेष दुःखैर्नवैः ॥(4,6)

இன்று சகுந்தலையானவள் தன்னுடைய கணவன் வீட்டிற்குச் செல்கிறாள் என்ற செய்தியைக் கேட்டவுடன் எனக்கு கஷ்டமானது ஏற்பட்டு பேசமுடியாமல் கண்களில் நீர் தழும்பி ஜடம்போன்று ஆகிவிட்டேன். அரண்யத்தில் வசிக்கும் எனக்கு இவ்வாறு கஷ்டம் ஏற்படுகையில் இல்லறவாழ்க்கையில் இருப்பவர்கள் தனது மகளை பிரியும்போது எவ்வாறு கஷ்டப்படுவார்கள் என்பதைக் கணவர் கூறுவதாக சொல்லப்பட்டுள்ளது.

2. पातुं न प्रथमं व्यवस्यति जलं युष्मास्वपीतेषु या नादत्ते प्रियमण्डनापि भवतां स्नेहेन या पल्लवम् ।
आद्ये वः कुसुमप्रसूति समये यस्या भवत्युत्सवः सेयं याति शकुन्तला पतिगृहं सर्वैरनुज्ञायताम् ॥ (4,9)

கண்வர், தன்னுடைய ஆச்ரமத்தில் வளரும் மரம், செடி, கொடிகளைப் பார்த்து சகுந்தலை தினமும் உங்களுக்கு ஜலம் விடாமல் தான் ஒருபொழுதும் ஜலம் கூட அருந்தமாட்டாள். துளிர்விடும் போது உங்களுடன் சேர்ந்து அவளும் சந்தோஷமடைவாள். முதலில் பூ மலரும்போது பெரிய திருவிழாவையே கொண்டாடுவாள். இப்படிப்பட்ட சகுந்தலை கணவன் வீட்டிற்குச் செல்லுகிறாள் அனைவரும் அனுமதியளியுங்கள்" என்கிறார்.

३. अस्मान्साधु विचिन्त्य सम्यमधनानुच्चैः कुलं चात्मनः त्वय्यस्याः कथमप्यबान्धवकृतां स्नेहप्रवृत्तिं च ताम् ।
सामान्य प्रतिपत्तिपूर्वकमियं दारेषु दृश्या त्वया भाग्यायत्तमतः परं न खलु तद्वाच्यं वधूबन्धुभिः ॥(4,17)

இந்த ஸ்லோகத்தினால் தன்னுடைய குலத்தின் பெருமையைச் சொல்லுகிறார். நாங்கள் உயர்ந்த குலத்தில் பிறந்த துறவிகள் என சிந்தித்து செயல்படவேண்டும். ஆனால் நீயோ பந்துவாக இல்லாத பொழுதும் சகுந்தலையுடன் உறவுகொண்டுள்ளாய் ஆதலால் மற்ற மனைவிகளைப் போன்று சாதாரணப்பெண் மாதிரி நடத்திவிடாதே. இந்த சகுந்தலையை நீ அடைவதற்கு பெரிய பாக்கியம் செய்துள்ளாய் என்கிறார்.

४. शुश्रूषस्व गुरून्कुरु प्रियसखीवृत्तिं सपत्नीजने भर्तुः विप्रकृतापि रोषणतया मा स्म प्रतीपं गमः ।
भूयिष्ठं भवदक्षिणा परिजने भाग्येष्वनुत्सेकिनी यान्त्येवं गृहिणीपदं युवतयो वामाः कुलस्याधयः ॥ (4, 18)

தன்னுடைய மகள் சகுந்தலைக்கு கணவர் உபதேசம் செய்கிறார். தோழிகளிடத்தின் அன்புடனும் குருவினிடத்தே பணிவிடை செய்தும் இருக்கவேண்டும். கணவன் கோபம்கொண்டாலும் அவனிடம் அன்புகொள்ள வேண்டும். உன்னுடைய தோழிகளுடன் அன்பாக நடந்துகொள்ளவேண்டும். சிறந்த பெண்ணான நீ குடும்பத் தலைவியாகப் போகிறாய் என்பதாக எடுத்துரைக்கிறார்.

இந்நாடகத்தில் முதல் அங்கத்தில் கவி காளிதாசன் கூறுகிறார்
"आ परितोषाद्विदुषां न साधु मन्ये प्रयोगविज्ञानम् । बलवदपि शिक्षितानामात्मन्यप्रत्ययं चेतः ॥"
என்று வித்வான்கள் இயற்றியதால் இந்த சகுந்தலை நாடகம் சிறந்தது என்று கூறுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது. இதை நன்கு முழுவதும் பார்த்து பரீக்ஷை செய்தபின் நன்றாக உள்ளது என்று சொல்லப்படுவதையே தான் விரும்புவதாகக் கூறுகிறார். அதே அங்கத்தில் "ग्रीवाभङ्गाभिरामं मुहुरनुपतति स्यन्दने दत्त दृष्टिः"
என்ற ஸ்லோகத்தில் இயற்கையின் அழகை சிறப்பாக வர்ணித்துள்ளது குறிப்பிடத்தக்கது. உபமானத்தை வ்யங்க்யமாக எடுத்துரைப்பதில்

"इदं किलाव्याजमनोहरं वपुः तपक्षमं साधयितुं य इच्छति ।
ध्रुवं स नीलोत्पलपत्रधारया शमीलतां छेत्तुमृषिर्व्यवस्यति ॥"

என்று இந்த ம்ருதுவான சகுந்தலையின் சரீரமா? தவத்தை செய்வதற்கு விரும்புகிறது. இது எவ்வாறு உள்ளது என்றால் ம்ருதுவான நீலோத்பல புஷ்பத்தினால் கடினமான சமீவ்ருக்ஷக்கை பிளப்பதற்கு ரிஷி முயற்சிப்பதாக இருக்கிறது என கூறுகிறார். "मुहुरङ्गुलिसंवृताधरोष्टं प्रतिषेधाक्षरविक्लवाभिरामम् ।
मुखमंसविवर्ति पक्ष्मलाक्ष्याः कथमप्युन्नमितं न चुम्बितं तु ॥"

எனச் சகுந்தலையிடம் சந்தோஷமாக இருந்த சமயத்தில் கௌதமீ வந்ததால் சகுந்தலையின் அதரத்தை/உதட்டை முத்தமிடாமல் போய்விட்டது என்று வருந்துவதாக குறிப்பிட்டுள்ளான். இவ்வாறு சாகுந்தல நாடகத்தை முழுவதும் ஆராய்ந்து பார்க்கும்போது காளிதாசனுடையது சிறந்த படைப்பு எனலாம்.

சூத்ரகன் -(not known) இவர் எழுதிய நாடகம் ம்ருச்கடிகம். இது பத்து அங்கங்களைக்கொண்ட ப்ரகரண நூல். இதில் ஔதார்யத்தால் வறுமையுற்ற சாருதத்தன் என்ற பிராம்மண வியாபாரியை வஸந்தஸேனை என்ற வேசி காமுற, அரசனின் மைத்துனன் சகாரன் அந்த வேசியை காமுற்று சாருதத்தனையும் வஸந்தஸேனையையும் துன்பத்திற்கு ஆளாக்கி இறுதியில் வஸந்தஸேனை சாருதத்தனை மணந்தாள். இந்த நாடகத்தில் ச்ருங்காராபாஸமும், வஸந்தஸேனையின் துணிவும் அவள் படும் துன்பமும் படிப்போரின் மனத்தையும், நடித்தலைப் பார்ப்போரின் மனத்தையுங் கவரும். அங்கிச்சுவை ச்ருங்காரம் ஆகும். மற்ற நாடகங்களை ஒப்புநோக்குகையில் இதில் அங்கிச்சுவை கொஞ்சம் குறைவு எனலாம்.

ஸ்ரீஹர்ஷன் - (கி.பி. 7th Cent.) இவருடைய படைப்புகள் ப்ரியதர்சிகை, ரத்னாவளி, நாகாநந்தம் ஆகும் முதல் இரண்டு ரூபகங்களும் நான்கு அங்கங்கள் கொண்டவை. இவை இரண்டும் மாளவிகாக்னிமித்ரத்தைப் போன்றது. நாகாநந்தம் ஐந்து அங்கங்களைக்கொண்டது. இதனுள் முதலில் ச்ருங்காரச்சுவையும் பின்னர் சாந்தச்சுவையும் உணர்த்தப்பட்டுள்ளன. இங்கு ச்ருங்காரம் சாந்தச்சுவைக்கு அங்கம் ஆகும். இம்மூன்று ரூபகங்களும் பாணனாலோ தாவகனாலோ இயற்றப்பட்டு ஹர்ஷன் இயற்றியதாக வெளியிடப்பட்டுள்ளது என்பர் சிலர். காதம்பரீ, ஹர்ஷசரிதம் இவற்றிலுள்ள நடைக்கும் இங்குள்ள நடைக்கும் மாறுபாடு இல்லாததால் இவற்றை ஸ்ரீஹர்ஷரே இயற்றினார் எனலாம்.

விசாகதத்தன் - (5-ம் நூற்றாண்டு) இவர் எழுதிய ரூபகம் முத்ராராக்ஷஸம். இங்கு முத்திரையால் ராக்ஷஸன் வசப்பட்டமை வர்ணிக்கப்பட்டதால் இந்த நாடகம் இப்பெயர் பெற்றது. இது ஏழு அங்கங்கள் கொண்டவை. தன்னை அவமதித்த நந்தர்களை அழித்து சந்த்ரகுப்தனை அரசானக்கி அவனது ஆட்சி நிலைபெற்றிருக்க நந்தர்களுக்கு உற்ற மந்திரியாய் இருந்த ராக்ஷஸனை அவனுக்கு மந்திரியாகச் செய்விக்கச் சாணக்யன் செய்த உபாயங்கள் வர்ணிக்கப்பட்டுள்ளன. இங்கு வீரரஸம் முதன்மையாக உணர்த்தப்படுகிறது.

பட்டநாராயணன் - (கி. பி. 671) இவர் எழுதிய நாடகம் வேணீஸம்ஹாரம். த்ரௌபதியின் வேணீ/முடி முடியப்படுதலையும், த்ரௌபதியின் வேணீ மூலமாக

துர்யோதனாதிகள் அழிக்கப்பட்டதையும் இந்நாடகம் கூறுகிறது. இதில் ஆறு அங்கங்கள் உள்ளன. குருக்ஷேத்ரப் போருக்குக் கௌரவரும் பாண்டவரும் புறப்படுவது முதல் போர் முடியும்வரை உள்ள மஹாபாரதக் கதையுள் சிற்சிலப் பகுதியை இந்நூல் மூலமாகக்கொண்டது. இதில் தீர்க்கமான ஸமாஸங்களினால் ரௌத்ரச்சுவை உணரப்படுகிறது. இந்நூல் நன்கு படிப்பின் மஹாபாரதக் கதைகளை நன்கு புரிந்துகொள்ளமுடியும்.

பவபூதி - (கி.பி. 9-ம் நூற்றாண்டு) இவர் எழுதிய ரூபகங்கள் மாலதீமாதவம். மஹாவீரசரிதம், உத்தரராமசரிதம் ஆகும். இவர் வ்யாகரணம், தர்க்கம், யோகம், ஸாங்க்யம், மீமாம்ஸை போன்ற சாஸ்த்ரங்களிலும் யஜுர்வேதத்திலும் சிறந்த புலமை வாய்ந்தவர் இவர் மாலதீமாதவத்தை முதலிலும் மஹாவீரசரிதத்தை இடையிலும் உத்தரராம சரிதத்தை இறுதியிலும் இயற்றிருக்க வேண்டும் என்பர். இவற்றில் முறையே அங்கிச்சுவை ச்ருங்காரமும், வீரரஸமும், கருணைரஸமும் உணர்த்தப்பட்டுள்ளது. என்று பவபூதி இயற்றியதில் உத்தரராம சரிதமே சிறந்தது எனப் பெரியோர்கள் கூறுவர். இந்நாடகம் ஏழு அங்கங்களைக் கொண்டது. இதில் முதல் அங்கத்தில் ஸீதை இராமனது மார்பில் தூங்க அவர் கூறும் சொற்களால் ச்ருங்காரம் ததும்புகிறது எனலாம்.

इयं गेहे लक्ष्मीरियममृतवर्त्तिर्नयनयोरसावस्याः स्पर्शो वपुषि बहुलश्चन्दनरसः ।
अयं बाहुः कण्ठे शिशिरमसृणो मौक्तिकसरः किमस्या न प्रेयो यदि परमसह्यस्तु विरहः ॥ (उत्तर.१,३८)
आविवाहसमयाद्गृहे वने शैशवे तदनु यौवने पुनः । स्वापहेतुरनुपाश्रितोऽन्यया रामबाहुरुपधानमेष ते ॥(उत्तर.१.३७)

இதனைத்தொடர்ந்து இந்த அங்கத்தின் இறுதியில் வரும் பிரிவால் உண்டாக்கும் கருணைரஸத்தைச் சிறக்கச் செய்கிறது எனலாம். மற்றுமொரு ஸ்லோகத்தில் இரவு மட்டுமே கழிந்தது ஸீதை இராமனது ச்ருங்காரம் தொடர்ந்தது என்பதை சிறப்பாக கூறியுள்ளார்.

किमपि किमपि मन्दं मन्दमासक्ति यागादविरलितकपोलं जल्पतोरक्रमेण ।
अशिथिलपरिरम्भव्यापृतैकै कदो ष्णो अविदितगतयामा रात्रिरेव व्यरंसीत् ॥

இந்நாடகத்தில் ருக்வேத ஸம்ஹிதை உபநிஷத் வாக்கியங்கள் காணப்படுகின்றன. சில உலக வழக்குகள் நன்கு உணர்த்தப்படுகின்றன. அவைகளில் 'ஒரு காலத்து இன்பத்தைத் தரும் பொருள் மற்றொரு காலத்தில் புண்ணில் ஊற்றிய காரம்போல் ஆகும்.' 'உள்ளடக்கிய சோகம் தனக்கு வேண்டிய நண்பரைக் காண, கரையை உடைத்துப் போகும் வெள்ளம்போல் வெளிவரும்.'' போற்றத்தக்க குணங்களேயன்றி வயதுமில்லை லிங்கமுமில்லை ' போன்றவையாகும்.

பாஸன் - இவர் எழுதிய பதிமூன்று நாடகங்களை பாஸநாடகச்சக்ரம் என்று குறிப்பிடுவர். இவைகள் பத்தாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டிருக்கும் என்று கூறுவர். அவைகள் 1.ஸ்வப்னவாஸவதத்தம், 2. ப்ரதீக்ஞாயௌகந்தராயணம், 3. அவிமாரகம், 4. சாருதத்தம், 5. ப்ரதிமாநாடகம், 6. அபிஷேகநாடகம், 7. பஞ்சராத்ரம்,

8. மத்யமவ்யாயோகம், 9. தூதவாக்யம், 10. தூதகடோக்கசம், 11. கர்ணபாரம், 12. ஊருபங்கம், 13. பாலசரிதம் ஆகியன. பாஸனால் இவை அனைத்தும் மிகவும் சிறப்பாக பண்ணப்பட்டவைகளாகும். இவற்றில் உதாரணமாக கர்ணபாரம் என்பதை காண்போம்.

கர்ணபாரம் - ஒரு அங்கத்தைக் கொண்ட வ்யாயோகமாகும். சல்யனால் சாரத்யம் செய்யப்பட்டு கர்ணன் போருக்குப் புறப்பட, கர்ணன் தனக்குப் பரசுராமரிடமிருந்து வந்த சாபத்தை கூறுதலும். இந்திரன் கவசகுண்டலங்களை அவனிடமிருந்து பெறுதலும் கூறப்பட்டுள்ளன. கர்ணபாரம் என்ற சொல்லிற்கு காதணி என்றும் இந்த வஸ்து காதணியைப் பற்றிக் கூறுவதாலும் இந்நூலுக்கு கர்ணபாரம் எனப்பெயர் சூட்டப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. இங்கும் கர்ணன் தானவீரனே ஆவான். இந்நாடகத்தில் இந்திரன் வயது முதிர்ந்த ப்ராம்மணனாக வந்து கர்ணனிடம் யாசிக்கும்போது ஆயிரம் பசுக்கள், ஆயிரம் குதிரைகள், சிறந்த யானையைத் தருகிறேன் என்றெல்லாம் கேட்பதை ஸ்லோகத்தின் வாயிலாக சிறப்பாக இயற்றியிருப்பது குறிப்பிடத்தக்கது. அவைகளாவன-

गुणवदमृतकल्पक्षीरधाराभिवर्षि द्विजवर! रुचिरं ते तृप्तवत्सानुयात्रम् ।
तरुणमधिकमर्थिप्रार्थनीयं पवित्रं विहितकनकशृङ्गं गोसहस्रं ददामि ॥
रवितुरगसमानं साधनं राजलक्ष्म्याः सकलनृपतिमान्यं मान्यकाम्बोजजातम् ।
सुगुणमनिलवेगं युद्धदृष्टापदानां सपदि बहुसहस्रं वाजिनं ते ददामि ॥

मदसरितकपोलं षट्पदैः सेव्यमानं गिरिवरनिचयामं मेघगम्भीरघोषम् ।
सितनखदशनानां वारणानामनेकं रिपुसमरविमर्दं वृन्दमेतद्ददामि ॥

கடைசியில் வந்திருப்பது இந்திரன் என தீர்மானித்த கர்ணன் அந்த முதியவரிடம் தாங்கள் விரும்பினால் எனது உடலுடன் பிறந்தது முதல் வளர்ந்தது என்னைக் காப்பாற்றிவரும் கவச குண்டலங்களை கொடுக்கட்டுமா? என்பதை கவி பாஸன் சிறப்பாகக் கூறியுள்ளார்.

अङ्गैः सहैव जनितं मम देहरक्षा देवासुरैरपि न भेद्यमिदं सहास्त्रैः ।
देयं तथापि कवचं सह कुण्डलाभ्यां प्रीत्या मया भगवते रुचिरं यदि स्यात् ॥

முடிவில் தானத்தைப் பற்றி உயர்வாக கூறுவார் -

शिक्षा क्षयं गच्छति कालपर्ययात् सुबद्धमूला निपतन्ति पादपाः ।
जलं जलस्थानगतं च शुष्यति हुतं च दत्तं च तथैव तिष्ठति ॥

இதுபோன்று ஸம்ஸ்க்ருதத்தில் திங்நாகன் குந்தமாலா என்றும், அநங்கஹர்ஷன், தாபஸவத்ஸராஜம் என்றும், முராரி அநர்க்கராகவம்

என்றும், சக்திபத்ரன், ஆச்சர்யசூடாமணி என்றும் ராஜசேகரன் கர்ப்பூரமஞ்சரீ, வித்தசாலபஞ்சிகா, பாலராமாயணம், பாலபாரதம் ஆகியவற்றையும், க்ஷேமீச்வரன், நைஷதானந்தம், சண்டகௌசிகம் என்றும், விஜ்ஜிகை என்ற பெண்மணி கௌமுதிகோத்ஸவம் என்றும், போதாயனகவி

பகவதஜ்ஜுகம் என்றும், கிருஷ்ணமிச்ரர் ப்ரபோதசந்த்ரோதயம் என்றும், பில்ஹணன் கர்ணஸுந்தரீ என்ற நாடிகையையும், ராமசந்த்ரசூரி, நளவிலாஸம், ஸத்யஹரிச்சந்திரம் என்றும், காஞ்சனன் தனஞ்ஜயவிஜயம் என்றும், பிரஹ்லாதனதேவன் பார்த்தபராக்ரமம் என்ற வ்யாயோகத்தையும், சங்கதரன் லடகமேளகம் என்ற ப்ரஹஸனத்தையும், ஸுபடன் தூதாங்கதம் என்ற சாயா நாடகத்தையும், ஹநுமன் நாடகம் என்றும், யசபாலன் மோஹராஜபராஜயம் என்றும், ஜயஸிம்மஸுரி ஹம்மீரமதமர்த்தனம் என்றும், சிங்கபூபாலன் ரத்னபாஞ்சாலிகா அல்லது குவலயாவளி என்றும், வேங்கடநாதன் ஸங்கல்ப ஸுர்யோதயம் என்றும், ஹரிஹரன் பர்த்ருஹரிநிர்வேதம் என்றும், வ்யாஸஸ்ரீராமதேவன் ஸுபத்ராபரிணயம், ராமாப்யுதயம், பாண்டவாப்யுதயம் ஆகியனவும், வாமனப்பட்டபாணன், பார்வதீபரிணயம் என்றும், பரமானந்ததாஸன், சைதன்யசந்த்ரோதயம் என்றும், பூதேவசுக்லன் தர்மவிஜயம் என்றும், ரூபகதேவன் விதக்தமாதவம், லலிதமாதவம் ஆகியனவும், குருராமகவி ரத்னேச்வரப்ரஸாதனம் என்றும், நீலகண்டதீக்ஷிதர் நளசரிதம் என்றும், ராஜசூடாமணி தீக்ஷிதர் ஆனந்தராகவநாடகம், கமலிநீகலஹம்ஸம் ஆகியனவும், ராமபத்ரதீக்ஷிதர் ச்ருங்காரதிலகபாணம், ஜானகீபரிணயம் என்றும், மஹாதேவன் அத்புததர்ப்பணம் என்றும் நல்லாதீக்ஷிதர் ச்ருங்காரஸர்வஸ்வபாணம், ஸுபத்ராபரிணய நாடகம் ஆகியனவும், அனந்ததேவன் மனோனுரஞ்சனம் என்றும், கோகுலநாதன் அம்ருதோதயம் என்றும், ஆனந்தராயமகி ஜீவானந்தம், வித்யாபரிணயம் என்றும், விச்வநாதன் ம்ருகாங்கலேகை என்ற நாடிகையையும், தேவராஜன் பாலமார்த்தாண்டவிஜயம் என்றும், யுவராஜன் ரஸஸதனம் என்றும், நீலகண்டன் கல்யாணஸௌகந்திகம் என்றும், பாஸ்கரன் ச்ருங்காரலீலாதிலகம் என்றும் இன்னும் பற்பல நாடகங்கள்/ரூபகங்கள் ஸம்ஸ்க்ருதத்தில் காணக்கிடைக்கின்றன.

இவ்வாறு ஸம்ஸ்க்ருதத்தில் நாடகங்களின் சுவை மிகவும் சிறப்பாகவே காணப்படுகிறது. கண்ணிற்கும், காதிற்கும், மனதிற்கும் மகிழ்ச்சி மட்டுமின்றி இவைகளை பார்ப்பதால் அந்தந்த காலகட்டத்திற்கேற்ப தருமங்களையும் நீதியையும் எடுத்துச் சொல்லும் சிறந்த சாதனமாக இருந்தது ஏன் தற்சமயமும் இருக்கின்றது என்று கூறலாம். காளிதாஸன் முதல் அனைவரும் தங்களுடைய தார்மீக கருத்துக்களை உலகிற்கு (அனைவரும் அறியும் வண்ணம்) எடுத்துரைத்திருப்பது ஸம்ஸ்க்ருத நாடகங்களின் சிறந்த அம்சமாகும். இதனால் மக்கள் சதுர்வித புருஷார்த்தங்களை மிகவும் எளிமையாக அடைந்தனர் அடைந்துகொண்டுள்ளனர் என்றால் அது மிகையாகாது.

மங்களம்.

இராஜராஜ சோழனின்
இரண்டு அரிய சமஸ்கிருத கல்வெட்டுக்கள்

முனைவர் குடவாயில் **பாலசுப்ரமணியன்,**
வெளியீட்டு மேலாளர்,
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

கி. பி. 850 இல் விஜயாலயசோழனால் தொடக்கம் பெற்ற பிற்காலச் சோழர் பேரரசு முறையே முதலாம் ஆதித்த சோழன், முதலாம் பராந்தகன், கண்டராதித்தன், அரிஞ்சயன், சுந்தரசோழன், ஆதித்த கரிகாலன், மதுராந்தக உத்தமசோழன், முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன், முதலாம் இராஜாதிராஜன், இரண்டாம் இராஜேந்திரன், வீரராஜேந்திரன், அதிராஜேந்திரன், முதலாம் குலோத்துங்கன், விக்கிரமசோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராஜராஜன், இரண்டாம் இராஜாதிராஜன், மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராஜராஜன், மூன்றாம் இராஜேந்திரன் எனச் சோழ மாமன்னர்களால் கி. பி. 1279 வரை தொடர்ந்து 430 ஆண்டுகள் ஆளப்பெற்றது. தமிழக வரலாற்றில் பொற்காலம் எனப் பேசப்பெறுகின்ற சோழராட்சியில் செம்மொழியாம் தமிழ்மொழி ஆட்சிமொழியாக விளங்கியது. சமஸ்கிருதம் எனப்பெறும் வடமொழியோ பரத கண்டத்தில் பிற நாடுகளோடும் ஜாவா, சுமத்திரா, போர்ணியோ இந்தோனிஷியா போன்ற கீழ்த்திசை நாடுகளோடும் தொடர்பு கொள்ள இணைப்பு மொழியாகத் திகழ்ந்தது. சமஸ்கிருத மொழியைச் சோழர்கள் பல்லவகிரந்தம் எனும் பல்லவர்கால எழுத்தமைதியிலிருந்து மாற்றம் பெற்ற கிரந்தம் எனும் எழுத்துக்களால் ஓலையிலும், செப்பேடுகளிலும், கல்வெட்டுக்களிலும் எழுதி தங்களின் தனித்தன்மையை வெளிப்படுத்தினர். அவர்கள் காலத்தில் தமிழ்மொழி பெற்ற இலக்கிய வளம் போன்றே சமஸ்கிருத இலக்கியமும் செழுமை பெற்று வளர்ந்தது. இருமொழிகளும் கைகோர்த்து கொண்டும் கொடுத்தும் வலம் வந்தன.

சோழர் செப்பேடுகள்:

சோழப் பேரரசர்கள் பல முக்கிய ஆவணங்களைச் செப்பேடுகளாகப் பதிவு செய்துள்ளனர். அவ்வாறு கிடைத்துள்ள சோழர்கால செப்பேடுகளில் குறிப்பிடத்தக்கவை பராந்தக சோழனின் வேலஞ்சேரி செப்பேட்டுத்

தொகுதி, இராஜராஜன், அவன் மகன் இராஜேந்திரசோழன் ஆகியோர்களின் ஆணையைக் கூறும் பெரிய ஆனைமங்கலச் செப்பேட்டுத் தொகுதி (Larger Laiden grants), இராஜேந்திரசோழனின் திருவாலங்காட்டுச் செப்பேட்டுத் தொகுதி கரந்தைச் செப்பேட்டுத்தொகுதி, எசாலம் செப்பேட்டுத்தொகுதி, முதலாம் இராஜேந்திரனின் சிறிய ஆனைமங்கலம் செப்பேட்டுத் தொகுதி ஆகியவை ஆகும். வேலஞ்சேரி செப்பேட்டுத் தொகுதியில் 3 ஏடுகள் சமஸ்கிருதத்திலும் 4 ஏடுகள் தமிழிலும் உள்ளன. திருவாலங்காட்டு செப்பேட்டுத் தொகுதியில் 3 ஏடுகள் சமஸ்கிருதத்திலும் 21 ஏடுகள் தமிழிலும் உள்ளன. கரந்தைச் செப்பேட்டுத்தொகுதியில் 3 ஏடுகள் சமஸ்கிருதத்திலும் 54 ஏடுகள் தமிழ் கிரந்தம் கலந்த எழுத்துக்களிலும் உள்ளன. எசாலம் செப்பேட்டுத்தொகுதியில் 4 ஏடுகள் சமஸ்கிருதத்திலும், 11 ஏடுகள் தமிழிலும் உள்ளன. சிறிய ஆனைமங்கலம் செப்பேட்டுத் தொகுதியிலோ 5 ஏடுகள் சமஸ்கிருதத்திலும், 3 ஏடுகள் தமிழிலும் உள்ளன. இச்செப்பேட்டுத் தொகுதிகளை நோக்கும்போது மன்னர்களின் இராஜ பாரம்பரியம் பற்றிப் பேசும் பகுதிகளெல்லாம் வடமொழிப் பாடல்களாக உள்ளமையும், மன்னனின் கொடை பற்றி பேசும் இடங்களெல்லாம் தமிழிலும், சில இடங்களில் வடமொழி கலந்தும் காணப்பெறுகின்றன. இரண்டு மொழிகளையும் தமிழ் மக்கள் செம்மையுற பயின்றிருந்தனர் என்பதையே சோழர்களின் செப்பேடுகளும் கல்வெட்டுக்களும் நமக்குக் காட்டி நிற்கின்றன.

இரண்டு கல்வெட்டுக்கள்

1. தஞ்சை சீனிவாசபுரம் தூண் கல்வெட்டு :

1989 ஆம் ஆண்டு தஞ்சாவூர் சீனிவாசபுரத்திற்கு அருகிலுள்ள இராசராசன் நகரில் ஒரு தனியாருக்கு வீடுகட்ட ஒப்பந்தக்காரர் ஒருவர் கடைக்கால் தோண்டினார். அப்போது 10 அடி ஆழத்திற்குக்கீழ் மிகநீண்ட கற்றூண் ஒன்று கல்வெட்டுக்களுடன் புதைந்திருந்து வெளிப்பட்டது. கல்வெட்டுக்களின் முக்கியத்துவம் உணராத அந்த ஒப்பந்தக்காரர் அந்தத் தூணை 70 துண்டுகளாக உடைத்து, கட்டுமானத்திற்குப் பயன்படுத்தத் தயார் செய்து விட்டார். அப்போது இத்தூணின் அருமை அறிந்த சிலர் எனக்கு (கட்டுரை ஆசிரியருக்கு) தகவல் அளித்தனர். அரிய கல்வெட்டுத் தூணையும், அது உடைக்கப்பட்டிருந்ததையும் கண்ட நான் உடனே சென்று, அப்போதைய மாவட்ட ஆட்சியர் திரு.மச்சேந்திரநாதன் அவர்களுக்குத் தகவல் அளித்து, உடைந்த கல் துண்டுகளைக் கைப்பற்றினோம். தமிழக அரசின் தொல்லியல் துறையினரும், இந்தியத் தொல்லியல் துறையினரும்,

அக்கல்வெட்டு துண்டுகளைப் படியெடுத்துப் பதிவு செய்தனர். அக்கற்றூண் (துண்டுக் கற்கள் இணைக்கப்பெற்றது) இப்போது தஞ்சை இராஜராஜன் அருங்காட்சியகத்தில் இடம் பெற்றுள்ளது.

இந்தத் தூணின் மூன்று புறங்களில் கிரந்த எழுத்துக்களில் சமஸ்கிருதப் பாடல்கள் பொறிக்கப்பெற்றுள்ளன. பன்னிரண்டு சுலோகங்களில் இராஜராஜனின் பெரும்புகழ் உரைக்கப் பெற்றுள்ளது. இது தமிழக வரலாற்றுக்குக் கிடைத்த மாபெரும் செல்வமாகும். இதனை ஒத்த கல்வெட்டுப் பாடல்கள் இதுவரை கிடைத்ததில்லை. இலக்கண அமைதியோடு, பல்வகை அலங்காரங்கள் அமைய இப்பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன. இப்பாடல்களை ஆராய்ந்த டாக்டர் இரா. நாகசாமி அவர்கள் இவற்றை 'இராஜராஜ காவியம்' என்றே குறிப்பிடுகின்றார்.

இதுவரை கிடைத்துள்ள மாமன்னன் இராசராசனின் கல்வெட்டுக்கள் அனைத்தும் திருக்கோயில்களுக்கும் மற்ற அரசு நடவடிக்கைகளுக்குமே உரிய சாசனங்களாகும். ஆனால் தஞ்சையில் கிடைத்துள்ள இக் கல்வெட்டுப் பாடல்களோ இராசராசனின் புகழை மட்டுமே பாடுபவையாக உள்ளன. மேலும் அவனது பிற பட்டப்பெயர்களைக் கூறாது மும்முடிச்சோழன் என்றே புகழ்கிறது. இப்பாடல்கள் இடம்பெற்ற இந்தக் கற்றூண் அவனது அரண்மனையில் தான் இருந்திருக்க வேண்டும் என உறுதியாக நம்பலாம்.

அப்பாடல்களின் தமிழாக்கமாவது,

இராசகேசரிவர்மன் எனப்பட்டம் பூண்ட இராஜராஜசோழனுடைய திருவடிகள் மற்ற அரசர்களின் தலையில் சூடியுள்ள மகுடங்களால் அலங்கரிக்கப் பெற்றதாகும்.

மும்முடிச்சோழனே ! இந்த உலகத்தைப் பொன்னாலாகிய வாகுவலயத்தை அணிந்த உன் புயங்கள்தான் தாங்குகின்றன என்று சாதாரண மக்கள் சொல்கின்றனர். ஆனால் உன்னால் வெல்லப்பட்ட பகைவர்களின் தலைகளின் மேல் வைத்த உன் திருவடிகளல்லவா இந்தப் பூமியைத் தாங்குகின்றன.

அரசே! உன் காலடியில் வீழ்ந்த பகைவர்களின் மகுடங்களில் உள்ள இரத்தினங்களால் சிவந்த பொற்பாதங்களை உடையவன் நீ. இத்தகைய உன் எழிலால் மட்டுமின்றிக் கரங்களில் ஏந்தியுள்ள பாம்பைப் போன்ற வாளாலும் பகைவரின் உள்ளங்களைக் கலங்கச் செய்கின்றாய்.

நிலமாகிய மனைவியைக் காப்பதில் சிறந்த கணவனாகவும், இந்த மும்முடி மன்னன் ஒருவனே சிற்றரசர்களை வெப்பத்திலிருந்து காப்பதில் பெருங்குடை போன்றவனாகவும், மகளிரின் உள்ளத்தைக் கவருவதில் மன்மதனுக்கு நிகரானவனாகவும் விளங்குகிறான்.

இராஜராஜன் குற்றமற்ற செல்வம், கலைகள், போற்றப்படும் ஆலயங்கள் ஆகியவற்றில் எப்போதும் ஈடுபாடு கொண்டவன், அழகனாய் வாலிபனாய் இருந்தும் புலன்களை அடக்கியாளும் வலிமை கொண்டவன். இதற்கு முன்பு இவனை ஒத்த ஒருவன் பிறந்ததில்லை. இத்தகைய மும்முடி மன்னன் இந்தப் பூமியை நெடுங்காலம் ஆள்வானாக !.

அறிவிற் சிறந்த மும்முடிச் சோழனே ! கடும் நோயால் துன்புறுகின்றவர்கள் திருநீற்றைக் காப்பாகத் தரித்துக் கொள்வதைப் போல உன் திருவடித் துகள்களைத் தங்கள் மகுடங்களில் காப்பாகப் புனைந்து கொண்ட காரணத்தால் நல்ல மரபில் தோன்றியவர்களும் போரில் பெரு விருப்பமுடையவர்களுமாகிய அரசர்கள் அனைவரும் இப்போது அச்சமற்றவர்களாய்த் தலைநிமிர்ந்து நடக்கின்றனர்.

இராஜராஜனே ! இந்திரனுக்கு ஒப்பான உன்னுடைய ஆட்சியில் காட்டில் வசிப்பவர்களும் நிலத்தின் வளங்கள் அனைத்தையும் பெற்று இன்புற்று வாழும்போது, நின் பகைவர்கள் நெல்லிக்கனியையும், வில்வப்பழத்தையும் அருந்தி (இவையாவது கிடைத்தனவே என) மகிழும் நிலையில் உள்ளனர். இச்செய்தி மிக வியப்பிற்குரியதன்றோ !

மும்முடிச்சோழனே ! நின் பகைவர்கள் வானின் வழியாகத் தப்பியோட முயன்றால் அங்குள்ள வில்லைப் பார்த்தும், கடல் வழியாகச் செல்ல விழைந்தால் அங்குள்ள மீனைக் கண்டும், காட்டிற் புகுந்து தப்ப நினைத்தால் அங்குள்ள புலியைக் கண்ணுற்றும் அஞ்சுகின்றனர்.

மும்முடிச்சோழன் ஒருவனே தன்னைப் பணியும் சிற்றரசர்களை இடுக்கண்ணிலிருந்து காப்பாற்றுபவனாகவும் பகைவர்களை பகலவனைப்போல சுடுபவனாகவும், மங்கையர்களின் மனங்கவர்ந்து அவர்களை மகிழ்வூட்டுவதில் மன்மதனைப் போன்றவனாகவும் விளங்குகின்றான்.

குறைவற்ற செல்வச்செழிப்பாலும், அறுபத்தினான்கு வகைப்பட்ட கலைகளின் சிறப்பாலும், அறிவுநூற் கல்வியாலும் பெருமைப் பெற்றுள்ள இந்த மன்னனே என்றென்றும் சோழ நாட்டை ஆள்வானாக ! *- என்பதாகும்.*

தஞ்சை அரண்மனையில் இருந்த தலைமை மாளிகையின் பெயர் **இருமுடிச்சோழன்** என்பதாகும். இந்த அரண்மனையின் திருமதில் **மும்முடிச்சோழன்** எனப் பெயர்பெற்றிருந்தது. மேலே கண்ட கற்றூண் பாடல்கள் மும்முடிச்சோழன் 'இராஜராஜன்' என்றே சுட்டுகின்றன. இவையனைத்தையும் தொகுத்து நோக்கும்போது, இக்கல்வெட்டுத் தூண் இராஜராஜனின் அரண்மனையைச் சேர்ந்ததாகவே இருந்திருக்க வேண்டுமென்பதைத் தெளிவாக ஊகிக்க முடிகிறது. மேலும் சேர, பாண்டிய நாடுகளை அப்பேரரசர் வென்று "மும்முடிச்சோழன்" என்று விருது சூடிக்கொண்ட வெற்றி விழாவின் ஜயஸ்தம்பம் இதுவாகத்தான் இருத்தல் கூடும் என நம்ப முடிகிறது. இதனால் இன்றைய தஞ்சையின் சீனிவாசபுரம், இராசராசன் நகர் ஆகிய பகுதிகளே சோழர்களின் அரண்மனை இருந்த இடம் எனக் கொள்ளலாம்.

இதனை மேலும் வலியுறுத்தும் வண்ணம் இக்கற்றூண் கிடைத்த இடத்திற்கு அருகிலேயே செங்கற்கட்டுமானப் பகுதியின் சில தடயங்களும் இருந்தன. இப்பகுதி முழுவதிலும் முழு அளவில் முறையாக அகழாய்வு மேற்கொண்டால் அரண்மனைப் பற்றி மேலும் பல புதிய செய்திகளை அறிய இயலும்.

2. தஞ்சைப் பெரியகோயில் கல்வெட்டு:

தஞ்சைப் பெரியகோயிலில் உள்ள மாமன்னன் இராஜராஜனின் கல்வெட்டுக்களில் ஒரு கல்வெட்டு நீங்கலாக மற்ற கல்வெட்டுகளனைத்தும் அம்மன்னனின் கோயில் நிர்வாகம் பற்றியே பேசுகின்றன. ஆனால் தனிச்சிறப்பு வாய்ந்த இக்கல்வெட்டும் 1980 ஆம் ஆண்டு என்னால் படிக்கப்பெற்று வரலாற்று உலகிற்கு அறிமுகம் செய்யப்பெற்றது. இக்கல்வெட்டு 4 பாடல்கள் கொண்டது. முதல் இரண்டு பாடல்கள் தமிழ்ப் பாடல்களாகும். பின்னைய இரண்டும் சமஸ்கிருதப் பாடல்களாகும். "சுனங்காமுலையுடை உமைபங்கற்கு" எனத்தொடங்கும் தமிழ்ப் பாடல் இராஜராஜனின் கீர்த்திகளுக்கு உமையொருபாகனாகிய சிவபெருமானின் கருணைதான் காரணம் என்று கூறுவதோடு, அவன் கேரளநாடு நோக்கி படை எடுத்துச் சென்றது புற்றிலிருந்து எழுந்த நாகம் போல் இருந்ததென்றும் தெரிவிக்கின்றது. மேலும் இராஜராஜனை **'அருண்மொழி'** என்ற இயற்பெயரால் குறிப்பிடும் கல்வெட்டும் இதுவேயாகும். சமஸ்கிருதப் பாடலில் மேலைக்கடலோரம் சேரனை வென்று இராஜராஜன் நின்றபோது அக்கடலலைகள் அவனது பாதத்தில் வந்து வீழ்ந்து வீழ்ந்து 'உனது பாதாரவிந்தங்களுக்குச் 'சரணம் சரணம்' என்று கூறுகின்றன என்று விவரிக்கப்பெற்றுள்ளது.

சீனிவாசபுரம் தூண் கல்வெட்டை முதன்முதலாகக் கண்டு நான் காப்பாற்ற முயலவில்லை என்றால் அன்றே அக்கல்வெட்டுத் தூணில் உடைக்கப்பட்ட பகுதிகள் கட்டடத்தின் அடித்தளமாக (அஸ்திவாரமாக) மாறி மும்முடிச்சோழனாம் இராசராசனின் புகழ்கூறும் வடமொழிப்பாடல்கள் அனைத்தும் பூமிக்கடியில் கட்டுமானத்துள் நிரந்தரமாகப் புதைந்து மறைந்திருக்கும். பெரியகோயில் கல்வெட்டை கண்டறியவில்லை என்றால் அருண்மொழியின் புகழ்கூறும் அருமையான தமிழ் - வடமொழிப் பாடல்களின் சிறப்பினை அறிந்திருக்க இயலாது. இராஜஇராஜனாம் மும்முடிச்சோழனின் கீர்த்தி கூறும் கல்வெட்டுத்தூணை அழிவிலிருந்து மீட்டதின் வாயிலாக சமஸ்கிருத இலக்கியத்திற்கு எள்ளளவேனும் என்னால் சேவை புரிய இயன்றது என்ற நிறைவினை எய்துகின்றேன்.

சரசுவதி மகால் நூலகமும் சமஸ்கிருத நூல்களும்

திருமதி. **கே. இராமதிலகம்**
***நூலகர்* -II**

இந்தியாவிலுள்ள அரிய நூல் நிலையங்களில் ஒன்று சரசுவதி மகால் நூல் நிலையம் என்றால் அது மிகையாகாது. இங்கு, தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், மராத்தி, ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், லத்தீன், கிரேக்க மொழி முதலிய பல மொழிகளிலுள்ள அ ச்சுப் பிரதிகளும், சமஸ்கிருதம், தெலுங்கு, மராத்தி, கிரந்தம் போன்ற மொழிகளில் ஓலைச்சுவடிகளும் கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன. இவற்றில் வரலாறு, மருத்துவம், விஞ்ஞானம், இசை, நாட்டியம், சிற்பம், சமயம், தத்துவம் முதலிய பல கலைகளிலும் சிறந்த நூல்கள் உள்ளன.

மராட்டியர் ஆட்.சி வருவதற்கு முன்னர் நாயக்கர் ஆட்சி நிலவியிருந்தது. அவர்கள் காலத்தில் தெலுங்கு மொழி ஆட்சி மொழியாக இருந்தது. முன்னதாகவே முஸ்லீம்கள் இந்நாட்டில் வேரூன்றி விட்டனர். அவர்கள் ஆட்சி செய்த காலத்தில் இந்துஸ்தானி, அரபி, மொழிகள் வழக்கில் வந்தன. எனவே வடமொழி, தெலுங்கு, இந்துஸ்தானி ஆகிய மொழிகளிடையே தமிழும் வழங்கலாயிற்று. இந்நிலையில் மராட்டிய மொழி பேசும் மராட்டிய மன்னர்கள் தஞ்சையில் ஆட்சி செய்யத் தொடங்கியது அன்னோருடைய மொழி அரசாங்க மொழியாயிற்று.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியிலுருந்து ஆங்கிலேயரின் குறுக்கீடு ஏற்பட்டாதால் ஆங்கிலமும் புகுந்தது. எனவே சமஸ்கிருதம், தெலுங்கு, மராட்டி, உருது, ஆங்கிலம் ஆகிய மொழிகளுடன் தமிழ் மொழியும் கலந்து உறவாடித் தமிழ் நாட்டில் வழக்கில் இருந்து கொண்டிருந்தன என்பது மிகையாகாது.

தஞ்சையில் மராட்டியர்களின் வருகையால் கலாச்சாரப் பரிமாற்றங்கள் உண்டாகி கலாச்சார வரலாற்றிலேயே ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கியது. 25 - 10 - 1799ல் நடந்த ஒப்பந்தப்படி தஞ்சை ஆங்கிலேய ஏகாதிபத்திய ஆதிக்கத்தில் வந்தது. இதற்கு ஈடாக சரபோசிக்கு ஆண்டொன்றுக்கு ஒன்றரை லட்சம் வராகன் அல்லது மூன்றரை லட்சம் ரூபாயும் நாட்டில் கிடைக்கும் வருமானத்தில் ஐந்தில் ஒரு பங்கும் தரவேண்டும் என்றும் ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன்படி 1832ல் சரபோஜி இறக்கும்வரை அளிக்கப்

பெற்றது. 1822ல் காசி யாத்திரை சென்றபோது ஏராளமான சமஸ்கிருத நூல்களைச் சேகரித்து வந்தார். அரிய நூல்களை விலை கொடுத்தும் வாங்கி சேகரித்துள்ளார். இவர் காலத்தில் சுமார் 5000 அச்சு நூல்களும், பல சிறந்த ஓவியங்களும் சேர்க்கப்பட்டன. ஆகையால் இந்நூல் நிலையம் சரபோஜி சரசுவதி மகால் நூல் நிலையம் என்று வழங்கப் பெற்றது.

மோடி ஆவணக் குறிப்புகளிலிருந்து தஞ்சையில் "சர்வவித்யாசாலா" என்ற பெயரில் கல்வி நிலையம் இருந்ததல் வேண்டும். இதற்கு 1807ல் "நவவித்யா கலாநிதி சாலா" என்ற பெயர் மாற்றம் செய்யப்பெற்றது. இது தஞ்சைக் கோட்டையில் இருந்தது. கி. பி. 1785ல் 85 பேர் அத்தியயனம் செய்தார்கள். ஆறுமொழிப் பள்ளியில் 385 பேர் படித்தனர் எனவும் தெரிகிறது.

கி. பி. 1845ல் பனை ஓலைச் சுவடிகள் எடுப்பவர் அறுவர் இருந்தனர் என அறிய வருகிறது. அங்ஙனமே காகிதப் புத்தகம் எடுப்பவர் அறுவர் இருந்தனர் என மோடி ஆவண குறிப்புகளிலிருந்து அறியவருகிறது. மற்றும் கி. பி. 1834க்குறிய குறிப்பு ஒன்று சரசுவதி மகாலில் புத்தகம் அட்டவணை தயார் செய்திருந்தனர்.

30 - 3 1826ல் பிஷப்ஹீப்பர் என்பவர் தஞ்சையில் இரண்டாம் சரபோஜியுடன் நூல் நிலையத்தை பார்த்தார் என்றும் அங்கு லத்தீன் முதலிய மொழிகளிலுள்ள நூல்கள் 10 அலமாரிகளிலும், மராத்தி, சமஸ்கிருத ஏட்டுச் சுவடிகள் இரண்டிலும் இருந்தனவாக குறிப்பிடுகிறார்.

"குப்பா பட்லு" என்ற தெலுங்கர் நூல் நிலைய அலுவலராக பணியாற்றியவர் எழுதிய குறிப்பில் "1871ல் மார்ச் 24ல்" பர்னல் துரை புத்தகங்களைப் பார்த்து நம்பர்கள் போட ஆரம்பித்தது" என்ற குறிப்பில் அறியவருகிறது.

இதன்படி 24 - 3 1871ல் ஏ. சி. பர்னல் நூல் நிலைய அட்டவணை தயாரிக்கத் தொடங்கினார் என்றும் 13 - 5 - 1871ல் சேகரன் என்பான் உதவியாளனாக நியமிக்கப்பெற்றான் என்றும் அறியவருகிறது. பர்னல் எடுத்துச்சென்றதிலிருந்து திரும்பித்தந்தவற்றையும் தனியே குறிப்பு எடுக்குமாறு பணித்தார் என்று தெரிகிறது. நூல் அட்டவணை தயாரிக்குங்கால் 17 - 7 1871ல் பர்னலுக்கு சில சமஸ்கிருத அச்சுப் புத்தகங்கள் இனாமாக வழங்கப்பட்டன. அந்நூல்களாவன: குமார சம்பவ சம்பு, தருக்க சாஸ்திரம், தருக்க சங்கிரகம், தருக்க சங்கிரக தீபிகை, சித்தாந்த முக்தாவளி என்பனவாம்,

சமஸ்கிருதம் என்பது இந்தியாவின் முதுமொழிகளில் ஒன்று. இது இந்தியாவின் பொதுமொழி. மொழிகளின் ஆராய்ச்சியிலே ஒப்பு மொழியியல் (Comparative Philology) என்ற புதுத்துறையானது கி. பி. 1786ல் சர். வில்லியம் ஜோன்ஸ் என்பவர் சமஸ்கிருதத்தைப் படித்து அம்மொழிக்கும் ஐரோப்பிய மொழிகளுக்கும் உள்ள தொடர்பை கண்டுபிடித்ததாலேயே ஏற்பட்டதாகும்.

ஜோன்ஸைப் பின்தொடர்ந்து கோல் புரூர், பாப், கிரீம் மாக்ஸ் முல்லர், புருக்மன், விட்னி முதலிய மொழிப் புலவர்கள் இமமொழியாராய்ச்சித்துறையில் மேலும் பாடுபட்டு இந்தோ ஐரோப்பிய மொழிகளுக்குள்ள பொது இயல்புகளைச் சேர்த்து இம்மொழிக் கூட்டத்தின் மரபாக இருக்கும் இலக்கணங்களை வகுத்து இக்குடும்பத்துக்குள்ளே வரும் உலக மொழிகள் இன்னின்னவென்று காண்பித்தார்கள்.

மனப்பாடத்தையே முக்கியமாகக் கருதிய இந்த சமஸ்கிருத இலக்கியத்தில் மனப்பாடத்திற்கு உதவும்படி அந்தந்த துறையில் சுருக்கமான சொற்களால் ஆன சூத்திரங்களை செய்து அவற்றின்மூலம் இலக்கியத்தை காத்து வந்தனர். பாணினி தம் இலக்கணம் முழுவதும் சுமார் 4,000 சூத்திரங்களில் அடக்கினார். இதுபோலவே நிகண்டு, விஞ்ஞானம் முதலிய துறைகளில் மனப்பாடத்திற்கு உதவும்படி நூல்கள் செய்யுள் நடையில் எழுதப்பட்டன.

சமஸ்கிருத கட்டுரைகள், சமஸ்கிருத கத்ய காவியம், கண்ட காவியம், சம்பு காவியம், மகா காவியம், கௌடில்யர் அர்த்த சாஸ்திரம், அலங்கார சாஸ்திரம், ஆகமம், இதிகாசம், இராமாயணம், வால்மீகி இராமாயணம், உபநிடதம், காளிதாசன், கீதை, சுக்ர நீதி, தர்ம சாஸ்திரம், நீதி நூல்கள், பாரதம், பிரமாணங்கள், புராணம், வியாகரண சாஸ்திரம், வேதம், நிகண்டுகள் முதலியனவாகும். முக்கியமான நூல்களுக்கும், ஆசிரியர், முனைவர், அறிஞர்களுக்கும் தனிக்கட்டுரைகள் உண்டு. நாடகம், சிற்பம் முதலிய கலைகளிலும் சமஸ்கிருத நூல்களில் கருத்தரங்குத் தனிக் கட்டுரைகள் உண்டு.

உ. த. 1835ல் அச்சிடப்பெற்று வெளியிடப்பெற்ற "தாரித்ர்ய துக்க தஹனாஷ்டகம்" எனும் சிறிய ஸ்தோத்திரமடங்கிய சிறிய நூல்ஆதிசங்கரர் அருளிச் செய்ததாக அறியவருகிறது.

"History of Sanskrit Litt. C (1968) by Max Muller

தமது நூல் குறிப்பிடும் பொழுது (இதன் முதல் பதிப்பு இந்நூலகத்தில் உள்ளது)

இதில் Max Muller இம்மொழியைப் பற்றி

"I wii not begin with the argument that Sanskrit literature is as great as Greek literature. Why should we always compare? The study of Greek literature has iits own purpose, so has the study of Sanskrit. But I am convinced and i hope to convince you also, that Sanskrit, when studied in the spirit, is full of human interest, full of teaching, which even Greek can not give us.

- Max Muller

"Kavya Praksa" என்னும் நூல் Benareesல் 1898ல் அச்சிடப்பெற்றுள்ளது. இது போன்று பல அரிய சமஸ்கிருத நூல்கள் நூலகத்தில் உள்ளன.

மற்றும்

Sanskrit Malayalam Dictionary
Sanskrit - Tamil
Sanskrit - Hindi
Sanskrit - Kannada
Sanskrit - Marathi
Sanskrit - English

போன்று சமஸ்கிருதத்திலிருந்து பல்வேறு மொழிகளில் அகராதிகளும் உள்ளன எனக் கூறி வாய்ப்பளித்தமைக்கும் வாய்மொழிகேட்ட உங்கள் அனைவருக்கும் எனது நன்றியைக் கூறி முடிக்கிறேன்.

நன்றி. வணக்கம்.

ஸ்ரீவைகானஸ பகவத் சாஸ்த்ரத்தின் பழமையும், சிறப்பும்

S. சுதர்ஷன்
நூலகர் -II

கருணாம்ருத பூர்ணாய காமிதார்த்த ப்ரதாயினே ।
ப்ரஸ்துத க்ராமவாஸாய குருவர்யாயதே நம: ॥
கலிவராத்மஜம் காமதாயகம் கேசவார்ச்சிதம் வேதநாயகம் ।
ஸுரவரப்ரியம் ஸுந்தரானனம் கரக்ருதாஞ்ஜலிம் சௌரிஜம் பஜே ॥

ப்ரளயத்தில் ஆலிலைமேல் பள்ளிகொண்டிருந்த எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் தன்னுடைய யோக நித்ரையினின்று விழித்து, தன்னுள் லயித்திருக்கும் ஜீவராசிகளின் கூட்டங்களை நினைத்து இதிலிருந்து இந்த ப்ரபஞ்சமானது ஆத்மாக்களால் பல பெயர்களைக்கொண்ட தோற்றங்களாகச் செய்விப்பதாக எண்ணிக்கொண்டிருக்கும் பொழுது அவரது நாபியிலிருந்து பெரிய தாமரை ஒன்று தோன்றியது. அதில் அழகு வாய்ந்த ப்ரம்மா உற்பத்தியானார். அவருக்கு எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் வேத, வேதாங்கங்களை உபதேசரூபமாக அனுக்ரஹித்தார்.

பிறகு கருணையின் கடலான ஸ்ரீமந்நாராயணன் ப்ரம்மாவைப் பார்த்து ஓ ப்ரம்மாவே! உன்னால் ஸகல சராசரங்களும் ஸ்ருஷ்டிக்கப்பட வேண்டும். அப்படி ஸ்ருஷ்டிக்கப்பட்ட உலகத்தின் வளர்ச்சியைக் குறித்தும், அதிலுள்ள ஸாது ஜனங்களை ரக்ஷிப்பதற்காகவும், வேதசாஸ்திரங்களை நிலைநாட்டவும், கெட்டவர்களை அழிக்கவும் நான் அவ்வப்போது அவதரிப்பேன்.

கலியுகத்தில் நிறைந்த மாயையினால் ஸம்ஸார ஸாகரத்தில் பிறந்த ஜீவன் மனதை நிலைநிறுத்தி யோக சாதனத்தைக்கொண்டு பக்தி செலுத்த அறியாதவர்கள். ஆகையால், அவர்களுக்கு மோக்ஷத்தைக் கொடுக்க வேண்டியும், ஸர்வலோகத்திலும் பக்திமார்கத்தைப் பெருக்கவேண்டியும் பூலோகத்தில் நான் ஸ்ரீதேவி பூமிதேவி ஸமேதராய் திவ்யமங்கள விக்ரஹ (அர்ச்சா) ரூபமாய் அவதரிக்கப்போகிறேன். அப்பொழுது என்னை ஆராதிப்பதற்காக ஒரு முனிவரை ஸ்ருஷ்டிப்பாயாக! என்றுக் கூறினார்.

ஸ்ரீமந்நாராயணனின் இந்தக் கட்டளையை ஏற்று அதன்படி ஒரு முனிவரை ஸ்ருஷ்டிக்க எண்ணி, முடியாதபடியினாலே தனது இயலாமையை அறிந்து பகவானை நமஸ்கரித்து ப்ரம்மாவானவர் சொல்லிக்கொள்கிறார். இதனைக் கேட்ட ஹரியானவர் தன்னை ஆராதனை செய்யக்கூடிய சக்திவாய்ந்தவராயும், ரூபலக்ஷணங்களுடன் தேஜோமயமானவராயும், சுத்த ஸாத்வீக குணம் பொருந்தியவராயும், முனிவேஷத்துடன், நான்கு கைகளும் சங்கு, சக்கரம், வரத அபய ஹஸ்தங்களும், பத்மமும், ஊர்த்வ புண்ட்ரம் தரித்தவராயும்; கிரீடம், ஹாரம் ஆபரணம், குண்டலம், புஜக்கிரீடம் என்னும் பாஜிபந்தம் ஆகிய அனைத்து ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பெற்றவராகவும்; சிகை, யக்ஞோபவீதம், த்ரிதண்டம், கமண்டலு ஆகியவைகளுடன் கூடியவராகவும் ஒரு முனியைத் தனது மானஸிக புத்ரராக ஸ்ருஷ்டித்து; வேத வேதாங்கங்கள் மற்றும் அனைத்து விஷயங்களையும் உபதேச ரூபமாக அனுக்ரஹித்து; தனது மானஸிக ஸ்ருஷ்டியானபடியால் அவருக்கு " விகனோமுனி " எனப்பெயரும் இட்டார். எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனிடமிருந்து அனுக்ரஹ ரூபமாக ஏற்பட்டதால் இதற்கு " ஸ்ரீவைகானஸ பகவத் சாஸ்த்ரம் " என்றும், விகனஸாசார்யன் மூலமாக அனுக்ரஹிக்கப்பெற்றதால் " ஸ்ரீவைகானஸம் " என்றும் பெயர்கள் வழங்கலாயிற்று.

இப்படி பகவான் ஸ்ரீமந்நாராயணனிடமிருந்து உபதேச ரூபமாகப் பெற்ற இந்த பகவத் சாஸ்த்ரத்தை

ச்ரவணேச்ராவணே சுக்ல பூர்ணிமாஸோமவாஸரே|
ஸிம்மலக்னேன ஸம்யுக்தே விகனாத் ப்ராப நைமிசம் ||

என்ற வாக்யத்திற்கிணங்க ஸ்ரீமத்விகனஸரானவர் ஆவணி மாதம், திருவோண நக்ஷத்திரத்தில், சுக்லபக்ஷத்தில், பௌர்ணமி திதியில், திங்கட்கிழமையன்று பூலோகத்தில் நைமிசாரண்யத்தில் அவதரித்து, ஸ்ரீமந்நாராயணனிடமிருந்து உபதேசரூபமாகப் பெறப்பெற்ற அனைத்து விஷயங்களையும் ஒன்றறை கோடி க்ரந்த பரிமாணமாக ஆக்கி ப்ருகு, அத்ரி, காச்யபர், மரீசி என்ற தனது நான்கு சிஷ்யர்களுக்கும் உபதேசரூபமாக அனுக்ரஹித்தார். கலியுகத்தில் புருஷர்களின் ஆயுளைக் கணக்கில் கொண்டு அந்த நான்கு சிஷ்யர்களும் 4 லக்ஷமாக சுருக்கித் தந்தனர். அவர்களில் காச்யபர், மரீசி ஆகிய இரு மஹரிஷிகளும் செய்த க்ரந்தங்கள் உரைநடை வடிவிலும்; அத்ரி, ப்ருகு ஆகிய இரு மஹரிஷிகளாலும் செய்யப் பெற்ற க்ரந்தங்கள் ஸ்லோக ரூபமாகவும் காணக்கிடைக்கின்றன. மரீசி மஹரிஷியால் சொல்லப்பெற்ற பல விஷயங்கள் நடைமுறையில் உள்ளன. காரணம் அவருடைய முறைகள் தெளிவாகவும், அனைவரும் எளிமையாகப் புரிந்துகொள்ளுமாறும் உள்ளது.

இப்படிப்பட்ட உயர்ந்த பகவத் சாஸ்த்ரத்தை அனுஷ்டிப்பவர்கள் ஸ்ரீவைகானஸர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். ஸ்ரீவைகானஸர்களுக்கு

பலவிதமான சிறப்பு அம்சங்கள் உண்டு. அவற்றில் ஒன்றுதான் க்ருஹஸ்தாச்ரமத்திற்கு அடுத்தபடியாக வானப்ரஸ்தாச்ரமம் என்பதாகும். நான்காவது ஆச்ரமம்தான் ஸந்யாஸம். எனவே வானப்ரஸ்தாச்ரமத்தை எடுத்துக்கொண்டவர்களும், விகனஸமஹரிஷியும், சிஷ்யர்களும் வனங்களிலே ஸஞ்சாரம் செய்துகொண்டு வானப்ரஸ்தர்களாய் இருந்து வந்த காரணத்தால் ஸ்ரீமத்வால்மீகி ராமாயணத்தில் பல இடங்களில் ஆதாரங்கள் இருப்பது ஈண்டு நோக்கத்தக்கதாகும்.

தம்தேசம் ஸமதிக்ரம்ய ஆச்ரமம்ஸித்தஸேவிதம் l
ஸித்தா வைகானஸாஸ்தத்ர வாலகில்யாச்சதாபஸா:ll
வந்த்யாஸ்தேது தபஸ்ஸித்தா: தபஸா வீதகல்மஷா: l
ப்ரஷ்டவ்யா சாபி ஸீதாயா: ப்ரவ்ருத்திர்விநயான்விதை: ll

(ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம். கிஷ். காண். 33ஸர்கம் 32, 33 ஆவது ஸ்லோகங்கள்)

ஆகையால் அந்த தேசத்தைக் கடக்கும்பொழுது ஸித்தர்கள் நமஸ்கரிக்கக் கூடிய ஆச்ரமம் ஒன்று உள்ளது. அங்கே ஸித்தியடைந்த ஸ்ரீவைகானஸர்களும், வாலகில்யர்களும் வசித்துக்கொண்டிருப்பார்கள். எட்டு ஸித்திகளையும் அடைந்து பாபத்திலிருந்து விடுபட்டவர்களான அந்த மஹாத்மாக்களுக்கு நீங்கள் அவச்யம் நமஸ்காரங்களைச் செய்து மிகவும் வினயமாக ஸீதாதேவியின் வரலாறுகளைக் கேட்கவேண்டும் என்றும்,

ஹேமபுஷ்கர ஸம்சன்னம் தஸ்மின் வைகானஸம் ஸர: l
தருணாதித்ய ஸங்காசை: ஹம்ஸைர் விசரிதம் சுபை: ll

இளம் சூரியனுடையதான ஒளிக்கு ஒப்பாக ப்ரகாசித்துக் கொண்டிருப்பதாகவும், ச்ரேஷ்டமான அன்னபக்ஷிகளின் இருப்பிடமாயும், பொன்னிறமான சுத்தஜலம் நிறைந்த ஸ்ரீவைகானஸ தீர்த்தம் இருக்கிறது என்றும், அங்கு ஸ்ரீவைகானஸர்கள் வசித்தது காரணமாகவே அந்த தீர்த்தத்திற்கு ஸ்ரீவைகானஸ தீர்த்தம் என்று சொல்லப்பட்டதாகவும் ஊகிக்கமுடிகிறது.

அதேபோன்று கிழக்கு திசையில் ஸௌமனஸ மலைகளில் வசித்ததற்கான ஆதார ஸ்லோகங்கள் கிஷ்கிந்தா காண்டத்தில் உள்ளது.

தத்ர வைகானஸா நாம வாலகில்யா மஹர்ஷய: l
ப்ரகாசமானா த்ருச்யந்தேஸூர்யவர்ணாஸ்தபஸ்வின: ll

என்ற ஸ்லோகத்தின் மூலம் ஸீதாதேவியைத் தேடுவதற்காக கிழக்குதிசை நோக்கி அனுப்பப்பட்ட வினதனிடம் ஸுக்ரீவனானவர் ஸௌமனஸ சிகரத்தில் மஹாதபோதனர்காளாயும் திவ்ய தேஜஸ்ஸுடன் ஜ்வலித்துக் கொண்டும் இருக்கக்கூடிய ஸ்ரீவைகானஸர்களிடமும், வாலகில்யர்களிடமும் ஸீதாதேவியைப் பற்றி விசாரிக்குமாறு ஆக்ஞையிட்டதாக அறியமுடிகிறது.

மேலும் இதே ஆதிகாவ்யத்தில் ஆரண்ய காண்டத்தில் ஆறாவது ஸர்கத்தில்

சரபங்கே திவம்யாதே முனிஸங்கா: ஸமாகதா:
அப்யகச்சந்த காகுத்ஸ்தம் ராமம் ஜ்வலித தேஜஸம் ll
வைகானஸா வாலகில்யா: ஸம்ப்ரக்ஷாலாமரீசிபா: ll
அச்ம குட்டாச்ச பஹவ: பத்ராஹாராச்ச தாபஸா: ll

சரபங்கரின் ஆச்ரமத்தில் ஒருநாள் தங்கி இருந்த ஸ்ரீராமசந்திர மூர்த்தியை தரிசிப்பதற்காக வந்தார்கள் என்று இதன்மூலம் அறிவதால் அச்சமயம் தண்டகாரண்யத்தில் ஸ்ரீவைகானஸர்களும் வசித்திருந்ததாக அறிய முடிகிறது. இதேபோன்று ஸ்ரீமத்ராமாயண பாலகாண்டத்தில்,

ரிஷிபிர் வாலகில்யைச்ச ஜபஹோம பராயணை: l
அன்யைர் வைகானஸைச்சைவ ஸமந்தாதுபசோபிதம் ll

வஸிஷ்டருடைய ஆச்ரமமானது ஜபஹோமம், வேதபாராயணம் முதலிய காரியங்களைச் செய்யும் ஸ்ரீவைகானஸர்களாலும், வாலகில்யர்களாலும் நிறைந்திருக்கிறது என்ற அர்த்தம் கிடைப்பதால் அவர்கள் அந்த ஆச்ரமத்தில் இருந்ததாகத் தெரிகிறது. அந்த காலம் த்ரேதாயுகமானதால் அக்காலத்திலும் ஸ்ரீவைகானஸர்கள் இருந்ததாகத் தெரிகிறது.

மேலும்,

வைகானஸானாம் ஸித்தானாம் ரிஷீணாமாச்ரமப்ரிய: l
உபஸ்ப்ருச்யேஹ விதிவதஸ்யாம் நத்யாம் தபோபலாத் l
மானுஷா தஸ்மிவிஷயாதபேத: பச்ய லோமச : ll
வைகானஸானாம் ஜபதாமேஷ சப்தோ மஹாத்மனாம் ll
த்ருசதம் வை ஸஹஸ்ராணி யோஜனானாம் யுதிஷ்டிர: ll
தத்ரத்வனிம் ச்ருணோம்யேனம் தூஷ்ணீமாஸ்வ விசாம்பதே ll
சைத்யாச்சைதே பஹுவிதாஸ்த்ருதசானான் யுதிஷ்டிர: l
ஏதச்சந்த்ர மஸஸ்தீர்த்தம் ரிஷய: பர்யுபாஸதே ll
வைகானஸா வாலகில்யா: பாவகா வாயு போஜனா: ll

என்பதாக மஹாபாரதத்தில் ஆரண்யபர்வாவில் காணக்கிடைப்பதாலும் இதன் பழமை நன்கு விளங்கும்.

இப்படிப் பழம்பெருமை வாய்ந்த இந்த ஸ்ரீவைகானஸ பகவத் சாஸ்த்ரம் தைவிகம், மானுஷீகம் என்ற இருபிரிவினையும் உடையதாக இருக்கின்றது. இந்த சாஸ்த்ரம் தன்னிறைவு பெற்றது எனில் அது மிகையாகாது.

ஆபஸ்தம்பம், ஆச்வலாயனம், போதாயணம் போன்றதான ஸூத்ரங்களில் சொல்லப்படாத பல ப்ராயச்சித்தங்கள் இன்றளவும் இந்த ஸ்ரீவைகானஸ ஸூத்ரத்தில் சொல்லியுள்ளபடியே நடத்தப்படுகிறது. மேலும் இதிலே படிக்கப்பட்ட மந்த்ரங்கள் நான்கு வேதங்களிலும் காணக்கிடைக்கின்றன.

வேதானாம் வ்யஸனாதர்வாக் ப்ராக்ரூபம் மிலிதம் துயத் |
தாம்துவைகானஸீம் சாகாம் இதிப்ரம்மவிதோவிது: ||

என்ற ஸ்லோகத்தின் மூலம் ஸ்ரீவைகானஸ பகவத் சாஸ்த்ரத்தின் பழமை மேலும் உறுதியாகின்றது.

ஒரு சிறுநிகழ்வு இங்கே குறிப்பிடத்தக்கது:-

ஸ்ரீவைகானஸ ஸூத்ரத்தைச் சேர்ந்த மாணவன் ஒருவன் யஜுர்வேத கனபாடிகள் ஒருவரிடம் தனது ப்ரயோக புஸ்தகம் ஒன்றைக்கொடுத்து அதிலுள்ள மந்த்ரங்களைக் கற்றுக்கொடுக்குமாறு கேட்டுக்கொண்டான். அவரும் அதற்கு இசைந்து சொல்லிக்கொடுக்கும்பொழுது அவருக்கு ஒரு ஸந்தேஹம் ஏற்பட்டது. ஸ்ரீவைகானஸ ஆகமத்தில் சிறந்த ஒருவரை சந்தித்து "யாகுங்கூர் யாசினீவாலீ" என்ற ஒரு மந்த்ரமானது உங்களது ஸூத்ரத்தில் படிக்கப்பட்டுள்ளது. எனக்குத் தெரிந்தவரை யஜுர்வேதத்தில் எங்கும் படிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இங்கு சொல்லப்பட்டுள்ள மந்த்ரம் சரிதானா? அதில் ஏதேனும் எழுத்துப் பிழை இருக்குமா? என்று கேட்க.... அதற்கு அந்த பெரியவர் அடியேனுக்கு அது எந்த வேதத்தில் உள்ளது என்று தெரியாது. ஆனால் அந்த மந்த்ரம் தவறாகக் கண்டிப்பாக இருக்காது என்று பதில் சொல்லிவிட்டு அவர் சென்றுவிட்டார். சிலமாதங்கள் கழிந்தது, ஒருகிராமத்தில் நடைபெற்ற ஸம்ப்ரோக்ஷணையில் அந்த ஊரைச்சேர்ந்த பெரியவர்கள் (ரிக், யஜுர், ஸாமம் என்ற) மூன்று வேதங்களையும் பாராயணம் செய்பவர்களை வரவழைத்திருந்தார்கள். பொதுவாக ஸம்ப்ரோக்ஷணை காலங்களில் ஒவ்வொரு நேர யாகசாலை பூஜை நிறைவிலும் அந்தந்த வேதத்தைச் சேர்ந்தவர்கள் தாங்கள் அப்பொழுது நிறைவு செய்யும் பகுதியை (அந்த மந்த்ரத்தை) பெருமாளுக்கு முன்பு வந்து சொல்லவேண்டும். அப்படி சொல்லும்பொழுது முதல் வேதமான ரிக்வேதத்திலிருந்து "யாகுங்கூர் யாசினீவாலீ" என்ற மந்த்ரத்தைக் கூறினார்கள். அதன்பிறகு அந்த யஜுர்வேத கனபாடிகளுக்குச் சொல்லி சந்தேகத்தை நிவர்த்தி செய்தோம்.

மேலும் இதே பகவத் சாஸ்த்ரத்தில் "மஹாசாந்தி ப்ரயோகம்" என்று ஒரு விசேஷ ப்ரயோகமானது உள்ளது. இதில் அதர்வ வேதத்திலிருந்தும் மந்த்ரங்கள் படிக்கப்பட்டிருப்பது ஈண்டு நோக்கத்தக்கதாகும்.

அர்ச்சாவதாரம் என்று சொல்லக்கூடிய திவ்யமங்கள விக்ரஹ ரூபமாய் எழுந்தருளியிருக்கிற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை ஆராதிப்பதற்காக மந்த்ரங்களைச் சொல்லியுள்ளது மட்டுமின்றி பூமிபரீக்ஷை முதல் கோயில்

நிர்மாணம் மற்றும் உத்ஸவங்கள்; சொல்லப்பட்ட காலங்களில் செய்ய இயலவில்லையாயின் அதற்கான ப்ராயச்சித்தங்கள் என அனைத்தும் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேற்சொன்ன விஷயங்கள் அனைத்தும் வேதத்தின் முற்பகுதியான இஹலோகஸுகங்களை மட்டும் தரவல்லது அல்ல. வேதாந்தம் என்று சொல்லக்கூடிய ப்ரம்ம உபாஸனையுடன் கூட இந்த ஆராதனையும் செய்தால்தான் மோக்ஷத்தை (பிறவாநிலையை =வீடுபேற்றை) அடையலாம் எனவும் இந்த பகவத்சாஸ்த்ரம் எடுத்தியம்புகிறது.

எனவே இம்மண்ணுலகில் அனைத்து ஸுகங்களையும் அனுபவித்து; விண்ணுலகிலும் சென்று பிறவாநிலை அடையவும் வழிசெய்யும் இந்த பகவத்சாஸ்த்ரத்திற்கு ஈடு வேறேதுமில்லை.

மங்களானி பவந்து.

The Glory of Sri Pancharatra

Prof. T. N. Aravamudan

Introduction:

1.I bow down to Lord Sriman Narayana the Prime cause of the world manifestation etc. the treasure of knowledge and the promulgator Sri Pancharatra Agamas.

2.I pay my respects to the President of this Session, to all the audience, those who have come to participate in this event and to all my learned friends.

3.Now, I will try to speak about the all-pervasive Pancharatra literature, in keeping with the time available and my own capacity.

Definition of the word "Agama":

4.The word "Agama" has been derived from the root "gam" (to go) to which the prefix "aang" (aa) is added. This significant word thus brings out in a wonderful way, the nature of this literature.

5.The vedas are called "Nigamas". They are quitewell known as the Rigveda, Yajurveda, Samaveda and the like. The word "Agama" differs from it.

6.The word "Agama" denotes Knowledge that has come from several sources Based on this Knowledge alone, the temples are built for the Lord and worship routines are carried out.

7.The Agamas differ from one another in that each system of religion glorifies a particular deity, they are known as the Vaishnava Agamas, Sakta Agamas and the like.

8.There is a general classification of the Agamas into four Padas called the Jnana Pada, Charya Pada, Kriya Pada and Yoga Pada. This is also quite well known.

9.In the Jnana Pada, are deals with topics like the creation of the universe, the difference between the individual soul and the Supreme Lord etc. Through this the devotion of the individual towards the Lord is enhanced.

10.In the Kriya Pada is a detailed description of the way in which temples are to be built, the images are to be prepared, installed in temples etc.,

11.The Charya Pada deals with the conduct of festivals that are classified as Daily and Occasioned ones, festivals to be conducted every fifteen days, every month, and so on.

12.In the Yoga Pada, we come across a detailed treatment of the Dhyana Yoga by following which the worshipper will attain the kingdom of liberation.

The Vaishnava Agamas:

13. In the Vaishnava Agamas one finds topics like the construction of temples for Lord Vishnu, the methods of preparing the images, the ways of installing them and worshipping them.

14. Thereis a twofold classificatioon of these Vaishnava Agamas-Vaikhanasa and Pancharatra. Those who are knowledgeable in this field have taught us this ancient wisdom.

15. ThreVaikhanasa is the branch of literature, which was taught long ago by Sage Vikhanas to his disciples like Marichi and Atri. The authority of this branch of Agamas is all/-pervasive (unquestioned)

16. Now I am going to deal with the branch of Vaikhanasa Agamas called the Pancharatra. ThIs literature is very vast like in ocean.

Definition of the term "Pancharatra":

17. Friends! The real meaning of the word "Pancharatra" is not quite clear. Many scholars advance different definitions for this word.

18. (a) Lord Keshava (Vishnu) taught in five nights (methods of worshipppping Himself) to five persons like Brahmaa, Sesha, Indra and others (Rishi and Siva). Hence this literature came to be known as "Pancharatra" (according to some Scholars)

19.(b) According to some others, the word "Ratram" means "night". Five kinds of knowledge viz., Sankhya and Yoga (Mimamsa, Dharmasastra and Nyaya) become "night" like (dark) before these Agamas. Hence the name Pancharatra.

20. (c) According to others, this literarure deals with the five aspects of Lord such as "Para" (the Highest in Vaikuntha), "Vyuha" (Emanations such as Vaasudeva, Sankarshana, Pradyumna and Aniruddha), "Vibhava" (Incarnations like Rama and Krishna), Antaryamin (the inner controller) and Archa (the sanctified images of the Lord). Hence the name Pancharatra.

21. In this manner,the definitions of the term Pancharatra are manifold. But one thing that is important is this: This literature was taught by Lord Narayana only directly (but not through any other person).

validity of the Pancharatra:

22. Gentlemen! As things stand in this manner, some scholars do not accept the validity of the Pancharatra literature.

23. The great Mimamsaka Kumarila Bhatta for instance, equated the Pancharatra texts with works of non-Vedic character like Jainism.

24. According to him, there are in a few pancharatra texts, unmistakable clear teachings as to how to kill an enemy, how to make him motionless etc (black magic). So, these texts cannot be Vedic.

25. So the whole body of this literature cannot be held as authoritative. Many who follow Kumarila's view have this objection against the validity of these Agamas.

26. Likewise, Sri Sankaracharya in his commentary on the Pancharatra section (II. ii 39-42) of the Brahmasutra, tried to prove that the Pancharatra is not authoritative.

27. These Agamas state that an individual soul is born.This is a non-Vedic concept. Likewise, there are in these Agamas, instructions to perform many non-vedic activities.

28. That is why, the followers of Sri Sankaracharya areof the view that this Pancharatra Tantra is non-Vedic.

29. Further it is common knowledge that Archakas worship Vishnu for the sake of livelihood, they eat the food offered to Him and use the left over garlands etc. These are condemned as non-Vedic acts in some law texts.)

30. Moreover, the Pancharatra texts ordain a special kind of initiation (Diksha) over and above the Vedic ritual of Upanayana, to enable one to perform worship in the Vishnu temples. These people have no respect in society among people of good conduct.

31. These and similar objections are there against the Pancharatra literature. It is at this juncture that Sre Yamunacharya appeared on the scene.

32. He established the validity of the Pancharatra very efficiently. His work (which establishes this validity) is known as Agamapramanya.

33. In this work, Sri Yamuna refuted all the objections raised by Kumarila and by Sankara.

34-35. Sri Ramanuja, Sri Venkatanatha (Sri Vedanta Desika) and other Srivaishnava Acharyas followed his footsteps a nd safeguarded the validity of the great Pancharatra literarure. They demonstrated that this literature is free from all defects (pointed out by the rivals) and that it is universally acceptable.

36. Sri Yamuna, in his work, advanced two important arguments, which can firmly establish the validity of the Pancharatra texts.

37. (a) This whole body of literature called Pancharatra came out directly from the mouth of Lord Kesava. So is validity is to be accepted by all, as in the case of the Vedas.

37 (b) The Vedas are the breath exhaled by Lord Vasudeva, thereby the Vedas are valid in the same manner, the Pancharatra being the word of His mouth is equally valid.

38. The Mahabharata speaks about the validity of this literature in an incomparable manner. So Vyasa the author is a great admirer of its validity.

39. That beings the case, how could he refute its validity in his Brahmasutra? The fact is that Sankara gave a wrong interpretation for the Pancharatra section of the Brahmasutra.

40. In the whole Pancharatra literature nowhere do we come across the statement that an individual soul is born. However it is said that Sankarshana is the Jiva and that Mind is called Pradyumna.

41. It is of course stated in these Agamas that "Sankarshana is born out of Vasudeva; Pradyumna is born out of Him (Sankarashana) and that Aniruddha came out of Him (Pradyumna)".

42. But as a matter of fact, no reference is made to an individual self here. Reference is made directly to the Supreme Lord. Since He presides over the principle called "Jiva".He is called "Jiva". That is all.

43. Sri Sankara refuted the validity of these Agamas, without properly understanding the Vyuha theroy as stated in these texts.

44. Sri Yamunacharya very ably refuted Sri Sankara's views. He also very ably rejected the objections raised by Kumarila.

45. It is true that a few Agamas refer to black magic rites such as killing a person, making him motionless and the like . Seeing this, Kumarila came to the conclusion that the entire literature is non-valid.

46. Then, following this trend of argument, all the Vedic scriptures also should face such a problem.The fact is that the Pancharatra is just speaking about all kinds of knowledge, like the Veda.

47-48. What it spells out may be good or bad, we are not concerned with it Therefore, having seen in some texts this kind of objectionable practices (like killing) how can one jump to the conclusion that the whole body of literature is invalid? In this manner, Sri Yamunacharya advanced several logical arguments.

49.He proved that the Pancharatra is valid in its entirety. Sri Yamunacharya also advanced another argument in support.

50. There was, in the beginning, one common source for all the four Vedas. It was known as "Ekayana". This is lost and not available now.

51. The Rig and other Vedas are the branches of this mighty tree called "Ekayana" Of these, Sukla Yajurveda forms the source of the Pancharatra.

52. So, those who insist on Vedic Origin for the Agamas, should accept this view and feel contented that the Pancharatra is Vedic in character.

53. In this manner Sri Yumunacharya proved throuth arguments and counter arguments that the validity of the Pancharatra is to be admitted by one and all.

54. It is said that there is no room even to doubt the validity of the Vaikhanasa lilterature because it was taught by Sage Vikhanas.

55. The name of Sage Vikhanas is seen in some Vedas, as the Seer of some Mantras. So his words are accepted as valid by all.

56. Now, on the strength of the arguments advanced by Sri Yamunacharya, the validity of the Pancharatra must be accepted by all people.

57. Thus I have tried in my own way, to give an account of the glory (validity) of the Pancharatra Agamas, from all angles.

58. (Now I wish to conclude with a prayer that my good natured scholarly friends with a large heart, may take into consideration only merit even if it be very little in my speech. Let them not keep in my mind defects in my presentation.

श्रीः

श्रीपाञ्चरात्रवैभवम्

उपोद्घातः

श्रीमन्नारायणं देवं जगज्जन्मादिकारणम् । पाञ्चरात्रप्रवक्तारं वन्दे विज्ञानशेवधिम् ॥ 1

सभाध्यक्षानहं वन्दे तथा सभ्यमहोदयान् । चर्चायां सङ्गतान्सर्वान् प्राज्ञानत्र सुहृद्धरान् ॥ 2

इदानीं पाञ्चरात्राख्यं वाङ्मयं विश्वतोमुखम् । अधिकृत्य प्रवक्ष्यामि यथाकालं यथामति ॥ 3

आगमशब्दनिर्वचनम्

आङ्पूर्वात् गमिधातोश्च निष्पन्न इति चागमः । वाङ्मयं विवृणोत्येतत् पदं सार्थकमद्भुतम् ॥ 4

वेदस्तु निगमःप्रोक्तः ऋग्यजुस्सामभेदतः । प्रसिद्धस्सर्वलोकेषु ततो भिन्नोऽयमागमः ॥ 5

आ समन्तात् समायातं ज्ञानमागमशब्दितम् । भगवन्मन्दिरनिर्माणपूजादीनां च कारणम् ॥ 6

एते चागमाः लोके तत्तद्दैवतभेदतः । भिन्नाः वैष्णवशाक्तादिनामतःसर्वसंश्रिताः ॥ 7

ज्ञानचर्याक्रियायोगपादभेदः प्रवर्तते । सामान्यतः आगमेषु तदेतद्धिश्वविश्रुतम् ॥ 8

ज्ञानपादे विश्वसृष्टिः जीवेश्वरविवेचनम् । निर्दिश्यते विशेषेण येन भक्तिः प्रवर्धते ॥ 9

आलयानां च मूर्तीनां निर्माणं स्थापनं तथा । विविच्यते क्रियापादे विस्तरेण इति सा स्थितिः ॥

नित्यनैमित्तिकानां च पक्षमासादि कालतः । उत्सवानां विशेषास्तु चर्यायां विषयाःस्मृताः॥ 11

योगपादे विशेषेण ध्यानयोगःप्रकाश्यते । अर्चकः येन मार्गेण मोक्षसाम्राज्यमृच्छति ॥ 12

वैष्णवागमाः

विष्णोःमन्दिरनिर्माणं विग्रहाणां च निर्मितिः । तेषां प्रतिष्ठापूजादि वैष्णवागमगोचरः ॥ 13

वैखानसं पाञ्चरात्रमिति तत्र द्वयी गतिः । वैष्णवागमविज्ञानं विज्ञैः प्रोक्तं सनातनम् ॥ 14

विखनोमुनिना पूर्वं मरीच्यत्र्यादिकान् प्रति । प्रोक्तं वैखानसं नाम प्रमाणं सर्वतोमुखम् ॥ 15

इदानीं पाञ्चरात्रस्य वैभवं कथ्यते मया । एतद्वाङ्मयमत्यन्तं विस्तृतं सागरोपमम् ॥ 16

पाञ्चरात्रशब्दनिर्वचनम्

पञ्चरात्रमितीदं भोः पजं न स्पष्टभावकम् । बहुभिः बहुधा तत्र निरुक्तिः कथ्यते बुधैः ॥ 17

पञ्चरात्रिषु तत्प्रोक्तं केशवेन महात्मना । पञ्चभ्यः ब्रह्मशेष इन्द्रप्रभृतिभ्यः तथोच्यते ॥ 18

रात्रशब्दः ज्ञानवाची तस्मात्पञ्चविधं पुनः । ज्ञानं च सांख्ययोगादि रात्रितुल्यमभूदिति ॥ 19

अनेन वाङ्मयेनेति पञ्चरात्रं प्रचक्षते ॥

विष्णोः पञ्चविधं रूपं परव्यूहादिकं पुनः । प्रोच्यते येन तत्केचित्पञ्चरात्रं वदन्ति च ॥ 20

इत्येवं पञ्चरात्रस्य निरुक्तिः बहुधा स्थिता । किन्त्वत्र भगवानेव साक्षाद्वक्ता हरिर्मतः ॥ 21

पाञ्चरात्रस्य प्रामाण्यम्

एवं स्थिते महात्मानः कैश्चित् विद्वन्महोदयैः । पाञ्चरात्रस्य प्रमाण्यं न तावदनुमन्यते ॥ 22

श्रीमान्कुमारिलाभिख्यः मीमांसकशिरोमणिः । पाञ्चरात्रं च जैनादि ग्रन्थतुल्यं इति स्थितः ॥ 23

केषुचित्पाञ्चरात्रीयग्रन्थेषु स्फुटमीक्ष्यते । मारणस्तम्भनादीनामुपदेशः न वैदिकः ॥ 24

तस्मादिदं समस्तं च न प्रामाण्यपदं भजेत् । इति प्रत्यवतिष्ठन्ते बहवः तन्मतानुगाः ॥ 25

तथा श्रीशङ्कराचार्याः सूत्रभाष्ये विशेषतः । पाञ्चरात्राधिकरणं अप्रमाणं न्यरूपयन् ॥ 26

जीवोत्पत्रिं वदन्त्येते आगामाः तदवैदिकाः । एवं चान्येऽपि दृश्यन्ते वेदबाह्यक्रियादयः ॥ 27

अप्रमाणमिदं तस्मात्तन्त्रमित्यभिमन्वते । श्रीमच्छङ्करपादानां मार्गगमिजनाः अपि ॥ 28

अर्चकाः जीवनार्थं तु पूजनादि प्रकुर्वते । विष्णोः नैवेद्यनिर्माल्यभक्षणं चापि कुर्वते ॥ 29

पाञ्चारात्रीयदीक्षां च वेदभिन्नां प्रकुर्वते । समाजे गौरवं तेषां नास्ति शिष्ठेषु किञ्चन ॥ 30

इत्यादि दूषणं तावत्पाञ्चरात्रं प्रति स्थितम् । एवं स्थिते महात्मानो यामुनाचार्यसत्तमाः ॥ 31

प्रामाण्यं पाञ्चरात्रस्य निपुणं प्रत्यपादयत् । आगमप्रामाण्यमिति तन्निबन्धः प्रशस्यते ॥ 32

कुमारिलेन यत्प्रोक्तं शङ्करेणापि यत्कृतम् । सर्वं दूषणजालं तद्यामुनार्यः निराकरोत् ।। 33

तन्मार्गमनुसृत्यान्ये वैष्णावाचार्यतल्लजाः । श्रीमद्रामानुजाचार्याः श्रीमद्वेङ्कटनायकाः ।। 34

पाञ्चरात्रमहाशास्त्रप्रामाण्यं पर्यपालयत् । वाङ्मयं च जगन्मान्यं निराबाधं न्यवेदयन् ।। 35

यामुनार्यः स्वप्रबन्धे मुख्यं युक्तिद्वयं ददौ । येन तत्पञ्चरात्रस्य प्रामाण्यं सुस्थिरं बभौ ।। 36

पाञ्चरात्रमिदं कृत्स्नं केशवस्य मुखोद्गतम् । तस्मात्प्रामाण्यतां याति वेदवत्सर्वसम्मतम् ।। 37

वेदाः विष्णोस्तु निःश्वासः यद्वत्प्रामाण्यमावहन् । पञ्चरात्रं तथा तस्य वाक्यं प्रामाण्यमावहेत् ।। 38

महाभारतमतस्य प्रामाण्य वक्ति निस्तुलम् । व्यासः तस्य प्रणेता च पञ्चरात्रप्रशं प्रशंसकः ।।39

स्वकीये ब्रह्मसूत्रे तत्कथं दूष्यति स्वयम् । पाञ्चरात्राधिकरणं शङ्करेणान्यथा कृतम् ।। 40

जीवोत्पत्तिः न चैवोक्ता पञ्चरात्रे कदाचन । जीवः सङ्कर्षणःप्रोक्तःमनःप्रद्युम्नसंज्ञकम् ।। 41

वासुदेवाच्च सङ्कर्षः तस्मात्प्रद्युम्नसंज्ञकः । अनिरुद्धः ततो जातः इत्येतद्वर्णितं ध्रुवम् ।। 42

न कोऽपि जीवःप्रोक्तोऽत्र साक्षाच्च भगवान् प्रभुः । अधिष्ठाता च जीवानां जीवशब्देन संज्ञितः ।।

व्यूहानां पाञ्चरात्रेषु कथितानां विशेषतः । तत्त्वमेतदविज्ञाय शङ्कराः तददूषयन् ।। 44

इति श्रीयामुनाचार्याः शङ्करोक्तमखण्डयन् । एवं कुमारिलेनोक्तं दूषणं पर्यदूषयत् ।। 45

यत्र क्वापि स्थितं तावन्मारणस्तंभनादिकम् । दृष्ट्वा सर्वमिदं तन्त्रमप्रमाणं यदोच्यते ।। 46

तदा सर्वविधं शास्त्रं वैदिकं दूषितं भवेत् । वेदवत् सर्वविज्ञानं पञ्चरात्रं प्रकाशयेत् ।। 47

दोषो वास्तु गुणो वास्तु तत्र नास्माकं आग्रहः । तस्मात्क्वचित्कमेतादृक् दृष्ट्वा तान्त्रिकवर्णनम् ।।48

कथं सर्वमिदं तन्त्रमप्रमाणं प्रचक्षते । इत्येवं यामुनाचार्याः बहुयुक्तीःप्रदर्श्य ते ।। 49

न्यरूपयन्पञ्चरात्रं प्रमाणमिति सर्वतः । अन्याश्च युक्तिं तेऽवोचन् यामुनार्यमहोदयाः ।। 50

चतुर्णामपि वेदानां एकायनमिति स्थितम् । मूलं किमपि तन्नष्टमिदानीं नोपलभ्यते ।। 51

एकायनमहावृक्षशाखाः वेदाः ऋगादयः । तत्र शुक्लयजुश्शाखा पञ्चरात्रस्य कारणम् ।। 52

तस्मात् वैदिकमेवैतत् इति स्वीक्रियतां बुधैः । वेदस्य मूलतामेव य इच्छन्ति महोदयाः ॥ 53

इत्येवं सर्वसंमान्यं प्रामाण्यं पाञ्चरात्रगम् । युक्तिप्रयुक्तिनिष्पन्नं यामुनार्याः न्यरूपयन् ॥ 54

विखनोमुनितन्त्रं यत् वैखानसमिति श्रुतम् । तत्राप्रामाण्यशङ्कैव नास्तीति प्रतिपाद्यते ॥ 55

वेदेषु केषुचित् तावत् विखनो मुनिरुच्यते । मन्त्रद्रष्टेति तस्मात् तद्वचनं सर्वसम्मतम् ॥ 56

इदानीं यामुनोक्तीनां बलतः सर्वसङ्गतम् । प्रामाण्यं पाञ्चरात्रस्य सर्वमेतत्समञ्जसम् ॥ 57

इत्येवं कथितं सर्वं यथाशक्ति यथाश्रुतम् । पाञ्चरात्रागमानां च वैभवं सर्वतोमुखम् ॥ 58

पण्डिताः सुहृदुत्तंसाः गुणलेशमपि स्थितम् । स्वीकुर्वन्तु महात्मानः दोषं नैव स्मरन्तु मे ॥ 59

इति शम्

வடமொழிச்சார்ந்த தமிழ்ச் சுவடிகள்

திருமதி **S. திலகம்**
தமிழ்ப் பண்டிதர்
சரசுவதி மகால் நூலகம் தஞ்சாவூர்.

உலகப் புகழ் பெற்ற தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் பன்னெடுங்காலமாகத் தஞ்சையை ஆட்சி செய்த மன்னர்களால் சேகரித்து வைக்கப்பட்ட சுவடிகளை இன்றும் நாம் காணமுடிகிறது. கலைமகள் பெயர் தாங்கி அனைத்துக் கலை நூல்களையும் தன்னகத்தே கொண்டிலங்கும் இப்பழமையான நூலகத்தில் ஆயிரக்கணக்கான சுவடிகள் பல்வேறு மொழிகளிள் எழுதி வைக்கப்பட்டுள்ளன. இதனை ஓர் அரிய கலைக் கருவூலம் என்றே கூறுதல் வேண்டும். இங்குள்ள சுவடிகளை ஓலைச்சுவடி, காகிதச்சுவடி என இரு பிரிவாகப் பிரிக்கலாம்.

நம் முன்னோர்கள் புராணம், கதைகள் மற்றும் இலக்கண, இலக்கியம், சோதிடம், சாத்திரம், மந்திரங்கள் பெரும்பாலும் ஓலைகளிலேயே எழுதி வைத்தனர்.

தமிழ்த்துறையில் சுமார் 3000 இலக்கணச் சுவடிகள், 2000 மருத்துவச் சுவடிகளும் உள்ளன. இவற்றில் வடமொழிச் சார்ந்த எழுத்துக்களான கிரந்த லிபி கலந்த மணிப்பிரவாளத்தில் எழுதப்பட்ட சுவடிகள் 200 உள்ளன. இவற்றுள் சோதிடம், இலக்கியம், மருத்துவம் முதலானவைகளும் அடங்கும்.

தமிழைப்போலவே வடமொழியிலும் பக்திப் பாடல்கள் மிக அதிகம். வேத காலத்தில் எழுந்த சுலோகங்கள் தோத்திரப்பாடல்களாகவே விளங்குகின்றன. சிலம்பின் ஆசிரியரான இளங்கோ, கவுந்தியடிகள் வாயிலாக, அருக சமயக் கடவுளின் தோத்திரப்பாடலை அமைத்துக் காட்டுவது போலக் காளிதாசரின் குமாரசம்பவத்தில் பிரமனுக்குரிய தோத்திரங்களும்,இரகுவமிசத்தில் விஷ்ணு பற்றிய தோத்திரங்களும் இடம் பெற்றுள்ளன.

இந்திய துணைக்கண்டத்தில் தோன்றிய தொன்மை வாய்ந்த சமயங்களுள் ஒன்று ஜைன சமயம். அதனை, மகாவீரர் மற்றும் அவரது சீடர்களால் நாடெங்கும் பரப்பப் பெற்றது.

சமணர்கள் சமஸ்கிருத மொழிக்கும், தமிழ் மொழிக்கும் இரு கண்களாக விளங்கிப் பல நூல்களை யாத்தனர். அவற்றுள் ஒன்றாகத் திகழும் நாககுமார காவியம் தமிழ் உரையுடன் உள்ளது. நாககுமார காவியம் 24 காமதேவர்களுள் ஒருவரான நாககுமாரனைக் காவிய நாயகனாகக் கொண்டு ஜைன சமயத்தைச் சார்ந்த "பஞ்சமீ விரதக் கதை"யினை விரிவாக எடுத்துரைக்கின்றது.

தமிழில் வழங்கும் காப்பியத்திற்கிணையாக சமஸ்கிருத மொழியில் விளங்கும் நாககுமார காவியம் சரசுவதி மகால் நூலகத்தில் வடமொழித்துறையில் உள்ளது. (Green No. 880, 2806) முதற் சுவடி கிரந்த எழுத்திலும், இரண்டாம் சுவடி கிரந்த எழுத்தின் மூலமும், தமிழில் உரையும் கொண்டதாக உள்ளது. இந்நூலின் மூல ஆசிரியர் மல்லிசேனர் என்பவராவார். இந்நூலை நூலகப் பண்டிதர் முனைவர் ஆ. வீரராகவன் என்பவர் பிறமொழி நூலகளுடன் ஒப்பிட்டு சமஸ்கிருத நூலும், அதன் தமிழ் எழுத்தாக்கமும் கொடுத்து நிறைவுப் பகுதியாக சுலோகங்களின் அகரவரிசைப் பட்டியல் துணை நூற்பட்டியல் ஆகியவை இணைத்தும் சிறப்புறப் பதிப்பித்துள்ளார். அவருடைய இப்பதிப்பு நாககுமாரனைக் குறித்து ஆய்வு செய்பவருக்கும், சமண சமயத்தாருக்கும் பெரிதும் பயன்படும் வகையிலும் அமைந்துள்ளது.

நூலகத் தமிழ்துறையில் உள்ள சுமார் 300க்கும் மேற்பட்ட மணிப்பிரவாளச் சுவடிகளில் மிகவும் சிறப்பு வாய்ந்த சுவடி "திருவாய்மொழி வாசகமாலை" என்னும் விவரண சதகம் என்னும் நூலாகும். இதன் ஆசிரியர் கோனேரி தாஸ்யை என்பவர். திருக்கோனேரி தாஸ்யை என்று தன் பெயரை, இவ்வாசிரியர் தாமே நூலின் முடிவில் குறிப்பிட்டுள்ளார். இந்நூல் நூலக சமஸ்கிருதப் பண்டிதராக இருந்த நாவல்பாக்கம் தேவநாதாச்சாரியாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

நூலின் ஆசிரியர் தன்னை தாஸ்யை என்று கூறிக்கொள்வதனாலும், அடிமை செய்தாள் என்று கூறிக்கொள்வதனாலும் இவர் ஒரு பெண்பாற்புலவர் என்பது மட்டும் புலனாகின்றது. இன்று இந்நூல் நம்மிடையே இருப்பது, நாம் செய்த பெரும் பாக்கியமேயாகும்.

கோனேரிதாஸ்யை என்பவர் தான்கேட்ட காலட்க்ஷேபச் செய்திகளைத் தொகுத்து, பிற்கால சந்ததியினருக்குப் பயன்படும் வகையில் ஓலைச்சுவடியில் பதியச் செய்தமையும், தஞ்சாவூர் சரசுவதிமகால் நூலகம் அதனைப் பதிப்பித்துள்ளமையும் பாராட்டத்தக்கது. இந்த திருவாய்மொழி வாசகமாலை 1102 செய்யுட்களைக் கொண்டதாகும். வாசகமாலை நூல் வடிவம் பெற திருவாய்மொழி உரையான வடக்குத் திருவீதி பிள்ளை

இயற்றிய ஈடு முப்பத்தாராயிரப்படி ஒரு காரணம் என்றும், இந்நூல் ஆங்கீரஸ வருடம் - மார்கழி மாதம் 26ந்தேதி எழுதி முடிக்கப்பட்டுள்ளதென்றும், நூலின் பதிப்பாசிரியரான நாவல் பாக்கம் தேவநாதாச்சாரியார் குறிப்பிட்டுள்ளார்.

இந்நூல் உயர்வுற உயர்நலமுடையவன் எவனவன் என்ற திருவாய்மொழி முதற்பாட்டைக் கொண்டே அதனுரையாக மற்ற பிற பாடல்களையும் ஒருங்கவிட்டு விடலாம் என்பது இந்நூலாசிரியரின் தனிப்பெருங் குறிக்கோள் எனலாம். இதனை நிலைநாட்டிச் சென்ற நூலாசிரியர் "விவரண சதகம்" என்ற இவ்வாசகமாலை அபர்யாப்தாம்ருதன் (ஆராவமுதன்) திருவடிகளிலே சமர்ப்பித்ததாய்க் குறிப்பிடுவதால் குடந்தைக் கிடந்தானிடம் மிகுந்த அன்பு பூண்டவர் என்பது உறுதியாகிறது. மேலும் மற்றுமொரு சான்றாக "ஆராவமுதே" எனத் தொடங்கும் பதிகத்தில் கிடந்த திருக்கோலத்தில் ஆராவமுதனையும், நம்மாழ்வாரையும் சுவடியில் கீறல் ஓவியமாகக் காணமுடிகிறது. இன்றும் இவ்வோவியத்தை நூலக அருங்காட்சியகப் காட்சிப் பேழையில் காணலாம்.

திருவாய்மொழியில் உபதேசிக்கப்படும் முக்கியக்கொள்கைகளாகக் கூறப்படுவன

1. காண்பனவும், கேட்பனவுமாகிய எல்லாப்பொருட்களும் இறைவனுடைய சொத்தாகும். அவனொருவனே இவை யாவற்றுக்கும் உடையவன்.

2. எல்லாம் அவனால் தரிக்கப்பட்டும், தன்னிஷ்டம்போல் இயக்கப்பட்டும் அவனை விட்டுத் தனித்து இருக்க முடியாதனவாகவும், இருத்தலின் அவனுடைய உடம்பாகும். அவனே எல்லாவற்றுக்கும் உயிர். அவனுக்கு அன்புடன் அடிமைசெய்துக் கிடப்பதே நமக்குரிய பேரின்பமாகும்.

3. ஆனந்தமயமான இறைவன் அன்பிற்கே கட்டுப்படுவான். வேறுவழியில் அவனைப் பிடிக்க முடியாது.

4. இதற்கு முக்கிய விரோதியானது அகங்காரமும் மமகாரமும். (நான், என்னுடையது என்னும் எண்ணம்) இதை வேரறக் களைந்தெறிய வேண்டும். இது போன்ற கொள்கைகள் இன்னும் எத்தனையோ காணப்படுகின்றன.

இதுபோன்று மற்றொரு சுவடி "வைத்தியநாத சுவாமி திருவிளையாடல்" என்னும் சுவடியாகும். இச்சுவடி தமிழ்த்துறையில் M. No. 374 எண்ணைக் கொண்டது. இச்சிறு புராண நூல் சூத முனிவரால் சௌனகாதி முனிவர்களுக்குக் கூறப்படுவதாய்

அமைந்துள்ளது. இந்நூலின் கதைகள் யாவுமே வன்னிவன நாதரைப் பற்றியே அமைந்துள்ளன. இந்நூலின் ஆசிரியர் இன்னாரெனக்கூறப்படவில்லை. சமஸ்கிருதச் சொற்கள் கலந்த கொச்சையான பேசுந் தமிழில் யாவரும் எளிதில் அறியத்தக்க வண்ணம் அமையப்பெற்றுள்ளது.

இதில் வன்னிவன சேத்திர மகிமை, பெண்ணுக்கு மாங்கலியப் பிச்சைக் கொடுத்த லீலை, வன்னி வனத்திற்கு மிருத சஞ்சீவி வனம் எனர் பெயர் வரக் காரணம், ஆமுகம் தீர்ந்தது போன்ற 15 திருவிளையாடல்கள் கூறப்பட்டுள்ளன. இந்நூலினை நூலக வாயிலாக நான் பதிப்பித்துள்ளேன்.

மேலும் தமிழ்த்துறையில் ஜைன சமயத்தொடர்புடைய சுவடிகளும் மணிப்பிரவாள நடையில் உள்ளன. தீபாவளி நோன்புக் கதைகள், ஜீவதயாஷ்டமி நோன்புக் கதைகள், சௌபாக்கிய நோன்புக் கதைகள் கௌமுதிக் கதைகள், அப்டாஸ்கச் சரிதம், திரிலோக சாரம், லோக சுரூபம், சோபன மாலை போன்ற நூல்களாகும். இந்நூல்களில் ஒன்றான கௌமுதிக் கதைகள் என்ற மணிப்பிரவாளச் சுவடியை நூலக, சமஸ்கிருதப் பண்டிதரான திருமதி ராஜலட்சுமி பதிப்பித்துள்ளார். இந்நூல் தமிழ்ப் பிரிவில் சுவடி எண் 1078க் கொண்டுள்ளது. இது சௌரதேசத்து ராஜாவான பத்மமாதயன் கதையைப் பற்றிக் கூறுவதாக அமைந்துள்ளது.

மற்றும் சோதிடம், கணிதசாரம், வைத்திய சிந்தாமணி போன்ற மருத்துவ நூல்களும், மந்திரம், மாந்திரீகம் போன்ற நூல்களும் மணிப்பிரவாள நடையில் உள்ளன.

நூலகத்தில் வள்ளுவனும், வியாசரும், கம்பரும்-காளிதாசரும், இளங்கோவடிகளும், கிருஷ்ணதேவராயரும், தொல்காப்பியரும், பாணினியும், சேக்கிழாரும், சூதமுனிவரும் சுவடி வடிவில் கூடி மகிழ்ச்சியுடன் குலாவிக் கொண்டிருக்கின்றனர். நூலகத்தைக் காணவரும் பெருமக்களும், ஆராய்ச்சிக்கு வரும் அறிஞர் பெருமக்களும் இலக்கியச் சுவையை சுவைப்பதுடன் இந்தப்பண்பின் படிப்பினையையும் நாம் ஏற்றுக்கொள்வோம். அப்பொழுதுதான் சரசுவதி மகால் நூலகத்தை ஸ்தாபித்தவரின் குறிக்கோள் நிறைவேறும் என்று கூறிக்கொள்வதுடன், கட்டுரையை நிறைவு செய்து, வாய்ப்பளித்த சமஸ்கிருதத் துறைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

தஞ்சை மராட்டியர் வரலாறு கூறும் சமஸ்கிருதச் சுவடிகள்

எஸ். இராஜலக்ஷ்மி, எம்.ஏ., பி.எல்.ஐ.எஸ்.,
சமஸ்கிருதப்பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம்

முன்னுரை

நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சிக்குலாவும் தஞ்சையம்பதியில் சோழப் பேரரசுக்குப் பின்னர் 15-ஆம் நூற்றாண்டு தொடங்கி நாயக்க மன்னர்களின் ஆட்சி நிலவத்தொடங்கியது.

கி. பி. 1676 முதல் தஞ்சையில் மராட்டிய மன்னர் ஏகோஜி என்கிற வெங்கோஜி முடிசூட்டிக்கொண்டார். பின்னர் இவருடைய புதல்வர்களும் முறையே ஒருவர்பின் ஒருவராக இத்தஞ்சையை அரசு புரிந்தனர். இவர்கள் போசல குலத்தைச்சார்ந்தவர்கள்.

போசலகுல மராட்டிய மன்னர்களின் ஆட்சியில் தஞ்சை மண்டலம் ஒரு சிறந்த கல்விக் கேந்திரமாக விளங்கியது. ஸம்ஸ்க்ருதம், தமிழ், தெலுங்கு, மராட்டி ஆகிய பன்மொழிப் புலவர்களால் எண்ணிறந்த நூல்கள் படைக்கப்பட்டன. இவர்கள் இயற்றிய நூல்களில் ஆங்காங்கே மன்னர்களாற்றிய பணிகளையும் தொண்டுகளையும் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. இச்செய்திகள் தஞ்சை மராட்டிய மன்னர்களின் வரலாற்றை அறிய உதவுகின்றன. அவற்றை இனிக் காண்போம்.

தீபாம்பா மாஹாத்ம்யம்

முதலாம் ஏகோஜியின் பட்டத்து இராணியாக விளங்கியவர் தீபாம்பாள். இவரது வரலாற்றுச் செய்திகளைக்கொண்டு எழுதப்பட்ட நூலே 'தீபாம்பா மாஹாத்ம்யம்' என்னும் சிறுகாப்பியமாகும்.

தஞ்சை மராட்டிய அரசின் சரித்திரத்தில் மிக முக்கியமான இடத்தைப் பெற்றிருப்பவரும், மராட்டிய மன்னர்களின் வாழ்வுக்கும், வரலாற்றுக்கும் ஓர் ஒளிவிளக்காகவும் திகழ்ந்தவர் அரசி தீபாம்பாள். அரசி தீபாம்பாளின் வேண்டுகோளின்படி அமைச்சர் த்ரயம்பகராயமகி ஸ்த்ரீதர்மபத்ததி என்னும் நூலை இயற்றி அரசரிடம் சமர்ப்பித்தார். இதை பெற்ற அரசி தீபாம்பாள் அரசவை புராணிகரான துண்டிவியாசர் என்பவர் மூலமாக மக்களிடையே பரவச்செய்தார்.

சாஹேந்த்ர விலாசம்

இந்த நூலை இயற்றியவர் ஸ்ரீதரவேங்கடேச அய்யாவாள் ஆவார். இவர் சம்ஸ்க்ருத மொழியில் சிறந்த புலமைபெற்றவர். சகஜியின் அரசவைப் புலவராக விளங்கியவர். சாஹேந்திர விலாசம் என்னும் இந்நூல் சிறுகாப்பியம் எனினும் இம்மன்னன் காலத்தில் நடைபெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செய்திகள் பிணைய யாத்துள்ளமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

தஞ்சை மன்னன் சகஜியின் உதவியைச் சேதுநாட்டு மன்னன் கிழவன் சேதுபதி வேண்டினான். அவனது வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட மன்னன் சகஜி தனது படையைப் போருக்கு அனுப்பினான். அந்தப்போரில் தஞ்சைப்படைகள் வெற்றிபெற்றன. இதனால் மகிழ்ந்த சேதுபதி அவ்வெற்றியைக் கொண்டாட ஒருவிழா ஏற்பாடு செய்தான். அவ்விழாவிற்குத் தனது தாய் தீபாம்பாளுடன் மன்னன் சென்றிருந்தான். தனது வெற்றிக்கு உதவிய சகஜி மன்னனுக்கு அடையாளமாக அறந்தாங்கி வரையுள்ள பகுதிகளைத் தஞ்சைக்குக் கொடுத்ததாகவும், பின்னர்ச் செஞ்சியின்மீது ஔரங்கசீப் படையெடுக்கும் செய்தியினை அறிந்த சகஜி தனது படையைச் செஞ்சிக்கு அனுப்பி அவர்களுக்கு உதவியாகப் போர்புரியச்செய்து வெற்றிபெறச் செய்தான் என்பது போன்ற பல வரலாற்றுச் செய்திகளும், மேலும் தஞ்சை அரண்மனையின் கட்டிட அமைப்புகளைப் பற்றிய செய்தியும், தர்பார் வர்ணனை போன்ற பிற செய்திகளும் இந்நூலில் காணக்கிடைக்கின்றன.

தர்ம விஜய சம்பூ:

இந்த நூலில் இரண்டாம் சகஜி மன்னரின் ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் குறிப்பிடப்பெற்றுள்ளன. இந்நூல் சகஜி மன்னர் காலத்தில் நடைபெற்ற இசைவிழாக்கள், நாட்டியங்கள், நாடகங்கள் போன்றவைகளைப் பற்றியும், அக்காலத்திய புலவர்களைப் பற்றியும் விவரிக்கின்றது. பொதுவாக இந்நூல் இலக்கியம் பற்றி ஆராய்வோருக்குப் பெரிதும் பயனளிக்கும்.

இந்துமதீ பரிணயம்:

இந்த நாடகம் தஞ்சாவூர் பெருவுடையார் திருக்கோயிலின் சித்திரைப் பெருவிழாவில் புலவர்களும், பொதுமக்களும் கூடியுள்ள அரங்கில் நடைபெற்றுள்ளது. இரண்டாம் சரபோஜியின் மகன் சிவாஜியின் காலத்தில் இந்துமதீ பரிணயம் என்னும் நாடகம் நடிக்கப்பட்டதாக அறியமுடிகிறது.

கலாநந்தகம்:

இந்த நாடகத்தை இயற்றியவர் ராமசந்திரசேகரர். இவர் இரண்டாம் துளஜாவின் அவைப்புலவர். இவர் காலத்தில் மராட்டியமொழி நாடகங்கள் பல

நடைபெற்றுள்ளன. கலாந்தகம் என்னும் இந்நாடகம் தஞ்சை அரண்மனையில் நடிக்கப்பெற்று மன்னர்களும், அரசவைப் பிரதிநிதிகளும் மற்றும் அரண்மனையில் பணிசெய்பவர்களும் கண்டுகளித்தனர்.

ஸீதாநந்தம்:

இந்த நாடகம் கும்பகோணத்தில் உள்ள கோமளவல்லி உடனுறை சாரங்கபாணி ஸ்வாமி ஆலயத்தில் நடைபெற்ற சித்திரைப் பெருவிழாவில் மக்கள் முன்னிலையில் நடிக்கப்பட்டுள்ளது.

ரதிமன்மத நாடகம்:

இந்த நாடகத்தை இயற்றியவர் ஜகன்னாதப் பண்டிதர். இந்த நாடகம் தஞ்சை நகருக்கு அருகிலுள்ள வெண்ணாற்றாங்கரையில் ஆனந்தவல்லி உடனுறை தஞ்சபுரீச்வரர் ஆலயத்தில் நடைபெற்ற வசந்தோஸ்ச்வத்தில் மக்கள் முன்னிலையில் நடைபெற்றது. இந்நாடகத்தை இயற்றிய ஜகன்னாதப் பண்டிதர் முதலாம் சரபோஜியின் மீது சரபராஜ விலாஸம் என்ற இலக்கியத்தை இயற்றியுள்ளார்.

போசல வம்சாவளி சம்பூ:

தஞ்சை மராட்டிய மன்னர்களின் மூன்றாவது மன்னராகத் திகழ்ந்தவர் முதலாம் சரபோஜி (கி.பி.1711-1729). இவர் தமது ஆட்சிக்காலத்தில் பின்வரும் சந்ததியினர் வளமும் பெருமையும் பெறத்தக்க பல்வேறு பணிகளை நிறைவேற்றியுள்ளார். அவற்றுள் கரிகால்பெருவளத்தான் எழுப்பித்த கல்லணையைச் செப்பனிட்டதும், தஞ்சைப் பெரியகோவிலுக்குக் குடமுழுக்கு செய்வித்ததும் குறிப்பிடத்தக்கவை. அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த மாமன்னர் சரபோஜியின் புகழ் காவியமாக எழுதப்பட்டுள்ளது.

அரசர்கள் கல்வி, கலையில் கொண்ட ஈடுபாடு, அவர்கள் பயின்ற போர்ப்பயிற்சிகள் முதலியன குறிக்கப்படுகின்றன.

உதாரணமாக, அவர்கள் அசைந்துகொண்டேயிருக்கும் இலக்கை அம்பெய்தி வீழ்த்தவும், சக்தி, தோமரம் முதலிய ஆயுதங்களைப் போர்களில் பயன்படுத்தும் முறைகளையும் யானையேற்றம், குதிரையேற்றம் ஆகியவற்றையும் இசை, நாட்டியம், நாடகம் முதலிய நுண்கலைகளின் நுட்பங்களையும், காவியம், அலங்காரம் முதலிய நூல்களையும், இராமாயணம், மகாபாரதம் முதலிய இதிகாசங்களையும், சகுனம், கணிதம், ரத்னபரீக்ஷை, ஓவியம் முதலிய கலைகளையும் கற்று, பன்மொழிகளிலும் சிறந்து விளங்கினர். மன்னர்கள் பட்டத்து யானையான "சத்ருஞ்ஜயம்" என்ற யானையின்மீது ஆரோகணித்து பேரீ, மிருதங்கம், கொம்பு, சங்கு ஆகியவைகள் ஒலிக்க ஊர்வலம் செல்வார்கள்.

அவ்வமயம் மக்கள் மனமகிழ்வுடன் வீதியில் குழுமி இருந்ததாகவும், முத்துகளைத் தோரணங்களாகக்கட்டி இருந்ததாகவும் வாழை, கமுகு, கொடி முதலியவைகளால் தஞ்சை நகரம் அலங்கரிக்கப்பெற்று இருந்ததுவுமாகிய பல செய்திகள் இந்நூலிலிருந்து அறியப்படுகின்றன.

சந்திரசேகர விலாசம்:

இந்த நாடகத்தை இயற்றியவர் தஞ்சை மன்னரான இரண்டாம் சகஜி. பல நாடகங்களை இவர் இயற்றியுள்ளார். தெலுங்கு, மராட்டி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் இசை நாட்டிய நாடகங்களை இயற்றியுள்ளார். பஞ்சபாஷாவிலாஸம் என்னும் நாடகம் ஐந்து மொழிகளில் (சம்ஸ்கிருதம், தமிழ், கன்னடம், தெலுங்கு, மராட்டி) இயற்றப்பட்டுள்ளது. இந்நாடகம் தஞ்சையில் நடைபெற்ற இசை நாட்டிய நாடகத்தின் தொன்மை மரபைக்காத்து நமது ஆராய்ச்சிகளுக்கு சான்றாகத் திகழ்கின்றது.

மோகினி விலாசக் குறவஞ்சி:

இதன் ஆசிரியர் சப்தரிஷி. சகஜி மன்னரைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு இயற்றப்பட்டது. தமிழில் காணப்படும் குறவஞ்சியைப்போல் சம்ஸ்கிருத மொழியில் இயற்றப்பட்ட இக்குறவஞ்சியில் வரும் விருத்தங்கள் தமிழில் உள்ள யாப்புக்களான வெண்பா, அகவல், கலித்துறை, அறுசீர் விருத்தங்களை சம்ஸ்கிருதச் சொற்களைக்கொண்டு புனையப்பட்டுள்ளன.

காந்திமதி பரிணயம்:

இந்த நாடகத்தை இயற்றியவர் சொக்கநாதமகி. இந்நாடகத்தின் கதாநாயகன் தஞ்சை மன்னன் சகஜியே. இந்த நாடகம் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள திருவிடைமருதூரில் கோயில் கொண்டு அருள்பாலித்து வரும் ஸ்ரீமகாலிங்கசுவாமியின் பிரம்மோத்ஸவத்தில் மக்கள் முன்னிலையில் நடிக்கப்பட்டுள்ளதாக இச்சுவடியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் பல சரித்திரச் செய்திகள் உள்ளன.

ஸ்ரீ ராகவாப்யுதயம்:

இந்த நாடகத்தை இயற்றியவர் பகவந்தராயமகி. இவர் தஞ்சை மராட்டிய மன்னன் இரண்டாம் சகஜியின் அரசவைப்புலவர். இவரது தந்தை கங்காதரமகி. இவருக்கு மூன்று புதல்வர்கள். இவர்கள் முறையே நரசிம்மராயமகி, திரயம்பகராயமகி, பகவந்தராயமகி ஆவர். இவர்கள் பலநூல்களை எழுதியுள்ளனர்.

சரபராஜ விலாசம்:

இந்நூலிலும் முதலாம் சரபோஜியின் காலத்திய செய்திகள் இடம்பெற்றுள்ளன. அவை பின்வருமாறு:

பகையரசர்களின் யானைகள் முட்டி மோதித் திறக்க இயலாதவாறு கோட்டைக் கதவுகளில் கூர்மையான ஆணிகள் வெளியில் நீட்டிக்கொண்டிருந்தமையாலும், ஆங்காங்கு எப்பொழுதும் போர்வீரர்கள் குழுக்குழுவாக வாள், கேடயம், வில், அம்பு, ஈட்டி, உலக்கை முதலான ஆயுதங்களுடன் காவல் புரிந்தும், பயிற்சியும் பெற்றுவந்தமையாலும் தஞ்சை நகர் பகையரசர்களால் எளிதில் புகமுடியாததாக விளங்கியது. ஆனால் புலவர்களும், கலைஞர்களும் அரண்மனைக்குள் சென்றுவர எவ்விதத் தடையும் இருந்ததில்லை.

நகரின் வீதிகளில் பன்னாட்டுக் குதிரைகளும், மனிதர்களும், தேர்களும், பல்லக்குகளும் வந்து சென்ற வண்ணம் இருந்தமையாலும், மலர்களும் மாவிலைத்தோரணங்களுடன் விளங்க எப்பொழுதும் இடையறாத் திருவிழாக்கோலம் பூண்டிருக்கும் நிலையையும் காணமுடிந்தது. தஞ்சையைச் சுற்றிலும் விவசாயிகளுக்குக் குடியிருப்புகள் அழகுற அமைத்துக் கொடுக்கப்பட்டன.

அனங்கவிஜயபாணம்:

இந்நூல் நாடக வகைகளுள் ஒன்று. இத்தகைய பாணங்கள் மற்ற அரசர்களைத் துதிபாடும் இலக்கியங்கள் போலல்லாது, அக்காலச் சமுதாய வாழ்க்கையையும், மக்கள் வாழ்க்கை நிலையையும், தெளிவுபட உணர்த்துகின்றன. தரும சாத்திரங்களில் கூறப்பட்டுள்ள சட்டங்களை மீறிச் செயல்படும் மனிதர்களைப் பற்றிய விபரங்களை இவைபோன்ற இலக்கியங்களில்தான் காணமுடிகிறது.

விழாக்காலங்களில் ஒரு நகரின் தோற்றம் எப்படி இருக்கும் என்பதையும் அவற்றில் மாதர்களின் பங்கைப்பற்றியும் இவற்றிலிருந்து நாம் அறியமுடிகிறது. பெண்கள் சுதந்திரம் எந்த அளவுக்கு அக்காலத்தில் போற்றப்பட்டது என்பதற்கான எடுத்துக்காட்டுகள் நிறைந்து காணப்படுவதும் இவ்வகை இலக்கியங்களில்தான். மேலும் 'அனங்கவிஜயபாணம்' வெளிப்படுத்தும் சமுதாய நிலைகளின் பல்வேறு குறிப்பிடத்தக்க அம்சங்கள் நமது சரித்திரம் மற்றும் சமுதாய ஆய்வாளர்களால் குறிப்பிடப்படாதவை. சமுதாயத்தில் ஏமாற்றுதலும், பொய்யுரையும், கள்ளத்தனமும் எவ்வாறு ஊடுருவியிருந்தன என்பதனை இந்நாடகத்தின் மூலம் எடுத்துக்காட்டுகிறார் நூலாசிரியர்.

மேலும் கலைகளிலும், பொழுதுபோக்குகளிலும் சிறந்து விளங்கியது. சரபோஜி மன்னரது காலம் என்பதற்கான சிறந்ததொரு அத்தாட்சியாக விளங்குகிறது அனங்கவிஜயபாணம் என்னும் இந்நூல்.

பிரபஞ்சாம்ருத சாரராஜரஞ்ஜன புராணம்:

ஏகோஜி தன் தந்தை துளஜாவிடம் ராஜதர்ம சாஸ்திரங்களைக் கற்று அதன் பயனாகத் தானும் மக்களுக்கு பயன்படும்படி சம்ஸ்கிருதமொழியில் பிரபஞ்சாம்ருதசாரராஜரஞ்ஞன புராணம் என்னும் தலைப்பில் ஒருநூல் எழுதினார். அது ராஜதர்மத்தை விளக்குவதாக இருக்கிறது. இந்நூல் சிறுசிறு அத்யாயங்களாக சுமார் எழுபது தலைப்புகளில் உள்ளன. இவைகள் ஓலைச்சுவடியாகவும், காகிதச்சுவடியாகவும் உள்ளன. இவற்றின் வாயிலாக இரண்டாம் ஏகோஜி பல அறச்செயல்களிலும், கலைகளிலும், தர்மங்களிலும் சிறந்து விளங்கினார் என்பதும் மற்றும் பல செய்திகள் இந்நூலின் வாயிலாக அறியமுடிகிறது.

ராஜாராம சரிதம்:

கேசவ பண்டிதரால் எழுதப்பட்டுள்ள 'ராஜாராம சரிதம்' என்ற வடமொழி நூல் வீரசிவாஜியின் குமாரர்களில் ஒருவரான இராஜாராமின் வரலாற்றில் ஒரு சிறு பகுதியைத் தெள்ளத் தெளியக் காட்டுகிறது. 1690ஆம் ஆண்டுக்குச் சில ஆண்டுகள் முன்பிருந்து மராட்டிய வரலாற்றை உள்ளபடி அறிவதற்கு இந்நூல் பேருதவி புரிகின்றது.

இந்நூலாசிரியர் மராட்டிய வீரராக விளங்கிய சத்ரபதி சிவாஜியிடமும் அவருடைய மைந்தர்களான சம்பாஜி, இராஜராம் ஆகியோரிடமும் கருவூலக் காப்பளராகப் பதவி வகித்தவர். புராண இதிகாசங்களில் செம்மையான பயிற்சி உடையவர். எனவேதான் ஒரு மாபெரும் வரலாற்றை அறிஞர்கள் விரும்பியேற்கும் வண்ணம் திட்டமிட்டு அதற்கேற்பச் செஞ்சிமன்னன் ராஜாராமைக் காவிய நாயகனாக்கி, பரமேஸ்வரன், நாரதர், இந்திரன் ஆகியவர்களின் சம்பாஷணை வடிவில் இக்காவியத்தை உருவாக்கியிருக்கிறார்.

சாஹித்ய மஞ்சூஷா:

இவரது பரந்த சாம்ராஜ்யத்தில் பல முஸ்லீம்கள் பெரும்பதவியில் இருந்தனர். இவரது நாட்டில் எல்லா மதத்தினரும் சுதந்திரமாய் இறைவழிபாடு செய்யமுடிந்தது போன்ற கருத்துக்கள் இந்த நூலில் குறிக்கப்பட்டுள்ளன.

சிவபாரத சரித்திரம்:

மராட்டிய சாம்ராஜ்யத்தை நிறுவிப் புகழ்பெற்ற சத்ரபதி சிவாஜியின் சரித்திர நிகழ்ச்சிகளைக் கூறுவது இந்நூல். இந்த நூல் சரஸ்வதி மகால் நூலகத்தில் மட்டுமே உள்ளது. இந்நூலின்கண் விரித்துரைக்கப்பட்டுள்ள செய்திகள் பல. அவற்றின் தொகுப்பொன்றை ஆசிரியர் தந்துள்ளார். பல ராஜாக்களுடைய

சரித்திரங்களும், யானை, குதிரைகளுடைய இலட்சணங்களும், கோட்டை, கொத்தளங்களுடைய இலட்சணங்களும், ராஜாக்களுடைய நீதி முறைகளும், சூரியவம்சத்திலே உதித்தவர்களுடைய கதைகளும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

பர்ணால பர்வத க்ரஹணாக்யானம்:

சத்ரபதி சிவாஜி புனேயின் அருகிலுள்ள 'பர்ணாலா'க் கோட்டையைக் கைப்பற்றிய வரலாற்றுத் தொடர்புடையச் செய்தியைக் கூறுவதே இந்த நூலின் நோக்கம். 1672இல் அல்லியதில்ஷா காலமாகிறார், இவருக்குப்பின் இவரது மகன் சிக்கந்தர் சிறுவனாக இருந்தமையால் ஆட்சிசெய்ய 'கவாஸ்கான்' நியமிக்கப் படுகிறான். இவன் ஔரங்கசீப்பின் அந்தரங்க ஆள். இதனை அறிந்த சிவாஜி மாறுவேஷங்கொண்ட படைகளைப் பர்ணாலா கோட்டைக்குள் அனுப்பி அக்கோட்டையைக் கைப்பற்றுகிறான்.

அனாஜி பண்டித், கொண்டாஜிபர்ஜன், கனோஜி மாமா, மோத்யாஜி மாமா ஆகியோர் கூடையில் ஆயுதங்களுடன் மாறுவேஷமணிந்து செல்கின்றனர். மேலும் முக்கியமான படைகளை அனுப்பிக் கோட்டையை முற்றுகையிட்டும், ஏணிமேல் ஏணிவைத்து படைத்தலைவர்களின் வீடுகளுக்குள் புகுந்தும் அவர்களைக் கைது செய்கின்றனர். இக்கோட்டையின் தலைவனான 'நாகோஜி பண்டிட்' கோட்டையிலிருந்து சென்ற 'பர்னாலாக் கோட்டை'யைக் கைப்பற்றிய செய்தியைச் சிவாஜிக்குத் தெரிவிக்க, சிவாஜி முறைப்படி தெய்வத்தையும், குருவையும் வழிபட்டு, பர்ணாலாக்கோட்டையை கைப்பற்றுகிறான். பின் எதிரிகளின் பாசறையை முற்றுகையிட்டு போர் செய்து வெற்றிபெற்றான் என்ற அரிய பல செய்திகளை இச்சுவடியின் வாயிலாக அறியமுடிகிறது.

முடிவுரை:

இந்நூலகத்தில் சம்ஸ்கிருதப்பிரிவில் காணப்படும் சுவடிகள் பல வரலாற்றுச் சின்னங்களாகத் திகழ்கின்றன எனில் மிகையில்லை. மராட்டியரின் வரலாற்றினை முறைப்படி தீட்டுவதற்குக் கல்வெட்டுக்கள், நாணயங்கள், ஆவணங்கள் போன்றவற்றை அடிப்படையாகக்கொள்வது போன்றே அவர்தம் காலப் பன்மொழி இலக்கியங்கள் வரலாற்றுச் செய்தி பொதிந்தவையாக இருப்பினும், அந்நாளைய மக்களின் வாழ்க்கை முறைகளையும் விளக்குவதாக அமைகின்றன.

சரசுவதி மகால் சுவடிகளில் சம்பூநூல்கள்

முனைவர் **ஆ. வீரராகவன்,**
சமஸ்கிருதப்பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

தரணிபுகழ்த் தஞ்சை சரசுவதி மகால் நூலகச் சமஸ்கிருதத் துறையில் காவியம் போன்ற பல்வேறு வகைச் சுவடிகள் காணக்கிடைக்கின்றன. காவியம் என்பது எக்காலத்திலும் யாவருக்கும் இதமுரைக்கவல்லது. காவியம் படைப்பதே கவிஞர்களின் தலையாய கடமை. அவ்வாறு தோன்றுகின்ற காவியங்கள் புகழ்ச்சியையும் பொருளையும் பெற்றுத்தருகின்றன.

காவியத்தின் வகைகள்:

காவியம் த்ருச்யம், சிரவ்யம் என இருவகைத்தானது.

த்ருச்ய ச்ரவ்வத்வபேதேன புன: காவ்யம் த்விதாமதம் !
த்ருச்யம் தத்ராபிநேயம் தத்ரூபாரோபாத்து ரூபகம் ! !
ச்ரவ்யம் தத்காவ்யமாஹு: யந்நேக்ஷதே நாபிநீயதே!
ச்ரோத்ரயோரேவ ஸுகதம் பவேத்ததபிஷட்விதம் !!

என்று காவிய வகைகளையும், அதற்கான விளக்கத்தையும் முறையே நாட்டிய சாஸ்திரம், சரசுவதி காண்டாபரணம் ஆகிய நூல்கள் தெரிவிக்கின்றன. ‘த்ருச்யம்’ என்பது தத்ரூபமாக அபிநயம் பிடித்துக் காட்டுவதால் ‘ரூபகம் ’ என்ற மற்றொரு பெயரையும் பெறுகின்றது. அபிநயம் அதன்வழி காட்சிகள் யாவுமின்றி செவிப்புலனை மட்டுமே மகிழச்செய்விக்கின்றது சிரவ்யகாவியம்.

சிரவ்ய காவிய வகைகள்:

சிரவ்யம் து த்ரிவிதம் க்ஞேயம் கத்யபத்யோபயோத்மனா என்றவாறு சிரவ்ய காவியம் மூவகைத்தானதை மந்தாரமரந்த சம்பூ தெரிவிக்கின்றது. உரைநடையையும், செய்யுள் நடையும், இவ்விரு நடையும் கலந்து விளங்கும்

நடை என்பதே மேற்கூறிய வாக்கியத்தின் பொருளாகும். "சந்தோ பந்தபதம் பத்யம் கத்யதே சந்தஸா வினா" என்ற காவியாதர்சத்தின் கூற்றுப்படி சந்தஸ் சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள விருத்தங்களின் பால் அமைவது 'பத்யம்' என்றும், சந்தஸ் சாஸ்திரத்தைப் பயன்படுத்தாமல் கோர்வையாக நீளமான வாக்கியத்தை அமைப்பது 'கத்யம்' என்றும் அழைக்கப்படுகிறது. பத்யமும் கத்யமும் கலந்த மிச்ர நடை 'சம்பூ' எனப்படுகிறது.

சம்பூகாவியத்தின் பெருமை:

உரைநடையும் செய்யுள் நடையும் கலந்த மேற்கூறிய சம்பூ நடையில் காளிதாஸன் இயற்றிய குமார சம்பவ நூலைக் கருப்பொருளாகக் கொண்டு மன்னர் சரபோஜியால் உருவாக்கப்பெற்றது குமாரசம்பவ சம்பூ என்னும் நூல். அந்நூலில்,

பத்யம் ஹ்ருத்யமபீஹ கத்யரஹிதம் தத்தே ந ஹ்ருத்யாஸ்பதம்
கத்யம் பத்யம் விவர்ஜிதம் ச பஜதே நாஸ்வாத்யதாம் மானஸே!
ஸாஹித்யம் ஹி தயோர்த்வ யோர பிஸுதா-மாத்வீகயோர்யோகவத்
ஸந்தோஷம் ஹ்ருதயாம்புஜே விதனுதே-ஸாஹித்ய வித்யாவிதாம் !!

என்பதாகச் செய்யுளும் உரைநடையும் ஒருங்கே விரவியமைக்கும் நடையினை அமுதத்தில்தேனைவிட்டுப் பருகுவது போன்ற மகிழ்ச்சியை ஏற்படுத்தும் எனப்புகழ்ந்துள்ளார்.

சம்பூ காவியத்தின் உருவ அமைப்பு:

சம்பூ காவியம்

"கத்ய பத்ய மயஸ்ஸாங்கா ஸோச்வாஸா கவிகும்பிதா !
உக்தி ப்ரத்யுக்தி விஷகம்ப சூன்யா சம்பூருதாஹ்ருதா" !! .

என்றவாறு உரைநடை, செய்யுள்நடை ஆகியவற்றுடன் பகுதிகளின் பெயராக அங்கம், உச்வாஸம் என்பதைக் கொண்டும், மொழி மறுமொழி விஷ்கம்பம் (அடுத்தகாட்சி தொடங்குவதற்கு முன் நடந்து முடிந்த காட்சியினை நாடகத்தில் சிறிதே படம்பிடித்துக் காட்டப்பெறும் நிகழ்ச்சி) ஆகியவை அற்றதாயும், சிறந்த வருணனைகளோடும் அமைந்திருக்கவேண்டும் என்பதை சம்பூ காவ்யகா ஆலோசனாத்மக அத்யயன் தெரிவிக்கின்றது.

சுவடி தரும் சம்பூ நூற்செய்திகள்:

பல்வேறு வகையான, சம்பூ நூல்கள் சுவடி வடிவில் சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூரில் காணப்பெறினும் சோழசம்பூ, குமாரசம்பவ சம்பூ, யுத்தகாண்ட சம்பூ, மாருதி விஜய சம்பூ ஆகிய நூற்கள் தரும் செய்திகளை மட்டும் சிறிது பார்ப்போம்

சோழசம்பூ:

இந்த சம்பூ காவியம் விருபாக்ஷகவியால் இயற்றப்பட்டது· விருபாக்ஷகவியின் காலம் 17ம் நூற்றாண்டு. சோழசம்பூ என்னும் இந்நூலில் குலோத்துங்க சோழனைக் (கி.பி.1070-1137) குறித்த வருணனையும், அவனது சிவ பக்தியும் சிவபெருமானைக் காண குபேரர் தஞ்சை வருகையும், குலோத்துங்கன் மேற்கொண்ட ஆலயத்திருப்பணிகளும், குலோத்துங்கன் கோமளாங்கியை மணத்தலும், தேவசோழனை மகனாகப் பெற்றெடுத்தாலும், தேவ சோழனின் திருமணம், பட்டாபிஷேகம், குலோத்துங்க சோழன் சுவர்கமடைதலும் ஆகிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. இந்த சோழ சம்பூ பிருகதீசுவரமாகாத்மியத்தின் 4-8 வரையிலான அத்யாயங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டதாகும்.

இந்நூலில் குலோத்துங்க சோழன் 90 ஆண்டு காலமும், தேவசோழன் 60 ஆண்டு காலமும் வாழ்ந்த குறிப்பு காணக்கிடைக்கின்றது. இந்நூலிற்கு அடிப்படையாக விளங்கும் பிருகதீஸ்வர மகாத்மியம் சிவபார்வதி உரையாடல் வடிவில் அமைக்கப்பெற்றுள்ளது.

குமாரசம்பவ சம்பூ:

இந்த சம்பூ காவியம் தஞ்சாவூரை ஆண்ட மாமன்னன் 2-ஆம் சரபோஜியால் இயற்றப்பட்டது. சரபோஜி மன்னர் தஞ்சையை ஆண்ட காலம் 1800-1832 வரை. இவன் சம்ஸ்கிருதத்திலும் மராட்டியிலும் புலமை பெற்றவன். இவனது அரசவையில் பன்மொழிப் புலவர்கள் இடம்பெற்றிருந்தனர்.

இரண்டாம் சரபோஜி மன்னர் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தைப் பேணிப்பாதுகாத்தவராவார். இவன் ஸம்ஸ்க்ருத நூல்களைச் சேகரிப்பதிலும், விலைக்கொடுத்துப் படியெடுப்பதிலும் நிறையச் செல்வத்தை செலவிட்டிருக்கிறான். இவ்வாறு பரிசிரமபட்டு இந்நூலகத்தை வளர்த்ததனால் சரபோஜி சரசுவதி மகால் என்று விளங்கக் காரணமாயிற்று இந்நூலகம். இவர் ஸம்ருதிஸார ஸமுச்சயம், ஸ்ம்ருதிஸங்கிரஹம், முத்ராராக்ஷஸசாயை, குமார சம்பவ சம்பூ போன்ற நான்கு நூல்களை இயற்றியுள்ளார்.

குமாரசம்பவ சம்பூ என்னும் நூல் சரளமான சம்ஸ்க்கிருத நடையில் மன்னரால் இயற்றப்பட்டுள்ளது. இந்நூல் காளிதாஸரால் இயற்றப்பட்டு விளங்கும்

குமாரசம்பவக்கதையினை ஆதாரமாகக்கொண்டு திகழ்கிறது. சரபோஜி மன்னரும் இந்நூலை இயற்றுகையில் போஜராஜனின் நடையை அனுசரித்து உள்ளார். குமாரசம்பவ சம்பூ மொத்தம் நான்கு ஆச்வாசங்களைப் பெற்றுள்ளது. அதில் முறையே பார்வதியின் தோற்றம், காமதகனம்,, பார்வதியின் தவசு, பார்வதி பரிணயம் ஆகிய செய்திகள் விவரிக்கப்படுகின்றன.

யுத்த காண்ட சம்பூ:

அனுமன் இலங்கை சென்று திரும்பி ராமனை அடைந்து சீதையைக் கண்டேன் என்று அடையாளங்கள் கூறி விரிவாக வர்ணனையும் தன் கடல் கடந்து சென்ற அனுபவத்தையும் விவரிக்கின்றான். ராமனும் சீதை அபகரணம் தொடங்கி துக்கஸாகரத்தில் மூழ்கியவனாய் அனுமன் வந்த பின் இலங்கை நகர் போகின்றான்.

அதன்முன் கடற்கரையில் ராமன் கையை தலையணையாக வைத்து பூமியில் படுத்து உறங்கினான். அவனே முன்னர் ராஜபவனத்தில் பஞ்சு மெத்தையில் உறங்கினவன் என்று ராமனின் துயரை வருணிக்கிறான்.

இதற்கு ஆதாரம் கூறும் வண்ணம் அமைந்துள்ளது குலசேகராழ்வாரின் பாட்டு

மெல்லணை மேல் முன் துயின்றாய் இன்று
இனிப் போய் வியன் கானமரத்தின் நீழல்
கல்லணை மேல் கண்துயிலக் கற்றனையோ
காகுத்தா கரிய கோவே.

இதுபோல பல சுவையான செய்திகளை இந்த சம்பூவில் காணலாம்.

இந்த நூலின் ஆசிரியர் கனச்யாமன். கனச்யாமனுக்கு ஆர்யகன் என்று பெயருண்டு. இவன் கமலா, காசீமகாதேவன் என்பவருக்குப் புதல்வராய் பிறந்தவன் கௌண்டோ பாலாஜி என்பது இவன் பாட்டனார் பெயர். கனச்யாமனுக்கு ஈசன் என்ற சகோதரன் இருந்தான். இந்த ஈசன் துறவியாகி சிதம்பர குரு என்று தேவப்பட்டணத்திலேயே இருந்துவிட்டான். கீழ்க்காணும் சுலோகம்,

தனுருசி யோ ந ச்யாம: கவினா ஸ யதி கனச்யாம: !
கவனே கமனச்யாம: கிமசூயாபிர்முதைவ ந ச்யாம: !

என்றபடி கவியின் பெயரையும் புகழையும் சிறப்பித்துக் கூறுகிறது. இவனது மனைவியர் சுந்தரி, கமலா என்பவர்கள் இவ்விருவரும் புலமை வாய்ந்தவர்கள். இவ்விருவருமாக இயற்றிய சுந்தரீகமலீயம் என்ற வித்தசாலபஞ்சிகையின் உரைநூல் நமக்குக்கிடைக்கின்றது.

கனச்யாமனுக்கு இலக்கியத்தோடன்றி ராஜதந்திரத்திலும் புலமையிருந்தது. இவன் துக்கோஜியின் மந்திரி (கி.பி.1728-1735)யுமாவான். கனச்யாமன் தனது 22வது வயதில் நவக்ரஹசரித சட்டகம் எனும் நாடகத்தையும்,

26-ல் மதன ஸஞ்சீவன பாணத்தையும், ஒருசமயம் ராமநவமியின் ஒரே ராத்திரியில் உத்தரராம சரித உரையும் ப்ரபோதசந்த்ரோதயம் போல் பிரசண்ட ராகூதயம் நாடகமும் இயற்றியுள்ளான்.

கனச்யாமன் காவியங்களாக பகவத்பாத சரிதம், வேங்கடேசசரிதம், பரசங்கலீலார்ணவம், ஸன்மணிமண்டலம், அன்யாபதேசசதகம், பஞ்சஸ்தல மான்மியம், அபோதசுதாகரம் (சிலேடைக்காவியம்) முதலியவற்றை இயற்றியுள்ளான். இதில் கிருஷ்ணன், நளன், ஹரிச்சந்திரன் ஆகியோரின் மூன்று கதை இடம்பெற்றுள்ளது. கலிதூஷணம் இது சம்ஸ்கிருதமும், பிராகிருதமும் ஆக உள்ள ஒரு காவியமாகும்.

இவன்தன் 12-ம் வயதில் ராமாயணசம்பூ, என்ற பெயரில் போஜனின் நூலைப் பூர்த்திசெய்ய யுத்தகாண்ட சம்பூ எழுதியிருக்கிறான். அவன் இயற்றிய நாடகங்கள் கணேசசரிதம், குமாரவிஜயம், அனுபவசிந்தாமணி, ஆனந்த சுந்தரீ, பவானீ சரிதம் என்பன. ரஸார்ணவம் என்பது அலங்காரவகையைச் சாரும்.

கனச்யாமன், சாகுந்தலம், உத்தரராமசரிதம், பிரபோதசந்திரோதயம், சண்டகௌசிகம், மகாவீர சரிதம், வேணீசம்ஹாரம், ஸப்தஸதீ, விக்ரமோர்வசீயம், விதர்பராஜகிருத சம்பூ ராமாயணம், நீலகண்ட சம்பூ, பாரத சம்பூ, கவிராக்ஷஸம், காதம்பரீ, வாஸவதத்தம், தசகுமாரசரிதம் ஆகிய நூல்களுக்கு உரை எழுதியுள்ளான்.

இப்படியாக இவன் ஸம்ஸ்கிருதத்தில் 64, பிராகிருதத்தில் 20, வேறு மொழிகளில் 25 நூல்களையும் எழுதியுள்ளான். கனச்சயாமனுக்கு இரண்டு ஆண் பிள்ளைகள். 1) சந்திரசேகரன், 2) கோவர்த்தனன். சந்திரசேகரன் கனச்யாமனின் டமருகத்திற்கும் பிரசண்டராஹூதயத்திற்கும் உரை எழுதியுள்ளான். கோவர்த்தனன் பிறவிக் குருடன். அவன் கடகர்ப்பரகாவியத்திற்கு உரை எழுதியுள்ளான். அதில் தன் தந்தையைப் புகழ்ந்துள்ளான்.

மாருதி விஜய சம்பூ:

இராமன் லக்ஷ்மண, சுக்ரீவாதியர் புடைசூழ அயோத்தியை ஆண்டு வருகிறான். அது சமயம் அகஸ்தியர் அவைக்கு வருகைதந்து மாருதியின் சரிதமுரைக்கிறார். அந்த சரிதம் மாருதி விஜயம் ஆகும். அது ஓர் இரவில் (இரவின் நேரத்திற்குள்) அனுமன் நடத்திய அற்புத சம்பவத்தை உள்ளடக்கியது.

அகஸ்தியர் கூறுகிறார் (ராமனிடம்), நேரம் கிருஷ்ணபக்ஷ சதுர்தசி இரவு. போரில் நிர்கதியான ராவணன், ராமனை எப்படியாவது வெல்ல வேண்டி பாதாள லோகமாயாவியான மைராவணனை அழைக்கின்றான்.மைராவணன் பிரம்மாவின் வரத்தால் தன்னை நினைப்பவரை யாரென்று அறியும் திறம் பெற்றவன். ராவணன் நினைத்ததால் அவனுக்கு உதவ வந்தான். ராமாதியர் அயர்ந்து தூங்குவதால் அனுமன் அவர்களை வால் கோட்டையுள் வைத்து ரக்ஷித்தான். மைராவணனுக்கு

ராமன் இருப்பிடம் தெரியாது. தன் பணியாளர்களை அனுப்பியும் அறியாது விபீஷணன் மூலம் அல்லது விபீஷணன் தானே என்றறிந்து அனுமன் வாலை மேற்தூக்கியதின் மூலம் உள்நுழைந்து மோஹசூர்ணத்தைப் பயன்படுத்தி இராமலக்ஷ்மணாதியரைக் கவர்ந்து சென்று பாதாளத்தில் காளிகோயிலில் பலியிடும் பெட்டியினுள் அடைத்து வைத்துவிடுகிறான். பின் தீங்கறிய விபீஷணன் மூலம் ஓர் ஏரியின் நடுவில் உள்ள பெரிய தாமரைத் தண்டின் மூலம் பாதாள மார்க்கத்தை அறிந்தான் அனுமன். அனுமன் தன்னுருவைச் சுருக்கி தாமரை மேல் அமர அனுமன் தூக்கி எறியப்படலும், ஆங்கே பின் எழுந்து வரக்கண்டு அதனுடன் போரிடலும், அனுமன் கோபமடைதலும், ஏமாற்றமடைதலும், அனுமனும் விபீஷணனும் மறுமுறையாகக் காரிருளில் 30 யோஜன தூரம் சென்று பெரிய ஏரியை அடைதலும், அனுமனின் வச்வரூபம்கண்டு இவர்தான் தன் தந்தை என மீன் அரசன் தீர்மானித்து தாமரை நடுவில் உள்ள பாதாள நகரைக் காண்பித்தலும் முறையே நடைபெறுகின்றது. அனுமன் வான் வழிச்செல்லுங்கால் அவனது வியர்வையை உண்ட திமிங்கிலத்திற்குப் பிறந்தவன்தான் மேற்கூறிய மீன் அரசன். ஒருசமயம் துர்தண்டி என்பவள் தண்ணீர் எடுத்துச்செல்லக் கொண்டுவந்த குடத்தினுள் தன்னுருவை சிறியதாக்கி அதனுள் புகுந்து சென்று பரம்மதான் உன் மகன் மைராவணனைப் போரிட்டு முடியாமல் வண்டுருவாய் வரக்கண்டு வண்டுகளை மீதமின்றியே நசுக்கி பின் மைராவணால் துர்தண்டியின் காலில் இடப்பட்ட விலங்கையும் அகற்றி சிறை பிடித்து வைக்கப்பட்ட துர்தண்டியின் மகன் நீலமேகனுக்கு நீலகேசியை மணம் முடித்து நீலமேகனை மைராவணுக்குப்பின் சூட்டி ராமலக்ஷ்மணரை விடிவதற்குள் யுத்தகளத்தில் கொணர்ந்து சேர்த்தான் அனுமன்.

இவ்வாறாக கட்டுரையின் விரிவுக்கஞ்சி ஒருசில சம்பூகாவியங்களே இங்கு விவரிக்கப்பெற்றன. இன்னும் பற்பல காவியங்களை இம்மாதிரி உத்தியைக்கொண்டு தாமாகவே அறிந்து மகிழலாம்.

சம்பூ காவியங்களின் பயன்கள்:

சம்பூ காவியங்கள் , உரைநடை மற்றும் செய்யுள்நடைக் காவியங்களைக் காட்டிலும், காலத்தாற் பிற்பட்டதாக இருக்கலாமெனத் தோன்றுகிறது. இவ்வகை எந்த ஒரு பெரிய காவியங்களையும் சுருக்கி வரைவதற்கு உதவியாக உள்ளது. இதற்கு உதாரணமாகாப் பாரதசம்பூ, இராமாயணசம்பூ, குமாரசம்பவ சம்பூ ஆகிய நூல்களைக்கொள்ளலாம்.

ஒரு பெரிய காவியத்தினை நாம் முழுமையாகப் பயின்று பயன்பெற வேண்டுமாயின் நமது வாழ்நாள் முழுதும் செலவழித்தாலும் போதாது. குறுகியகால கட்டத்திற்குள் அந்நிலையிலும் நூல்களை சமஸ்கிருத ஆர்வலர்கள், அபிமானிகள் யாவரும் படித்துப் பயனடைய சம்பூகாவியங்கள் பெரிதும் துணைபுரியும் என்பதில் ஐயமில்லை.

சரசுவதி மகால் சுவடிகளில் சம்பூ நூல்கள்

சம்ஸ்க்ருத பிரிவு தரும் சம்பூ நூற்சுவடிகள்

1. उत्तरचम्पूः- Bhagavanta (Utharakanda only) B. 4682/D. 4028

2. उत्तरचम्पूः - (B. 4694/D.4029)

3. कुमारसम्भवचम्पूः - Sarabhoji Raja (B. No. 4711/D.4030)

4. केरलाभरणम् - Ramachandra, Dikshita, (B. 5041/D.4031)paper, Complete.

5. ,, (B. 10650/D.4032)

6. ,, (B. 10566/D.4033

7. ,, B. 10657/D. 4034

8. गौरीमायूरमाहात्म्यचम्पूः - Appadikshita B. 10189/4035

9. त्रिपुरविजयचम्पूः - J. C. 570/D. 4036 By Nrsimhamatya

10. त्रिपुरविजयचम्पूः - B. 10186/D. 4037 By Atiratrayajram

11. त्रिपुरदहनचम्पूव्याख्या - B. 10318/D. 4038 By Nityamrtayati

12. त्रिपुरदहनचम्पूव्याख्या - B. 10318/D. 4038 By Nityamrtayati

13. नलचम्पूः - B. 4714/D.4040 Trivikramabhatta

14. ,, B. 4715/D.4041

15. ,, B. 4724/D.4042

16. ,, B. 4726/D. 4043

17. ,, B. 4726/D. 4044, J. L. 571/D. 4045

18. ,, J. L. 572/D. 4046

19. ,, T. S. 677/D. 4047

20. ,, B. 4716/D. 4049

21. नलचम्पूव्याख्या -		J. l. 573/D.4050 by	
22. ,,		J. L. 574/D. 4051	
23. नीलकण्ठविजयचम्पूः -		B. 4712/D. 4052	by Nilakantadikshita
24. ,,		B. 4713/D. 4053	,,
25. ,,		J. L. 575/D. 4055	,,
26. ,,		J. L. 576/D.4055	,,
27. ,,		S.k. 213/D.4056	,,
28. ,,		T. S. 692/D. 40000051	,,
29. ,,		J. L. 577/D. 4058	,,
30. ,,	व्याख्या	J. l. 518/D.4059	Ghanasyama
31. ,,	,,	J. L. 579/D. 4060	Venkatesa
32. ,,	,,	J. L. 580/D. 4061	,,
33. ,,	,,	J. L. 581/D.4062	,,
34. नृसिंहचम्पूः		J. L. 4729/D.4063	दैवज्ञसूरिः
35. ,,		J. L. 582/D. 4064	Daivanja
36. ,,		B. 4727/D. 4065	Sankarshama
37. नृसिंहचम्पूः		B. 4728/D. 4066	Kesavabhatta
38. भागवतचम्पूः		B. 4709/D. 4067	Chidambara
39. ,,		B. 10106/D. 4068	,,
40. ,,		B. 10107/D. 4069	Ramabhadra
41. ,,		B. 12369/D. 4070	Rajanatha
42. भारतचम्पूः		B. 4695/D. 4071	Anantabhatta

43.	,,	B. 4696/4072	,,
44.	,,	B. 10098/4073	,,
45.	,,	B. 10099/D. 4074	,,
46.	,,	B. 10100/D. 4075	,,
47.	,,	B. 10101/D.4076	,,
48.	भारतचम्पूः	B. 10102/D. 4077	Anantabhatta
49.	,,	B. 4072/4078	,,
50.	,,	J. L. 583/4079	,,
51.	,,	B. 10103/4080	,,
52.	,,	B. 15536/4081	,,
53.	,,	J. L. 584/4082	,,
54.	,,	T. S. 689/4083	,,
55.	,,	B. 10105/4084	,,
56.	,,	T. S. 690/D. 4085	,,
57.	,,	B. 4699/D. 4086	,,
58.	,,	J. L. 585/4087	,,
59.	,,	4088	,,
60.	,,	4089	,,
61.	,,	4090	,,
62.	,,	4091	,,
62	,,	4092	,,
63.	,,	4093	,,

64.	,,	4094	,,
65.	,,	4095	,,
66.	भा. च. व्या	B. 4705/4096	by Nrsimhadhaya
67.	,,	4097 to 4105	,,
68.	मारुतिविजयचम्पूः	A. 338/4105	Raghunatha
69.	रामायणचम्पूः	D. No. 4107-414	Boja & Lakshmana
70.	रामायणचम्पूव्याख्या	4142	by Ramachandra Budha
71.	रामायणयुद्धकाण्डचम्पूः	D. 4143, 4144, 4145	by Ghanasyama
72.	वसुचरित्रचम्पूः	D. 4146/4147	by Kalahastika
73.	विक्रमसेनचम्पूः	A. 4148,4149	by Narayana
74.	विश्वगुणादर्शचम्पूः	A. 4150`51, 52, 53-4154, 55, 56, 57	by Venkatacharya
75.	वेङ्कटेशचम्पूः	4158	by Dharmaraja
76.	शिवचम्पूः	D. 4159	कविवादिशेखरः
77.	शिवविलासचम्पूः	D. 4160	विरूपाक्ष
78.	श्रीनिवासचम्पूः	D. 4161	by Srinivasa
79.	चोलचम्पूः	D. 4213	by Virupaksha

முதலியன.

FORM - IV

(See Rule 8)

1.	Place of Publication	Thanjavur
2.	Periodicity of its Publication	Four issues a year
3.	Printer's Name	T. M. S. S. M. Library Society, Thanjavur - 613 009
	Nationality	Indian
	Address	T. M. S. S. M. Library Society, Thanjavur - 613 009
4.	Publisher's Name	M. VEERA SHANMUGHA MONI, I. A. S., District Collector and Director, T. M. S. S. M. Library Society, Thanjavur - 613 009
	Nationality	Indian
	Address	Thanjavur Maharaja Serfoji's Sarasvati Mahal Library Society, Thanjavur - 613 009
5.	Editor's Name	R. Subramanian, M. A.,
	Nationality	Indian
	Address	R. Subramanian, M. A., Administrative Officer, T. M. S. S. M. Library Society, Thanjavur - 613 009
6.	Name and Address of Individual who owns the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital.	T. M. S. S. M. Library Society, Thanjavur - 613 009

I, M. VEERA SHANMUGHA MONI, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

M. VEERA SHANMUGHA MONI, I. A. S.,
District Collector and Director,
Sarasvati Mahal Library,
Thanjavur - 613 009

Date : 24-9-2005